ஶ்ரீ అభీష్టవరదాయనమః.

விக்கிரஹாராதனை,

இஃது,

திரிசிராப்புரி சைவஸமாஜத்தில்

சுபானு ௵ ஐப்பசியில் பிரசங்கிக்கப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

பிடியதனுருவுமை கொளமிகுகரியது
வடிகொடுதனையடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவர அருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறையிறையே

திருச்சிற்றம்பலம்.

PRINTED AT THE A. L. V. PRESS

POPHAM'S BROADWAY

MADRAS.

1883.

சிவமயம்.

ஸ்ரீவைதிகவாரணாயநம:

விக்நஹராராதனை.

ஞாங்கரேந்து நளினமலர்க்கரக்
காங்கயற்குமுன் றோன்றுங்கரிமுகன்
வீங்குபாவவினை கெடுத்தாட்கொள்வான்
ஓங்கவென்றலை சூடிலோப்பாதமே.

அட்டமகை வடிவுடையான் பூமனைப்போன்
றகல்வரியா னப்பாறுக் கப்பாலானுன்
கட்டவிழ் கூவிளமாலைச் செல்வனன்றிக்
கனயவலறும் பிரியாப்பிரியா மாபன்கூற்றை
பட்டவினைச் சொரிபதந்தா வுள்ளத்தாறு
மடிபணியோ னம்பிகா நாதன்பெற்ற
இட்டனெவன் சுந்தரப் பேரெழுதையாவான்
சேவடியைச் சென்னிமிசைச் சேர்த்துவாழ்வாம்.

சபையார்களே !

இன்று ஒரு பெரிய விஷயத்தைப் பற்றிப்பேச எ... றேம். அவ்விஷயத்தை நினைக்குந்தோறும் அதின் பெ... யும் அதையெடுத்தாள்வதிலெமக்குள்ள அற்பவல்லமையு எம்மனதில்தோன்றி அச்சத்தையே மேலுமேலும்விளைக்கின்றன. பெரியவர்களாகிய உங்களது வெண்ணிதான விசேஷ... தாலும் உறையுணர்விருந்த ஒருவனின் திருவருளாலும் எம்மா லியன்றமட்டில் கம்பீரமாய் பிரஸங்கிக்க யத்தனிக்கிறோம். இப்பிரசங்க அருமையையாரேனும் அறியாவிடில் அவர்கள் ... விஷயத்தை எடுத்தாள்வதில் எமக்குசக்திபோதாதென்... தபிக்க வேண்டியதேயொழிய இவ்விஷயத்துச்சேஷ்...

கற்பிக்கக்கூடாது. ஏதேனும்தெரியாவிடில்தெரிந்துகொள்ள வேண்டிய முறையுடன் தெரிந்துகொள்ளலாம். இன்றேல் ஸ்வயமாக நோடீஸ் போட்டுக்கொண்டெங்கேனும் பிரஸங்கம் செய்யலாம். பிரஸங்கம் முடிவுபெறும்வரையில் எவ்விதச் சந்தடியும் செய்யாவண்ணம் பிரார்த்திக்கிறோம்.

விக்ரஹ ஆராதனம் செய்வது பிசகோ அல்லது நியாயமோ என்பதைஇன்றுசொல்லப்போகிறோம். விக்ரஹஆராதனமென்பது உலகத்தில் என்னபொருளில் ஸாதாரணமாய் வழங்குகிறதென்றுபார்க்கும்போது, பிரதிவிசம்பந்தமானஒருபதார்த்தத்தால், அதாவது, கல், மண், மரம், முதலியவற்றால்அமைந்த உருவத்தை ஸர்வலோக நமஸ்க்ருதனை கடவுளாக எண்ணி ஆராதிப்பது என்றுபுலப்படுகிறது; அப்படிச்செய்யுமாராதனம் நியாயமா? அல்லது அநியாயமா? என்று விசாரிக்கவேஇப்போது தொடங்குகின்றோம்.

விக்ரஹம் என்னும் ஸம்ஸ்க்ருத பதத்துக்கு பிரித்தல்என்று அர்த்தம். வியாகர்ணத்திலுள்ள, விக்ரஹம், ஸமாஸம், முதலியபாகுபாடுகளறிந்தோர்க்கு இது நன்றாய் விளங்கும். அல்லாமலும் தேசவிக்ரஹம், ஸந்தி விக்ரஹம், என்பனவாதி உலகவழக்கங்களறிந்தோர்க்கும் இவ்வுண்மை தெரியாமற்போகாது. பிரித்தல் என்றால் ஒன்றினின்றும் மற்றொன்றை வை ..த்தல், அல்லது வேறுபடக்கூறல் என்றேபொருள் ..ம. ஆதலாலிங்கு, எதினின்றும் எதைப்பிரிதல், யார்பிரித்தல், ஏன்பிரித்தல், எப்படிப்பிரித்தல்என்பனவாதிபலகேள்வி ..பிறக்கின்றன. நமதுவிரோதிகளோ, உண்மையான கட..ளைத்தமது அக்ஞான விசேஷத்தால், கல்லாகவும், மண்ணா ..வும் எண்ணி, அக்ஞானிகள் பிரித்துச்செய்யும் ஆராதனமே, விக்ஹராராதனமென்பார்கள். இப்படிச்சொல்வது ஏலாது! ஏ.. !! கல்லாகவும், மண்ணாகவும், கடவுளை, இவர்கள்அக்ஞா..ன்று கொண்டிருப்போர் ஆராதிப்பதுஉண்மையானால்,

ஊரிலுள்ளஎல்லாப்பொம்மைகளுக்கும் ஆராதனம் வேண்டும்,
எல்லா உருவங்களுக்கும் ஆராதனமில்லாது ஒரேமாதிரியா
ன உருவங்களிலேயே ஆராதனம் நடந்துவருவதால் செய்யு
மாராதனம் கல்லுக்கேனும், மண்ணுக்கேனும், கட்டைக்கே
னும் அன்னியஉருவங்களுக்கேனுமில்லையென்பதுஸ்பஷ்டம்.
இந்தப்ரத்யேகமான உருவங்களைமட்டும் வணங்குவதேன்? பிற
வற்றைஒழிப்பதேன்? எனவிசாரிப்பதேஉண்மையைஅறிவி
ப்பதால்அதையோசிப்போம். இந்தஉருவம்யாருடையது என்
னுமவிருவே வெளிப்படலால் அதைவியவஹரிப்பதுஅவசிய
மாயிற்று. இந்தஉருவம், "வேறுவேறுருவும், வேறுவேறியற்
கையும், நூறுநூறுயிர பியல்பினதாகி, ஏறுடையீசனிப்புவனி
யை யுய்யக், கூறுடைமங்கையுந்தானும் வந்தருளி" எனப்
பெரியவர்களால் துதிக்கப்பெற்ற பிரமாணத்தால், அந்தஅந்த
ஆன்மாக்கட்கு, அவரவரது பக்குவத்துக்குத்தகுந்தபடி அநு
கமஞ்செய்ய, அவரவர் நினைந்த உருவோடும், தம்மைவிட்
டெப்போதும் பிரியாத பெற்றியையுடையதயவேயாகிய உ.
லகமாதாவுடனும், தம்காலின்கீழ் ஒதுங்கிநின்று சேவகம்
செய்யும் தர்மமேயாகிய இடபவாகனமுடனாய், பரமன்காட்
டும் திருக்கோலமேயிது வென நன்குவிளங்குகின்றது.
ஆகவே நாம்செய்யமாராதனம், பரமகருணாசாலியான கடவு
ளது திருவுருக்கென்றே ஏற்படுகின்றது, ஆகவே விக்ரஹா
ராதன மென்பது, உண்மையில் கடவுளது உருவத்திரு
மேனியை அவரது அறிதற்கரியதன்மையினின்றும் வேறு
படுத்தி, நாம், மோக்ஷஇன்பத்தை முன்னிட்டு ஆராதிப்பது
என்று வெளியாகின்றது.

அருவத் திருமேனியோ, இத்தன்மையதென நினைக்கவு.
சொல்லவும் அரியதாய் "சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும்படா அன், கண்முதற்பு
லற் காட்சியுமில்லான்" என்று புகழப்பெற்ற பரமன்மேனி
யும் ஓர்கோலமாதலால் ஆராதனத்துக்கு அஸாத்யமா
பற்றியும்; அருவமும் உருவம்போலவே பரமன்மேனி

ஒரு திருமேனியென்றும், பரமன் "சிவனுருவருவுமல்லன்" என்றுதிபெரும்பழம் பொருளென்றும், காணப்படுவதுப ற்றியும்; உருவமே நமக்கெல்லாம் நன்றாயுணர்ந்தா ராதிக ஸாதனமாவதாலும்; உருவாராதனமே ஆராதனத்துள் நமக்கு லக்ஷியமாகின்றது. அந்த உருவத்தைமனதாலெண்ணி தி யானிக்கக்கூடாதோவெனில், அது அஸாத்தியமென்று யாவரு மே ஒப்புக்கொள்வார்கள். அதாவது, மனதோ நிமிஷத்துக் கு நிமிஷம் மாறிக்கொண்டும் நுண்ணியதாய மிருப்பதால் எப்போதும் ஒருபாங்காகவே இருக்கக்கூடிய பிரதிபிம்பப் பதார்த்தால் செய்து வணங்குவதே சுலபமாகும். பிரதிபி ம்பந்த பதார்த்தத்தால் செய்யும் வணக்கத்துக்குத் தோஷ ம்சொல்லி வருபவர், மனதை எவ்விஷயத்தில் லக்ஷிய மெனகாட்டுவார்? மனதும்ஜடம், பிரதிபியும்ஜடம்; மனதும் மாறுதலுடையது. பிரதிபியும் மாறுதலுடையது. செய்யும் ஆராதனத்தால் ஸுகமடைவதுமனதுமல்ல, பிரதிபியுமல்ல இவற்றிற்கப்புறபட்ட ஆன்மாதான். அல்லாமலும் மனதாலு ம், பிரதிபிம்பந்த பூஜதேகப்ராங்கிய உருவத்தைத்தானே எண்ணவேண்டும். அப்படியிருக்க விக்ரஹாராதனம் கூடா தென்று எப்படிச்சொல்லலாம்.

கடவுளுக்கு ரூபமே கிடையாது; அரூபமேதான் என்று கிறிஸ்தவர்களும், மகமதியர்களும், பிரம்மஸமாஜத்தாரும், வேதஸமாஜத்தாரும், நேற்று தான்தோன்றித் தம்பிரானுமய் கிளம்பித்தன் பேச்சுசாதுரியத்தால் பலரையும்மயக்கி வசப் படுத்தும் பிரபுவின் அடியாராகிய "ஸமரஸஸமாஜத்தாரும்" சொல்லுவார்கள்.

கடவுள்ரூபத்தைத்தான்சொந்தமாக உடையவரொன்றுயாமு சொல்லவில்லையாகையால்அவர்களதுவழக்குவெற்றிபெருது. விக்ரஹார்த்தமே ரூபம், அரூபம் இவற்றைக் கொள்வதாக ும், நமதுகொள்கை. அம்மட்டில் கூட மேற்படியோர் ஒகிகாரம் செய்யாவிடில் பின்வரும் விஷயத்துக்குப்ப

ரிஹாரம் சொல்லவேண்டிவரும். கிறிஸ்தவர்களது, அபத்தக் களஞ்சியமா யேற்பட்டு அவிசேஷம்நிறைந்த சுவிசேஷமெ ன்னும் புஸ்தகத்தில் சிலுவையில் தொங்கின கிறிஸ்துமறுபடி உயிர்பெற்று கடவுளது வலதுபுறத்திலுட்கார்ந் திருப்பதாக வும், மோசேயென்னும் அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்ட மகாபாதகனுக்குத் தன்சொந்தக்கையால் கடவுள் பத்துக் கட்டளைகளையும் எழுதிக்கொடுத்ததாகவும், கடவுள் சென்னிமலை யிலுட்கார்ந்திருப்பதாகவும், சொல்லியிருப்பதால், ரூபமேயி டையாதென்று கிறிஸ்தவர்கள்சொல்லும் பேச்சு பொய்ப்பே ச்சும் புளுகுருட்டுமாகவேமுடிகின்றது. மேல்,மகமதியர்களது வேதமாகிய கோரான் எப்படிவந்ததென்றால் மகமூதுவுக்கு குகையில் கடவுளே கொடுத்ததாகவும், அப்போதவருடன்நேர நேரப்பேசினதாகவும்,சொல்லியிருக்கிறது; அல்லாமல்பிரதமஸ் ருஷ்டியின்போது கையால் மண்ணைப்பிடித்ததாகவும், மற் றும் உள்ள விபரங்கள் வெளிப்பட்டுக் கடவுளுக்கு ரூபமுண் டென்றும்ஏற்படும்.பிரம்மஸமாஜ, வேதஸமாஜ, ஸமரஸமாஜ ப்ரபுக்களே! நோக்கி,தியானம்பண்ணும்படிச்சொன்ன இடத்தில் [illegible]

[illegible]

என்றும் ஸ்ரீ கைவல்ய உபநிஷத்தின்படியே ரூபத்தையே தியானிக்கச் சொல்லியிருக்கிறதே எனில், குறுணிபதக்காய் விழிப்பார்கள். மேல், ஸமரஸஸமாஜம் என்னும் பெயர்கொ ண்டதால், நன்மை, தீமை, புண்யம், பாவம் என்பவற்றை ஒரேமாதிரியாய் எண்ணுவதுடன் ஆன்மாவை அநித்யமான தென்று சொல்லும் பௌத்தமும், நித்யமென்று சொல்லும் ஆத்மாவாதமும் ஒன்றேயெனக் கொள்ளும் புன்மதவாதிக ளோடு நாம்பேசுவதும் கூடாதாகையால் அவர்கள் நிமித்தம் விரித்தெழுதாமல் விட்டு விட்டேம். இதுகாறும்யாம்கூறிய ந்தள பிரசங்க விசேஷத்தால் கடவுள், ஆன்மாக்கள்நிமித்தம் கொள்ளும் ரூபம்நமக்கு ஆராதிக்க அதிஸுலபமாதலால் [illegible] தைபிருதிவியின் காமரூபவிகாரங்களில் எதாவதென்[illegible]

மைத்து ஆராதிப்பது அவசியந்தான். இனி, இதை, முறையே, சுருதி, யுக்தி, அனுபவமென்னும் மூவாற்றானும் நிலைபெறச்செய்வோம்.

சுருதி, யுக்தி, அனுபவங்களால் வியவஹரிப்பானேனெனில், இவற்றைத்தவிர ஒருவிஷயத்தைஸ்தாபிக்க, வேறு இடமில்லை. இம்மூன்றில் ஒன்றற்கேனும் விரோதமுண்டாகும் பக்ஷத்தில் எடுத்துக்கொண்டவிஷயம் வேறொன்றற்குப் பூர்வபக்ஷமாய்விடும். பூர்வபக்ஷமென்றால், கீழ்ப்படியென்று கருத்து.

சுருதியென்பது பரமகருணாசாலியான கடவுளால், ஆன்மாக்களாகிய வியாதிஸ்தர்களுக்கு அருளப்பட்ட பத்யபரிஹாரங்களாம்; வேதம் நான்குமே இதன் கீழடங்கு மென்றாலும், கடவுளே வேதபாஷ்யமாக உரைத்த ஆகமங்களும் ஜகதுத்தாரணார்த்தம் அவதரித்த சிமான்களாகிய பரமாசார்யர்களுரைத்த திவ்யவாக்குகளான தேவார, திருவாசகங்களும் உலகிலுள்ள பலமதஸ்தர்களாலும் புகழ்ந்துரைக்கப்பெறறு, எம்மதத்தவரிடத்தும், எச்சாதியாரிடத்தும் கொண்டகருணையே அவதாரமென்னும் வண்ணம் விளங்கிய வைரத்தினங்களாகிய பட்டணத்தார் முதலிய பெரியோரின் திருவாக்குகளும் மனு முதலியோர் செய்தருள ஸ்ம்ருதிகளும், வியாஸர்முதலிய தவச்சிரேஷ்டர்கள் செய்தருளிய வேதவிரோதமில்லாத புராண வாக்யங்களும், சுருதியென்பதின் கீழ்ச்சேர்த்து மொத்தத்தில் மேற்கோளென்று பெயர்சொல்லுவோம். மேற்கோளென்றால், மேலான, அல்லது மேலானவர்களுடைய, கொள்கை,அபிமதம் எனப்பொருள்.

யுக்தியென்பது உயர்ந்தோர நுஸம்மதத் தக்கடங்கியும்,உள்ளங்கை நெல்லிக்கனிபோல்விளங்கியும், பசுமரத்தடித்த ஆணிபோல்கேட்போர்மனதில் வேகமாய்ப்பாய நின்றும்உள்ளது.

அனுபவம் என்பது, நெடுநாளாக நல்லவர்களென்றும், பெரியோர்களென்றும் எல்லாராலும் புகழப்பெற்றவர்களால் நிகழ்ந்ததும், வருவதும்அநுபவமக்கம் என்பதே. மருந்

தின் உண்மையை அறிய வைத்யபுத்தகத்தின் அநுமதியும், வியாதி நீங்கினேரது அநுபவமும், மருந்தின் தன்மையின்னது வியாதியின் தன்மையின்னது ஆதலாலிம்மருந்து இந்தவியாதியை நீக்கும் என்று காட்டக்கூடிய நியாயமும் அவசியமாவதுபோல் லிங்காராதனைக்கும், சுருதி, யுக்தி, அநுபவம், அவசியமாயிற்று. ஆதலாலினி அப்படியே கிரமமாய்விசாரிப்போம்.

1. மேற்கோள்—1. சுருதி.

1. பஸ்மஜாபால உபநிடதத்தில், “అహరహర్లింగే విశ్వేశ్వరలింగం త్రియంబకసూక్తైరభిషిచ్య తత్స్నానజలం త్రిః పీత్వా మహాపాతకేభ్యో ముచ్యతే । సశోకమహాదుఃఖముచ్యతే । సర్వావస్థానాత్ తరత్యన్నం ఫలమన్యద్వా యచ్చ శ్రీలింగార్చనం భవతి” । என்றுசொல்லப்பட்டது. இதன் பொருள். தினந்தோறும், ஸர்வலோகநாதனாகிய ஸ்ரீ விசுவேசுவரனது திரு அடையாளமாகிய லிங்கத்தைப் பூஜைசெய்து, அந்த லிங்கத்தில் நமகசமகாதிமந்திரங்களால் அபிஷேகஞ்செய்து, அந்த அபிஷேகஜலத்தை மூன்றுதரம் பானம் செய்தவன் மகா பாதகங்களினின்றும் விடுபடுகிறான். அவன் சோகமடைவதேயில்லை. அல்லாமலும் ஸம்ஸார பந்தத்திலிருந்தும் அவன் தாண்டுகிறான். யாராயிருந்தாலும் ஸரி; அந்த லிங்கபூஜையில்லாமல் சாப்பிடக் கூடாது அன்னமென்றாலும்ஸரி பழமானாலும்ஸரி வேறெதுவானாலும் ஸரி, லிங்கபூஜையன்றியில் புசிக்கக்கூடாது; சிவ நிவேதிதமன்றியில் அவைகளையொருவன் புசிப்பானாகில் அவன் ரேதஸ்ஸையே புசித்தவனாவான், என்பதேதான். ஆதலால்லிங்காராதனம் அதிக விசேஷமானதென்றும், அந்த ஆராதனஞ் செய்யாமலுண்போர் கொடிய பாபஜென்ம மடைவார்களென்றும் பெறப்படுகின்றது. ஆதலாலிப்பேர்ப்பட்ட ஜன்மத்துக்குத் தப்பிடவெண்ண முண்டானால், நீங்கள் லிங்காராதனம் செய்யாதிராதேயுங்கள், வேதவாக்கைக் கேட்டீர்கள். ஜாக்ரதையாயிருங்கள்.

2. ப்ருஹஜ்ஜாபாலத்தில் “ధిగ్భస్మరహితంఫాలం-ధిగ్గ్రామమశివాలయం। ధిగనీశార్చనంజన్మ-ధిగ్విద్యామశివాశ్రయాం.” என்றுள்ளது, இதன்பொருள், நீறில்லாநெற்றியைச்சுடு; சிவாலயமில்லாதகிராமத்தையும் கொளுத்து; சிவபூஜையில்லாத ஜன்மத்தையுஞ்சுடு; சிவஸ்வரூபமில்லாத வித்தையையும் சுடு; என்பதே. இந்தச்சுருதிப்படிக்கும் சிவாலய பூஜா உத்ஸவாதிகளின் அவசியம் வெளிப்பட்டது.

3. சரபோபநிடதத்தில், “యోవామపాదార్చితవిష్ణునేత్ర స్తస్మై దదౌ చక్రమతీవహృష్టః తస్మై రుద్రాయనమో అస్తు.” என்றுசொல்லியுள்ளது. இதன்பொருள் விஷ்ணுவின் கண்ணால் பூஜிக்கப்பட்ட இடது பாதமுள்ளவரும், அதனால் விஷ்ணுவுக்கு ஸன்மானமாக ஸுதரிசன மென்னும் சக்கரத்தை ப்ரஸாதித்தவரும் ஆனருத்திரனின் பொருட்டு நமஸ்காரம், என்பதே, இந்த உபநிடதம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே விக்ரஹாராதனம் செய்ததைக்காட்டுகின்றது. நண்பர்களே! எவ்வளவோ மேலானபதவியையும், தானவமர்த்தன யோக்யதையையும் பரிபாலன சக்தியையும் பெற்ற மஹாவிஷ்ணுவே விக்ரஹாராதனம் செய்தாரெனின் அவரினுமெவ்வளவோ அந்தஸ்துக் குறைந்தவர்களும், நினைப்பு, மறப்பு, சுகதுக்கங்களில் அதிகமாயுழல் பவருமான நமக்கென்னகேடு! கண்ணையும்பிடுங்கி அர்ச்சனைசெய்யும் தீவரபக்தியைப் பார்த்தீர்களோ! கண்ணைவிட அருமையானதென்ன உளது? அவ்வளவு அருமையானகண்ணையும் பிடுங்கி விஷ்ணுவே அர்ச்சித்தாரென்னும்போது அவர்க்கு விக்கிரஹாராதனத்தில் எம்மட்டில் பக்தி யுண்டென்று யோசியுங்கள். இந்த சுருதிவிக்கிரஹாராதனத்துக்கு ஸாதகமாவதுடன், அந்த ஆராதனத்துக்கேற்ற பெரும்பதங்களையும் மேன்மையையும், ஆராதிப்படைவாரென்பதற்கும் சாக்ஷியாகின்றதல்லவா?

4. பஸ்மஜாபால உபநிஷத்தில். "శివలింగమేవమా సపూ జ్య విస్తృయన్తి యోగినస్సిద్ధిం గచ్ఛన్తి." என்று தொடங்கி ஓங்காரம் லிங்கவடிவாகிய சிவபூஜாமஹிமையும் பூர்த்தோ ரடையும்பலனும் ஏராளமாய்ச் சொல்லப்படுவதால் லிங்காரா ராதனத்திற்கு மேற்பட்டது ஒன்றுமில்லை.

5. ருக்ஸம்ஹிதையில். "[illegible] ..." என்று சொல்லியுள்ளது. இதின்கருத்தோ [illegible] தேவர்களும் சிவலிங்காராதனத்தால் தங்கள் ஐசுவரியங் களை யடைந்தார்கள். லக்ஷ்மீபதேயாகிய விஷ்ணுவோ சிவ லிங்க பூஜையால் பரமபதத்தை யடைந்தார், என்பதே. லிங் ரூபமுடைய லிங்காராதனம் ஸாதகர் செய்யாகுல், ஞான, சுக, [illegible] நமக்கதைவிட வேறு வழியோ தேவைது!

6. ருக்வேதத்தில் "[illegible] ..." என்று சொல்லியுள்ளது. இதன்பொருள், சிவநி வேதிதம்செய்த பிரஸாதமே புசிக்கத்தக்கது. ருத்ர தீர்த்தமாகிய ஜலம்பாலிவைகளையே பானம் பண்ணத்தக்கது. ருத்ரனுக்குப் பூஜித்த நிர்மால்யபுஷ்ப கந்தாதிகளையே தரிக்கவேண்டும், (என்றுவரிசையாய்ச்சொல்லி) ஸத்ப்ராம்ஹணர்கள் சிவநிர் மால்யமே க்ரஹிக்கவேண்டியது ; என்றுமுறையிடலால் லிங் காராதனமொன்றே மஹாயோக்கிய முள்ளதெனக் காணப் படுகின்றது.

இன்னும் "సద్యోజాతం ప్రపద్యామి సద్యోజాతాయవై నమః" என்பது முதலிய வேதமந்திரங்களால் ஸத்யோஜாதம் [illegible]

ய சிவனது ஐந்து முகங்களுக்கும் ஆராதனம்சொல்லியுள்ளது. அல்லாமலும் "త్రిసుపర్ణమయాచితం బ్రాహ్మణాయదద్యాత్" என்பது முதலிய வேத மந்திரங்களால் பிராம்மணனென்னும் சிவபெருமானுக்கு வில்வபூஜைசெய்தே சாப்பிடச் சொல்லியிருக்கிறது இன்னும், தைத்திரியத்தில், "ఋతగ్ం సత్యం పరంబ్రహ్మపురుషం కృష్ణపింగళం । ఊర్ధ్వరేతంవిరూపాక్షం విశ్వరూపాయవై నమోనమః என்று சொல்லியுளது. "నమోహిరణ్యబాహవే, హిరణ్యవర్ణాయ, హిరణ్యరూపాయ" என்றும், "ఇళీభిఃపుష్టైః పురుహూతమర్చయ" என்றும், "ఊర్ధ్వాయనమః ఊర్ధ్వలింగాయనమః । హిరణ్యాయనమః, హిరణ్యలింగాయనమః సువర్ణాయనమః, సువర్ణలింగాయనమః" என்றும், உள்ள அநந்த வாக்யங்களுமுண்டு. மேற்கூறிவந்த வேதப்ரமாணங்களை, மறுக்கயாராலும் முடியாது ஆகலால், விச்ராமாராதனத்துக்கு வேதத்திலாதார மில்லையென்று பூச்சுக்காட்டும், பிரம்மஸமாஜத்தார் முதலிய பேயர்களிடம் அகப்பட்டுக்கொண்டு விக்கிரஹாராதனமில்லாத தோஷமடையாதீர்கள். இன்னும் எவ்வளவோ பிரபலமான வாக்யங்களுண்டு, காலதாமஸத்துக்கும் கிரந்தவிஸ்தாரத்துக்கும் அஞ்சி இம்மட்டில் வேதஆதாரங்களை நிறுத்தி மற்றையமேற்கோள்களையும் சுருக்கிச் சொல்லிவிட்டுப் பின்யுக்திகளையும் சொல்வோம்.

!! புராணங்கள்.

1. பிரம்மவைவர்த்தத்தில் "రౌద్రంసమస్తలోకానాంలింగమాదౌశిలామయంచాపహారిస్తుతత్త్వా । సుదుష్కరంనైష్ఠవమాధ్యమద్యమవాప్తవానేవపరంపదంతత్," என்றும்.

2. பாரதத்ரோணபர்வத்தில் "దేవదేవ స్త్వచిన్త్యాత్మాఅజయోస్తుర్ధ్వయః । సర్వరూపంభవంజ్ఞాత్వాలింగేర్చయతితంప్రభుం । తస్యధర్మాంప్రీతింకరోతివృషభధ్వజః," என்றும்.

3. அனுசாசனிக பர்வத்தில், " యస్యబ్రహ్మాచవిష్ణుశ్చత్వంచశ క్రస్సహామరైః। అర్చయన్తస్సదాలింగం తస్మాత్ శ్రేష్ఠతరోహిసః॥" என்றும்.

1. ஆதித்ய புராணத்தில்.

"దేవీస్కన్దగణాంశ్చైవగోవృషంనందికేశ్వరం। వినాయకంచసంపూజ్య స్తుతిస్తోత్రైస్తథాహరః। ఉపస్కందైర్గజగ్రాహైర్వ్యంతహరిరవ్యయః॥" என்றும்; இன்னுமிப்படியே பதினெண்புராணங்களிலும் விக்ரஹாராதன ஸ்துத்யமாக யதேஷ்டம்சொல்லியுள்ளது. இது மட்டோ? அம்பாள்யார்? பரமசிவனுடைய கிருபையே யல்லவா? அப்படி வர்ணிக்கப்பட்டுள்ளது? பரமசிவனுக்குத் தாதான்மிய சக்தியாய் அக்கினியி லின்றும் பிரிக்கப்படாத சூடு போல் சிவத்துடன் கலந்து எல்லாவற்றுக்கும் தாயாய் விளங்குபவளல்லவா? பரமசிவனைவிட்டு அணைநொடி பிரிந்தாளே யானாலும் அவர்க்கு யாதொரு தொழிலுநடவாதே. இப்படிப்பிரிவறுத அம்மையும் ஸ்ரீ கருணைவள்ளலினிடத்து அன்புமிகுதி கம்பாநதியில் வந்து அவனாலிங்க ரூபியாகப் பூஜித்ததாகவும் அப்போது பரமசிவத்தின் கருணையால் கம்பாநதி பெருகியதாகவும் அப்போதம்மையார் ஐயனைக்கட்டிக்கொண்டதாகவும் ஐயன் மணமகனாக தர்சனம் தந்ததாகவும் ஸ்காந்தத்தில் சொல்லியுள்ளது. ஒரு க்ஷணமும் சிவனன்றி வேறொன்றுமில்லாத அம்மைக்கும் அவனைப் பூஜிக்கவேண்டுமோ? அப்பேர்ப்பட்ட அம்மையே பூஜித்தாளென்றால் விக்ரஹாராதனத்திலும் மேலிட்டதுஎன்ன உள்ளது?

!!! ஆசார்யாள் வாக்கு.

1. ஸ்ரீமந் மாணிக்க வாசகர். "அமாறன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்-பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்-கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன் - சாமாறே விரைகின்றேன் சிக

ராலே சார்வேனே" என்றும், "ஐய்ந்தமா மலரிட்டு முட்டா ததோ ரியல்பொடும் வணங்காதே - சாந்தமார்முலைத் தையல் நல்லாரொடுந் தலைதடுமாறுகிப் - போந்தியான்றுயர் புகாவண மருள்செய்து பொற்கழலிணைகாட்டி - வேந்தனாய் வெளி யே என்மு னின்றதோரற்புதம் விளம்பேனே" என்றும்; "நினையப் பிறருக்கரிய நெருப்பை நீரைக்காலை நிலனைவிசும் பைத் - தனையொப்பாரையில்லாத் தனியைநோக்கித் தழைத் துத் தழுத்தகண்டங் - கனையக்கண்ணீ ரருவிபாயக்கையும் கூப்பிக் கடிமலரால் - புனையப்பெறுவதென்று கொல்லோ என்* பொல்லாமணியைப் புணர்ந்தே" என்றும்; சொல்லி யிருப்பதுடன் தலங்கடோறும் சென்று எம்பெருமானைப்பா டியும், வேதத்துக்குப் பொருள்கேட்டகாலையில் ஸ்ரீநடராஜ ப்பிரபுவின் திருவுருவத்தைத் தமது அதிபுதவிரலால் சுட்டிக் காட்டியுமிருப்பதாலும். (*பொல்லா=உளிபடா=பொழியா; மணி=ஸ்வயம்ஜோதி.)

2. ஸ்ரீவாகீசப்பிரபுவோ. "கற்றுக்கொள்வன வாயுள நாயுள - இட்டுக்கொள்வன நீருள பூவுள - கற்றைச் செஞ்சடை யானுள னாமுள-மெற்றுக்கோநம னால்முனி வுண்பதே" என் றசொல்லி யிருப்பதாலும்.

3- எம்சுந்தரநாயனாரோ. "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையன் ..." என்பது முதலிய பல்கோடி விஷயங்கள் சொ ல்லியிருப்பதாலும், அப்படியே ஸ்ரீ ஸைந்தரமூர்த்திப் பெரு மானும் ஏனையோரும் சொல்லியிருப்பதாலும், சொன்னவற றிற் கியையப்பல திருப்பதிகள்தோறும் சென்று சிவலிங்கப் பெருமானைத் துதித்திருப்பதாலும், இன்னும் நம்பெரியோர் கள் "மூவுருவின் முதலுருவா யிருநான்கான மூர்த்தியே முப்பத்து மூவர்களுந் - தேவர்களுமிக்கோருந் துதித்துப்போ ற்றும் செம்பவளத்திருமேனிச் சிவனே" எனவும் "குடங்கை ...ம் பச்சிலையு மிடுவார்க் கிமையாக்குஞ்சரமும் - படங்கொ ...யும் பூவணையும் தருவாய் மதுரைப்பரமேட்டீ" எனவும்,

"காணாத உருவினுக்கும் அருவினுக்கும் காரணமாய், நீணாக மணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்" எனவும் பலவாறு துதித்திருப்பதாலும் விகாரஹாரா தனத்தினும் மேற்பட்டது என்ன உள்ளது? இதுமட்டோ? "பிரியமிக விளைத்தினுக்கும் பிரமாணமாயமறை - தெரியவெடுத் தினிதுரைத்தல் சிவலிங்கார்ச்சனை ஒன்றே - உரியவெனப் பிறர்வடிவ முரைத்தது மற்றுண்டு கொலோ - அரியதவத் திருமைந்த அறையவெதவனி தன்மேலும்" என்றுமின்னுமெவ்வளவோ விதமாகவும் அருமையருமையாகத் துதித்த வாக்கியங்கள்பலவுண்டு; ஆதலாலிதை யிம்மட்டில் நிறுத்தி இனியுக்தியும் சொல்லுவோம்.

II. யுக்தி.

நாமோபாசபந்தமுள்ள பசுக்கள்! கடவுளோ மலத்தாக்கற்ற பசுபதி. ஆதலால் பதிக்குச்செய்யு மாராதனத்தாலல்லது நாம்பாசநீக்க மடைவதில்லை. பதியையெப்படி ஆராதிப்பது? பதியைவிசாரித்தாலோ "அன்றுந்திருவுருவம் காணாதேயாட் பட்டேன், இன்றுந்திருவுருவம் காண்கிலேன், என்றுந்தான், எவ்வுருவோனும் பிரானென்பார்கட் கென்னுரைப்பேன், எவ்வுருவோ நின்னுருவமேது" என்றபடியே அறிதற்கரிய அருமையாயிருக்கின்றது. இவ்வளவு அரியபொருளை எப்படி ஆராதிக்கலாம்! அவனுடைய நிஜலக்ஷணம் தெரியாமற்போனாலும் அவன் ஒருவுருவும் கற்பிக்க இல்லையோ என்று பார்ப்போம். கற்பித்திருப்பதாகவே காணப்படுகிறது. எப்படியெனில் ஆன்மாக்களுக் கருள்வதின் நிமித்தம்கிருபையெடுத்து ரூபம் கொண்டிருக்கின்றானல்லவா? அந்தரூபமெது வென்று பார்ப்போம். அது ரூபம், அரூபம், ரூபாரூபமென மூன்றாயிருக்கிறது. நாமோசிற்றறிவுடையோர். அரூபமினைத்தென்று கூடத்தெரியாதவர்கள். கடவுளை அரூபியாக ஆராதிப்பதைவிட அக்கடவுளது நிஜஸ்வரூபப்படியே ஆராதிக்கலாம். ஏனெனில் அரூபம் நமக்கு மனஸால் ஊகிக்கமட்டும் கூடியதாய் இப்படியெனத்தெரியாமலிருக்கிறது. ரூபாரூபமும் அப்படியேதானுள்ளது. ஆதலால் ரூபமொன்றே தியானிக்க வே

வாயுள்ளது. இந்தரூபத்தை எப்படிதியானிப்பது?ரூபம் இதுவரை எதனிடத்தில்நாம்கண்டிருக்கிறோம் ? பிரதிவிக்குரூபமுண்டு; அப்புவுக்குரூபமுண்டு, தேய்வுக்கும் ரூபமுண்டு,வாயுவுக்கும் ஆகாசத்து க்குமப்படி ரூபமில்லை. இவ்வைந்தோம்யாவர்க்கும் புலப்பட்டிருக்கும்பெரும்பூதங்கள். இவைகளையேநாம்மனதால் நினைக்கமுடியும். ஏனெனில் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆதலால் நமக்குத்தெரிந்த இப்பூதங்களால் கடவுளை ஆராதிக்கலாமே ஒழியவேறுவழிகாணோம். இவற்றுள் பிரதிவியே ஸ்திரமுள்ளது. ஆதலால் பிரதிவியிலேயே ஆராதிக்கவேண்டும். ஆதலால் விக்ரஹ ஆராதனம் ஒன்றுதான்ஆராதிக்கச் சிலாக்யமானவழி. இவ்வளவு சுற்றுவானேன், கடவுளது ரூபத்தை மனதால் தியானிக்கக்கூடாதோ என்றால், மனதைவிடப்பிருதிவி தாழ்ந்தபோகவில்லை யென்றுமுந்தியே சொல்லியுள்ளோம். அல்லாமலும் விக்ரஹாராதனத்தாலேயே தான் கடவுளது ரூபத்தைநன்றாய் ஆராதிக்கவேண்டும். ஏனெனில், சொல்லுவோம்; இன்றுநம்மை நெருப்புச்சுட்டதென்று வைத்துக்கொள்ளுவோம். அல்லதுஇன்றுசுக உஷ்ணமானவெந்நீரில் ஸ்நாநம்செய்ததாக வைத்துக்கொள்ளுவோம். நாளைக்குநமக்குஎங்காவது நெருப்பு கண்ணுக்குப்புலப்பட்டால் இன்று நெருப்புச்சுட்டவிஷயமும் அப்போது நாம்பட்டகஷ்டமும் நமது ஞாபகத்துக்குவருமன்றோ ? இதேமாதிரி எங்காவது வெந்நீரைநாளைக்குக்கண்டால் இன்றுஸ்நானம்செய்ததும் அப்போதுண்டான ஆநந்தமும்நமது ஞாபகத்துக்கு வருமன்றோ ? இன்றுள்ளநமது அனுபவத்துக்கும் நாளையுள்ள நமது அனுபவத்துக்கும் வித்யாஸமுண்டென்பதுயாவருக்கும் தெரியுமல்லவா ? நாளையதினம், இன்றையக்காரியம் ஞாபகத்துக்கும்வரும்போதுள்ள அனுபவம்கிட்டத்தட்ட இன்றைய அனுபவம்போலிருந்தாலும், நாளையதைவிட இன்றையஅனுபவம் ஆழ்ந்ததல்லவா ? நாளையஅனுபவத்தை எவ்வளவாகச் சொன்னபோதிலும் இன்றைய அனுபவம்போலுள்ள தாகுமா ? ஒருகவிதன்னுலானவுஹ்யில் எவ்வளவுவார்த்தையால்

வர்ணித்தாலும் உள்ளதுள்ளபடி ஒருமலைச்சாரலின் அழகை வர்ணிக்கமுடியுமோ ? அக்கவியின்மொழியைக்கேட்கும்நமக்கு நேரநேரப்பார்க்கும் அனுபவம்போன்ற அனுபவம் அப்போது வந்துவிடுமோ ? மனத்தினால்செய்யும் ஒருதியானம் எவ்வளவு பலமானதானாலும், நேரநேரஉருவத்தைவைத்துக்கொண்டு தூங்கி யழித்துக்கொண்டு பார்த்துத்தொட்டு அனுபவிக்கு மனுபவத்துக்காவது ஈடாவதெக்காலத்தேனுமுண்டோ ? ஒருகோபக்காரன் தன்தந்தைதாயருடன் முரட்டாட்டம்செய்து சட்டிபானைகளை உடைக்கும்போது நாம்ஸமாதானம்செய்யப்போவதாக என்னுகிறோம். இப்படிஎண்ணும்போது, நிஜமாகநாம்போம்போது "எங்கேநமக்கும்இரண்டு பூசைவிழுமோ?" என்று தோன்றும்பயம், எவர்க்காவதுண்டாவதுண்டோ ? இதுவேயென்ன ! நாம் ஒருசண்டையைப்பார்க்கிறோம்; அப்போது நம்மனதில் ஒருபீதியுண்டாகிறது. நாம்பார்த்தசண்டையையே புத்தகத்தில், உள்ளதுள்ளபடி யெழுதியிருப்பதைநமது நண்பனொருவன்படிக்கிறான். நமக்குச்சண்டையைப்பார்த்தபோது உடம்பிலிருந்தவேகமும், விறுவிறுப்பும் நமது நண்பனுக்கும் உண்டாகுமோ ? இந்தமாதிரியுள்ள வித்யாஸங்கள் இன்னானுக்குந்தான்தெரியும் என்பதுண்டோ? நாமெல்லார்க்கும்அனுபவமேதய மல்லவா ? ஆதலால்பிரத்யக்ஷ உருவாராதனமே மனத்தால்எண்ணிச்செய்யுமாராதனத்திலும் பலத்ததல்லவா? இன்னும்; எழுத்துக்களுள் வரிவடிவு ஒலிவடிவு இரண்டுண்டல்லவா ? ஒருபாஷையைக்கற்பதற்கு எழுத்துக்களின் உதவியல்லாமல் முடியாது. எழுத்துக்களோ வரிவடிவால் காட்டிக் காட்டி மனதில்பதிப்பித்தாலொழிய மனதில்பதியாது. தெரியாமற்றான் பள்ளிக்கூடங்களில் மாதக்கணக்காய் மணன்மேலெழுதப்பழகுவது ? எழுதும்போது கண்ணுக்குவேலை, மனதுக்குவேலை, கைக்குவேலை, வாய்க்குவேலை. ஆகவேமனம் மொழி மெய்என்னும் மூன்றையும் செலுத்தினாலல்லது பாஷாஞானம் வருவதில்லையல்லவா ? அதுபோலவேதான் மனம்மொழிமெய்யென்னும்மூன்றையும்செலுத்திக்கடவுளுக்குரி

வடிவாகிய ரூபத்தைமனலாகிய விக்ரஹத்திலாராதித்தாலல்லது பாஷாக்ஞானம்போன்ற பேரின்பஞானமடைவதில்லை. நம்மனதோ கட்டுப்படாதது. ஒன்றைவிட்டு ஒன்றில்தாவும். அப்பேர்ப்பட்டதை விக்ரஹாராதனத்தில் பழக்கிறலொழிய கடவுளது பாதாரவிந்தஸுகமனுபவிக்க லாது. யூக்ளிட் என்றுபெயருள்ள புஸ்தகத்தைப் பாட்சாலையில் கற்றுவரும் பிள்ளைகளுக்கு, வட்டம், (Circle); அர்த்தவட்டம் (Semi-Circle); கோணம் (Angle) ; என்பனவாதி இன்ன இன்னவென்றுலக்ஷணம் (Definition) சொல்லியிருந்தும், யாது காரணத்தால் புஸ்தகம் முழுவதும், கோணம், திரிகோணம், வட்டம், சதுரம் இத்யாதிவரிவடி வமைத்திருக்கிறது ? அவ்வடிவு மனதிற்பதிவதற்குத் துணைசெய்வதாலல்லவா ? கடவுளையோ நகசிகைபர்யந்தம் அடையாளம் சொல்லியிருக்கின்றது. அவ்வளவு அடையாளங்களையும் ஏககாலத்தில் எப்படி தியானிப்பது ? அன்றியும் பிரத்யக்ஷத்தில் ஸ்வாமிபுறப்பாடும் கொட்டுமுழக்கும் கோயிலுமில்லாதுபோனால் எவனுக்காவது ஸ்வாமி யென்றுஞாபகமாவது உண்டாகுமா ? தம்மார்பில் இருக்கும் பூணூலால் தன்னப்பனுக்கு சேர்ந்த செலவையும்மறந்துவிட்டுப்பூணூலெதற்காகப் போடப்பட்டதோஅந்த உத்தேசத்தையும் பயனற்ற தாகச்செய்து, திறவுகோல் மாட்டவும் முதுவைஅரித்தால் சொரிவதற்குக்கொள்ளவும்ஏற்பட்டுள்ள இக்காலத்தில் விக்ரஹாராதனைமட்டும் போய்விட்டதேல் தெய்வமேயாருமிலென்ன ? என்று ஸந்தேஹப்படவேண்டிய நிலைமையே உண்டாவதில் தடையென்ன ? இன்றுசாப்பிடும்போது நல்ல ஊறுகாய் அபூர்வமாயொன்றிருந்ததென்று வைத்துக்கொள்வோம்; அதைமோர்போட்டுக் கொள்ளும்போது சுவைத்ததாக எண்ணுவோம். நாளைமோர் போட்டுக்கொள்ளும்போது அதேஊறுகாய் ஞாபகம்வருமல்லவா ? சாப்பிடும் நேரம்போக மற்றநேரங்களில் பலவிதவியவஹாரம் செய்தவரும் நம்மனது இந்தஊறுகா யொன்றையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்குமா ? இந்த உபமானம்போலவே தான் விக்ரஹாராதனமும். மோரைக்கண்ட மாத்திரத்திலுண்டாகும்

கா றுகர்ய் ஞாபகம்போல், விக்ரஹத்தையும், கோயிலேயும் கண்டதக்ஷணத்தில் கடவுளுடைய ஞாபகமும்வரும்.

அல்லாமலும் நினைந்தலென்றால் என்ன ? முன்பார்த்திருந்த அல்லது அனுபவித்திருந்த ஓர்பதார்த்தத்தை மறுபடி ஞாபகத்துக்குக் கொண்டுவருவதேயல்லவா ? நான் அந்தவூருக்குப் போக நினைத்தேன் என்றும்போது, போகும்வழி, போகும் விதம், போயடையப்போகும்வூர், வூரடைந்த காலாகக்கூடிய சுகஅசுகம் இவற்றை ஞாபகத்துக்கு கொண்டுவருவது என்றே யல்லவா பொருள்படுகின்றது ? நம்மனதில்இதன்முன்னரே பதியாத ஒருவிஷயத்தை நினைப்பதெப்படி ? முடியாதல்லவா? முதலில் நமக்கு நமதுமனதின்செய்கை பிரமாதமாகத்தான் தோன்றும். இல்லாத்தையெல்லாம் நினைபபது மனமென்று நமக்கு முதலில்படுகிறது. சிறகில்லாதநாம், பறந்துபோவது போலும் எவ்வளவோ தடவை எண்ணியிருக்கிறோம்.இந்தவிஷயங்களையெல்லாம் ஆதாரமாய்க்கொண்டு அவைகளின் உண்மையறியாததால்தான் சிலர், "எல்லாம்பிராந்தி" என்னும்முடிவுசெய்துவிட்டனர் !! நாம்பறந்துபோவதுபோலவும், ஏழுகாலுடைய ஒருமனிதனைக்காண்பதுபோலவும்என்றும்போதெல்லாம் , ஸாதாரணவிஷயங்களை என்றுவதிலுள்ளதைவிட அதிகசிரமம் மனதுக்குக்கிடையாது.நாம்பாராதகேளாதவிஷயங்கள் நம்மனதில் தோன்றுவதுண்டுதான். ஜுவாலைக்கூரியில் நெருப்பு இருதிசென்றெரிவதாக மனமெண்ணும். இந்தமாதிரி ஸ்வயேச்சையாய் மனந்திரிவதாகநமக்கெல்லாம் தோன்றினும் கொஞ்சம் ஆழ்ந்துபார்க்கும்போது மனதுசிறகொடிந்ததுத்தளிப்பதும், நமது புலன்களால்நாம்காணாதவற்றைக்காணமுடியாது, நம்மனது ஒடுங்கிக்கிடப்பதும் நன்குவிளங்கும். நமது புலன்களால் நாமனுபவித்தவையான பலவியவகாரங்களுக்குள்ளும் கட்டுண்டு கிடந்துவிழிக்கும் இம்மனது எவ்விஷயத்தில் சிலாக்யமோ பிருதிவியைவிட ? நாமறியோம் !! நடுக்கடலில் தீபுற்றியெரிவதாக நமது மனம்நினைக்கும். உண்மைதான். இத்தநினைப்பில் ஜலமாகடல் நாம்பாராததோ ?அல்லது

நெருப்பு நாம்பாராததோ? நமதாகிய இரண்டனுபவத்தை ஒன்றசேர்த்து எண்ணியதே ஒழிய மனதிங்கெதைச்செய்தது? லக்ஷம் எழுத்துக்களால் "கொன்ஹெடபுண்ஸிகலிக்ஸ்" என்று என்னையெழுதுமானால் லோகத்திலில்லாதபாஷை என்னைக்குத்தெரியுமென்னலாமோ? அல்லது அவ்வெழுத்துக்களை நான் ஒலித்த்தால் என்நாக்குப்புதுபாஷையை ஸ்ருஷ்டித்துவிட்டதாகச் சொல்லலாமோ? ஆதலால் நம்மனது நாம் இதன்முன்னமே அனுபவியாத எதையுமறியாதுஎன்பது திண்ணம். இதை இன்னும் ஊர்ஜிதப்படுத்துவோம். நாமறிந்தவரையில் எவ்வளவோ குருடர்களும் செவிடர்களும் உண்டல்லவா? இதைக்கூடமறுக்கயாவரும் வரமாட்டார்களே. நிறம்என்பதைப்பற்றியநினைப்பு குருடர்களுக்கு உண்டாகுமோ? சங்கராபரணம், தேவகாந்தாரி என்னும் ராகக்ரமம் செவிடர்களதுமனதுக்குவிஷயமாகுமோ? இவற்றையெல்லாம் நாமாராய்ந்துகொண்டே போனால் நமது புலன்களுக்கியையவே தான் நமது நினைப்புமென்பது ஸ்பஷ்டமாய் விளங்கவில்லையா? குருடர்செவிடரிடம் போவானேன்? இங்குள்ளயாவருக்கும் அனுபவவேத்யமாயுள்ள விஷயங்களையேசொல்லுவோம். நாம்பாராத ஒரு ஊரைப் பார்க்கும் போதும், பழகாதமனிதருடன்பழகும்போதும், நமது நிலைமைக்கேற்கநமக்கு மனத்தோற்றம் புதிதுபுதிதாயுண்டாவதில்லையோ? நமது பழக்கத்துக்கும் நமது எண்ணத்துக்கும் ஒரோ அளவையுள்ள மாறுதல் அன்யோன்யபாவமுறுகும் போது நாம் என்றும் எல்லாஎண்ணமும் அப்படியே நமது எல்லாப்பழக்கங்களுடனும் அன்யோன்யப் பட்டவைதான், அவற்றிற்கு அப்புறப்பட்டதன்று என்று ஏன் நிர்மாணிக்கக்கூடாதோ? இதுமட்டுமோ? ஆடுமாடுகளைத்தின்னும் ஒருவனுக்கு அவைகளின் ருசிகளைப்பற்றிய எண்ணமுண்டல்லவா! அவற்றைத்தின்னாதவன் அவற்றைத் தின்னுபவனுக்குண்டாம் எண்ணத்தை எப்படிக்கொள்வது? ஸதா, சாந்தம், பொறுமை இவற்றோடுகூடிய ஒருவனுக்கு, கோபம்,படபடப்பு இவற்றோடுகூடியவனுக்குத் தோன்றும் எண்ணமெப்படியுண்டாகு

ம்! தன்வயிற்றுப்பாட்டையேபார்க்கும் ஒரு அதிகாரிக்கு தயை என்பது எப்படி எண்ணத்திலுண்டாகும்? விக்ரஹாரா தனை செய்து அனுபவித்துவரும் எம்போன்றோருக்குள்ள ஆ நந்தத்தைப்பற்றி யிது செய்யாதோர்எம்மட்டில்நினைக்கக்கூடும்? இன்னுமிப்படியே யனந்தமுண்டாகையாலித்துடன் நிறுத்து கிறோம். இதுவரையில் சொல்லிவந்தஉண்மையால், நம்முனதில் முன்னரேபதியாத ஒருவிஷயத்தை நமதுமனது எண்ணுமெ ன்பது காலத்திரயத்து மில்லை யென்பது ஸ்பஷ்டமாய் வி ளங்குகிறது. நன்றாயோர் விஷயத்தைக் கவனியாதவனுக்கு அக்கவனத்தின் விளைவாகிய நினைத்தலைச் செய்ய முடியாது. உதாரணமாக; சிலராத்திரிகளில் நாம் தூங்கும்போது நமது நண்பன் ஒருவன் வந்து அதிசயமான ஒருபதார்த்தத்தைக்காட் டினும் அதைநாம் தூக்கம்மேலிட்டுச் சிலசமயங்களில் அரை குறையாய்ப் பார்ப்பது வழக்கமல்லவா! அப்படிப் பார்த்து விட்டுமறுநாள் அதேநண்பன் அந்தபதார்த்தத்தைப்பற்றிப்பே சும்போது நான் நன்றாய்ப்பார்க்கவில்லை தூக்கக்கலக்கத்தில் கொண்டுவந்தாய்காலைக்குப் பகலில்கொண்டுவா என்பதுவழக்க மன்றோ! சிலகாலங்களில்நமக்குத்தூக்கம்வரும்போது யாராவ துவந்தாவது சொன்னதுபோதோ சொன்னான் என்னும் ஞாபகம்மட் டும் இருப்பதும் இன்னசொன்னான் என்பது தெரியாதிருப்பது ம் வழக்கந்தானே. சிலஸமயங்களில், தூக்கக்கலக்கத்தில் நம்மி டத்தப்பிரிய முள்ளபாட்டிமார்கள்வந்தாவது [illegible] போ ந்தால் வாயசைத்துத்தின்பதும் மறுநாள் இன்ன தின்றே மென்பதுமட்டும்தெரியாமல், தின்றதுமட்டும்ஞாபகத்துக்கு வருவதுமுண்டல்லவா? சிலசமயங்களில் அவஸரமாகவோருகா ரியத்தில் பிரவர்த்திக்கவேண்டியிருந்து அக்காரியத்திலேயேக வனமுயிருக்கக்காலிடறுவதும், அதைக்கூடகவனியாது செல்லு வதும், காரியம்கைகூடியபின்பேரில் எங்கேயோ இடறிவிட்ட து என்றுவருந்துவதும் வழக்கம்தானே. இப்படியெல்லாம்நம து புலன்களால் கிரஹிக்கப்பட்டபலவிஷயங்களும்அவ்வக்கா லங்களில் நமது கவனம்வேறுவிஷயங்களிற் பலமாய்ச்சென் றுவிடுவதால், ஞாபகத்துக்குவருவதில்லையன்றோ? ஆதலால்

ஒருபதார்த்தத்தை நன்றாயனுபவித்து வந்தவனுக்குத்தானே அப்பதார்த்தத்தைச்செவ்வையாய்நினைக்கக்கூடும்? நன்றாய்மனதில் ஒருவிஷயம் பதியவேண்டுமானால் நமது புலன்களை நன்றாய்பிரயோகப்படுத்தவேண்டும்.

ஒருவிஷயத்தை மனத்தில் நன்றாய்ப் பதிக்கவேண்டுமானால் கண்ணினது ஸஹாயம்வேண்டும். கண்ணானது ஒரு பதார்த்தத்தைப் பார்க்கும்போது அந்தப்பதார்த்தத்தின் நிஜஸ்வரூபம் நம்மனதில் நன்றாய்ப்பதியும். ரூபம் என்பதேபார்த்தல் என்னும் தொழிலோடு ஸம்பந்தப்பட்ட ஒருபெயராகையால் கண்ணினது உதவியாலேயே ஒருபதார்த்தத்தை மனதில் நன்றாய்பதிக்கக்கூடும். ஸ்பர்சமும் ஸாதகமாய் நிற்குமானால் பதிவு ஆழ்ந்திருக்கும். ஆதலால் ஸ்பர்சம், ரூபம் இரண்டும் சேர்ந்து அனுபவிக்கும் அனுபவம், அனுபவித்த பதார்த்தத்தின் ரூபத்தை நன்றாய் மனதில்பதிக்கும். ஸ்பர்சரூபங்களாகிய தொழிலுடனே வாயுந்தொழிற்பட்டு உச்சரிக்குமானால் பதிவுஇன்னும் ஆழ்ந்திருக்கும். ஆதலால் விக்ரஹாராதனம் செய்து கண்ணுக்கும், கைக்கும், வாய்க்கும், தொழில்நடத்தினால் விக்ரஹத்தின் நிஜஸ்வரூபம் மனதில் நன்றாய்ப்பதியும்; விக்ரஹத்தின் நிஜஸ்வரூபம் பரமேசுவரன் அனுக்ரஹார்த்தம் கொண்டரூபமேயாதலால் பரமேசுவரன் திருவுருவம் விக்ரஹாராதனத்தாலேயேதான்மனதில்பதியும். பின்னர்தான்கைவல்யஉபநிஷத்தில் சொல்லும்வண்ணம் "ஏகாந்த ஸ்தானத்திலே, ஸுகாஸனத்திலிருந்து, சுத்தனாகி, நேராகிய கழுத்துத்தலையுடம்பு உடையவனாய், அத்யாச்சிரமஸ்தனாய், இந்திரியங்களைத்தடையுடக்கிப், பக்தியால் தனது ஆசார்யனை நமஸ்கரித்து, இருதயபுண்டரீகத்தை மாசற்ற சுத்தஸ்தானமாக எண்ணி, அதன்மத்தியிலே, தெளிவுடையவராய், சோகமில்லாதவராய், எண்ணப்படாதவராய், வெளிப்படாதவராய், அனந்தரூபராய், சிவனாய், அமிர்தராய், பிரம்ஹயோனியராய், தத்பதமாய், ஆதிமத்தியாந்த விஹீனராய், ஏகராய், விபுவாய், சிதானந்தரூபராய், அருபராய், அத்புதராய், உமாஸஹாயநாய், பரமேசுவரராய், பிரபு

யாய், முக்கண்ணராய், நீலகண்டராய்" தியானிக்கமுடியும்; இப்படியல்லாமல் விக்ரஹஆராதனத்தை நிந்தித்து மனதால் தியானிக்கமுடியாதோ என்று குதர்க்கஞ்செய்யும் வீணர்கள் வீண்ஜாலக்காரரே யொழியத்தியானிக்கச்சக்தியுள்ளவரேயன்று. இந்நிலேநான்விக்ரஹத்தைப் பார்த்துக்கொண்டேயிருக்கக் கண்ணுக்கு வேலையும், அபிஷேகாதிகளால் கைக்குவேலையும் அர்ச்சனை அபிஷேகாதிகளில்வாய்க்கு வேலையும், உண்டு. இந்த அருமையை எந்தவிதமாயெடுத்துரைத்தாலும் தடிப் புத்தியுள்ளவர்களுக்கு விளங்காததலால் நாம்சொல்வதில் சொத்தையும், சொள்ளையும் இருப்பதாகவே அன்றேறென்றுவார்கள். ஆதலால் ஜாக்ரதையாயிருங்கள். இன்னும், சாகும் போது நம்முடைய ஞாபகம் தப்பிப்போவதுண்டு. ஆனாலும் நாம்செய்துவந்த கிர்த்யங்கள் நம்மைவிட்டுப்போவதில்லை. நாமிந்த விக்ரஹாராதன விஷயத்துக்காக இதுவரையில் பார்பெட்டதில் சில விநோதம்கண்டோம். அதாவது, பிட்டில்வாசித்துத் தேறியஒருவர்சாகும்போது கையைப் பிட்டில்வாசிக்கும் போது நீட்டியதுபோலவே நீட்டி நீட்டிக்கொண்டு இறந்தார், ஸதா வலே பின்னும் செம்படவன் ஒருவன் சாம்போது நாம்பார்த்திருக்க வலேபின்னுவதுபோ லபிநயித்திறந்தான். பணஆசை பிடித்து லக்ஷக்கணக்காய்ச் சேர்த்துவைத்திருந்த ஒருவன அவன்சுற்றத்தார் அலறுவதும் காதிற்படாமல் பணஞாபகமே கொண்டு, எடுத்தாறு-போச்சா - ரொம்பசெலவா-என்றுசொல்லிக்கொண்டிறந்தான். இன்னுமெவ்வளவோ விஷயங்களுமிப்படியே உண்டு. ஆதலால் நம்மனம்மொழிமெய் என்னும் மூன்றையும் விக்ரஹாராதனத்திலேயே செலுத்தித்தியானித்து வருவோமே யானால் சாகும்போது வேறு எந்த ஞாபகமும் வராது, நாம் விக்கிரஹாராதனத்தால் ஸம்பாதித்துக்கொண்ட பரமசிவபாதாரவிந்த த்யானமே வரும். இந்தத்யானத்துடனேயே இறந்தால் நல்ல ஜன்மமாய் தெய்வபக்தியுள்ளோர் பிறப்புவரும். அந்தப் பிறப்பில்தெய்வபக்திஅதிகரித்துப் பிறப்பறுக்கும் பேறுகிடைக்கும்.

இன்னும்; Photograph என்னும் புகைப்படம் பிடித்தவை த்துக் கொள்வதும் நம் நண்பர்களுக் களுப்புவதும் ஞாபகார்த் தந்தானல்லவா? அது போலவேதான் கடவுள் முன்காட்டிய உருவின் ஞாபகார்த்தம் அவ்வுருவை விக்ரஹமாக அமைத்து ஆராதிப்பதும்; இன்னும்; சென்னபட்டணம் Presidency College என்னும் ஸர்வகலாசாலையில் நெடுநாளைக்கு முன் உபாத்தியாராயிருந்த, பவல்துரைபோன்ற வெள்ளைப் பளிங்குக்கல் பொம்மையொன்று அந்தத்துரைசெய்த நன்மையையுணர்ந்த கனவான்களால் பதினாயிரக்கணக்கான ரூபாய்ச் செலவுடன் அமைத்துவைத் திருக்கின்றது. கோவில்களில் விமானம் உள்ளதுபோல் அந்தப் பொம்மையின் தலைக்குமேல் விமானமும் கட்டி, தப்பித்தவறி இடிவிழப்போகின்றதென்று அதைத் தடுக்கக்காந்தமும் வைத்திருக்கின்றது. இது எதற்காக? நண்பர்களே! இன்றைக்கிருந்து நாளைக்கு மண்ணை வாயில்போட்டுக் கொள்ளும் மனிதருடைய ஞாபகார்த்தமும், தனக்கென்று ஒரு செயலும் செய்யச்சக்தியற்றுக் கடவுளை நோக்க அசேதனமாய்த்தோன்றும் மனிதர்செய்த உபகாரத்துக்கு நன்றியுணர்வைக்காட்டு நிமித்தமும்; படங்களும் பொம்மைகளும் செய்து மரியாதையும் நடத்தும்போது, "இன்னவினை யின்னதலத் தின்னபொழு தின்னதனு - வின்னபடியாய்ப்பொருந்து மென்றிசைத்தே - அன்னவினை - அன்னதலத்தன்னபொழு தன்னதனு வன்னபடிப் - பின்னமறக் கூட்டுமபிரான்" என்னும்படி நின்று, தயாஸிந்துவாகையால் கிருபையே தடித்து உருக்கொண்டு தம்மைவிட்டெப்போது நீங்காத அம்மையாருடனும், ஐயன் காட்டும் திருவுருவத்துக்கு மட்டும் விக்ரஹாராதனம் செய்வது பிசகாகுமோ! ஆகலால் விக்ரஹ ஆராதனம்செய்யும் பெருநலத்துக்கிடையூறு சொல்லும்பாபிகளைப் பிரயத்தினப்பட்டாவது பெருநஷ்டம் வந்தாலும் கவனியாது உங்கள் கூட்டுறவினின்றும் ஒதுக்குங்கள்.

இனி இன்னொரு விநோதமும் நோக்குவாம். ராமன், சேஷன், குப்பன், சுப்பன் என்னும்பெயரெல்லாம்யாருக்குக் கொடுத்தபெயர்? அந்தந்ததேகத்துக்கா? அல்லது தேகாந்தர

க்கும் ஆன்மாவுக்கா? தேகத்துக்கானால் ராமன் செத்துப் போய்விட்டான், சுப்பன் செத்துப்போய்விட்டான் என்று சொல்லும்போது தேகம் நமக்கெதிரக்கிடந்தும் போயினனெ ன்னும் பிரயோகமே காணப்படுவதால் ஆன்மாவுக்குத் தந்த பெயரோ அன்றி, இவை, தேகத்துக்கல்ல; என் அதே ஆன் மா வேறுதேகம் தாங்கி வேறுபிறப்படையும் போது, வே றுபெயர் வருவதால் தேகத்துக்கே பெயரென்னக்கூடாதோ எனில், கூடாது. ஆன்மாவுக்குத் தனித் தனியிடத்தில் தனித் தனிப்பெயர் வருகின்றது. பெயரென்பது ஒருபொருளை மற் றொன்றுடன் குழப்பாவண்ணம் மிலெதேயாகையால் இந்த ஒரு ஆன்மாவுக்கேயுள்ள கன்மவசத்தாலடையும் பலதேகங் களிலும் வேறு வேறு பெயரா லழைப்பதில் தோஷமில்லையெ ன்க. அப்படியிருக்க ஒரு ஆன்மாவுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளை அந்த ஆன்மாவைச் சுமக்கும் தேகத்துக்கேயல் லவா இவ்வுலகில் நாமெல்லாரும் செய்துவருகிறோம்? ஆன் மா என்ன தேகமா! அப்படியன்றியிருந்தும் ஆன்மாவுக்குச் செய்யும் மரியாதையைத் தேகத்துக்குச் செய்வது பிசகென் னலாமோ? அழியாததாகிய ஆன்மாவை அழிய[illegible]ய தேக மாய் நினைப்பது பிசகென்னலாமோ? ஆதலால் பரம கருணா சாலியாய், எங்கும் நிறைந்து சொற்பதமும் கடந்துநிற்கும், பெரியோரிற் பெரியோனை அவனது அஷ்டதனுவில் ஒன்றா கிய பிருதிவியின் விகாரமான விக்ரகத்திலாராதிப்பதுயோக் யமாகவே முடிகின்றது. கண்ணொளியும் கதிரொளியும்போல் பரமன் கலந்து நிற்கும் விசேஷத்தை உணர்ந்தவருக்கல்லவோ பரமனின் விக்ரஹாராதன விசேஷம் தெரியும்? தெய்வபக்தி யே கிடையாது, தானும்பேசத் தெரிந்தவனென்பதைக்காட்ட வேகங்கணம் கட்டிக்கொண்டு, பெரியோர் சொல்லையெல்லாம் தூஷிப்பதே தொழிலாக்கொண்ட, கேடர்களொழிய யார்தான் விக்ரஹாராதன தூஷணம் சொல்வார்? இன்னும், தமதன்பை க்காட்டும் தந்தைமார் தம்குழந்தைகளை ஊழைமூக்குடனைக்க ளிருந்தாலும் முத்தமிட்டுக் கொண்டாடும் தொழிலே தூஷணை

மாசா திருக்கும்போது பரம சிவாராதனம் மட்டும் நித்தி மாவதெப்படி? "மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சிமயா னத்தான் வார்சடையன் என்னினல்லால்—ஒப்புடையனல்ல ன் ஒருவ னல்லன் ஓரூரனல்லன் ஓருவமனில்லி - அப்படியும் அவ்வுருவம் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக்காணி னல்லால்—இப்படியன் இவ்வுருவன், இவ்வணத்தன், இவ னிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்னும் நம்மா சார்யரின் திருமொழிப்படியே விக்ரஹாராதனத்தாலன்றி வே று ஆராதிக்கவழிகாணோமே? பரமனை ஆராதியாமலிருப்பது மன்றோ? ஆராதிப்பதானால் விக்ரஹாராதனத்தை விட நமக் கெல்லாம் சுலுவானவழி கிடையாதே. "தாவர ஜங்கமங்க ளென்றிரண்டு ருவினின்று மாபரன் பூஜைகொண்டு மன்னுயி ர்க்கருளைவைப்பன்" என்னும் பிரமாணப்படியே தாவரமாகி ய சிவலிங்கத்தினிடத்தும், ஜங்கமமாகிய சிவனடியாரிடத் தும் மட்டுமே சிவாராதனம் செய்யக்கூடுமாயிருக்கிறது. அதி லும் இக்காலத்திலோ வேஷமாத்திரமாய், பெருமைபெறவே எண்ணத்துடன், படிபடியாய் விபூதியைக் குழைத்துப் பூசிக் கொண்டு, பொதிபொதியாய் ருத்ராக்ஷதாரணம் செய்துகொ ண்டு ஒருகலம் இரண்டு கலம் பிடிக்கும் அவ்வளவுபெரிய குடலைகளைத் தோளில்மாட்டிக்கொண்டு கொப்பும் கிளையுமே மிஞ்சும்படி வில்வமரங்களையும் மற்றுமுள்ள பத்ர விருக்ஷங் களையும் மொட்டையடித்து, சிவபூஜையென்னும் வீண்வ்யாஜ யத்தால் காலம்கழித்து வருவதுடன், கடவுளேயில்லை, உலகு ம்பொய், எல்லாம்மித்தை, என்றுவாய்க்குவந்ததைச் சொல் லிப் பிதற்றியரும் ஜனங்கள் மிகுதி. ஆதலால் நிஜபக்தியை க்கண்டுபிடித்து வழிபடல் துஸ்ஸாத்யமாகின்றது. ஆதலால் ஜங்கமவழிபாடாகிய சிவனடியார் வழிபாடு கஷ்டத்திலாகிற து. ஆகவே நமக்கு நிர்ப்பாதிதமாய்ப் பெறப்படும் ஆராதனம் விக்ரஹ ஆராதனம் ஒன்றுதான்.

மனதால் தியானித்தாலும் ரூபத்தைத்தான் தியானிக்கவே ண்டும். ரூபமோ ஒருபதார்த்தலம் பந்தத்தோடிருக்கு மல்

லால் வேறில்லை. ஆதலால் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறக்கூடிய மனத்தால் நினைத்துச்செய்யும் பூஜையைவிட நேரே அதேரூபத்தை பூதஸம்பந்தமான விக்ரஹத்திலமைத்துக் கையால் பத்திரங்களையும் புஷ்பங்களையும் கொண்டர்ச்சிப்பதும், பகவானுக்கு ஸ்நானம் செய்விப்பதும் சந்தனமுதலிய ஸுகந்தம் பூசுவதும் வாயால்துதிப்பதும், எவ்வளவோ மேலானதன்மையில் நம்மைக்கொண்டுவிக்காதோ? அ - ஆ - முதல் எழுத்துக்களையெல்லாம்பழக்கி, அவ்வெழுத்துக்களாலமைந்த புஸ்தகங்களை நாமேபடிக்கும்படி செய்து, படிப்பதால் வரக்கூடிய ஞானத்தையும், ஆனந்தத்தையும் நாமேதேடி அடையும் வழி செய்ததுபோல் விக்ரஹத்தில் நம் மனதைப்பழக்க, எழுத்துக்களினின்றும் பிரிவுருதசப்தத்தைப்போல விக்ரஹத்தினின்றும் பிரிவுருதகடவுளை வழிபடும் மார்க்கமும் கற்பித்து இருக்கிறதல்லவா! பிறந்து பள்ளிக்கூடம்போகும்வரையில் பொம்மைகளை கையிலே வைத்துக்கொண்டு யாட்டியோ பெண்சாதியென்றும், பாலனென்றும் குழந்தை என்றும் உண்மையாகவே பாவித்துவருகிறோமல்லவா? பின்னும்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து அ - ஆ - முதலிய எழுதி எழுதி, கைதேய்ந்து வாய்வலித்து - மனம்புதிய, உபாத்தியாயரிடம் கணக்கு வழக்கில்லாமல் உதைபட்டு, அத்தியக்ஷ ருவ ஆராதனைசெய்து வருகின்றோமல்லவா? இனிமேலே படிக்கப் படிக்க அதேவரிவடிவமெழுத்துக்களையும் அதற்குத்துணையாகிய படங்களையும் - உருவங்களையும் - படித்துவருகிறோமல்லவா? மில்டன் - ஷேக்ஸ்பியர் என்னும் பெயருடன் எழுதப்பட்டுள்ள படங்களும்; ஆசியா, இந்தியா முதலியவைகள் என்று எழுதப்படும் படங்களும்; நம்மனதில், உண்மையாகவே உள்ளவைகளைப் பதிப்பிக்கவே என்றேற்பட்டிருக்கின்றன அல்லவா! சடிதத்திலெழுதிய மில்டன் என்னும் பொம்மையைப் பார்த்ததும் மட்டும் அவன் எழுதியுள்ள புஸ்தகங்களின் ஞாபகங்களும், அவனது பிரயத்னங்களும் நம்மனதுக்குத்தோன்றுமானால் விக்ரஹாராதனம் மட்டும் கடவுளதுபாதாரவிந்தநிழல் சுகத்தைக்கொடாதென்னலாமோ? பின்னும்நாம்

வயதில்வளர்ந்த எத்தனையோபேரை அவர்களது தேகத்தில் [illegible] பசாரநடத்தி திரப்திசெய்துகொண்டோமிப்படியே கிரம [illegible] ஆராதனைச் செய்கிறோமல்லவா? மற்றைய எல்லாவி [illegible] ஆராதனம் செய்துகொண்டுவருபவர் கட [illegible] மட்டும் [illegible] த்தில் ஆராதனம் செய்யோமென்றால் அ [illegible] பேய்களென்றேயல்லவா சொல்லவேண்டு [illegible] ஐயா! நமது மனதுக்கு ரூபமொன்றுமில்லையென்று [illegible] யாதாரமில்லாததாலேதானே "யானைக்காட்டி மானைப்பிடித்தல்" [illegible] கடவுள் விக்கிரகாராதனையை சட்டமாகவே [illegible] னார்! இன்றைக்கு எவனெவனுக்கு எதிலெதில் பக் [illegible] அதுவே எப்போதும் வியவஹாரங்களில் ரூபகத்தில் [illegible] உதாரணமாக, ஒரு பரிசாரகன் இறந்து [illegible] பேசும்போது, "ஐயோ! என் [illegible] தம்பி இறந்துவிட்டானே [illegible] தவலை [illegible] மன்னன், [illegible] ஆயிரம்பேருக்கென்ன [illegible] செய்துவிடுவானே," என்று புலம்புவதை நாம் [illegible] அதுவன்றி; [illegible] "பயல், [illegible] இந்த [illegible] என்று சொல்ல [illegible] ஒரு [illegible] அதில் ஒருவன் [illegible] என்றும், ஒருவன் [illegible] ஒருவன் [illegible] இவர்களில் ஒவ்வொருவனும் [illegible] [illegible] சண்டை [illegible] [illegible] இருந்தால் [illegible] தானல்லவோ [illegible] எல்லாருடையதும்போல் [illegible] மட்டும் [illegible] [illegible] மட்டுமே [illegible] அல்லவா? வீட

னின் கண்ணுக்கு, இவள் நல்ல அழகி! அவளுக்குக் கூந்தல்
ஜாஸ்தி! இவள் பார்க்கிறதைப்பார்! அவள்கொண்டை எப்படி
யிருக்கிறதுபார்! இவள் கண்கள் எவ்வளவு நீளம்பார்!
என்னும் வியவஹாரங்கள்தானே புலப்படும்? வேறு, அந்தநி
ர்மாதத்திலுள்ள விஷயங்களில் அவன்மனம் பிரவர்த்திக்குமோ?
தட்டானின் கண்ணுக்கு; இந்த ஸ்திரீகளென்ன புதுமாதிரியா
யிருக்கிறது, அந்த தோடா என்ன நம்மநாட்டுவேலைபோலி
ல்லை, இதென்ன புதிதான ஆபரணம் இவர் அணிந்திருக்கி
றார். அதில் ஒருபுறத்தில் கல்லுவைத்து ஒழுங்காக வேலை
செய்திருக்கிறது பார், என்னும் விஷயங்கள்தானே புலப்ப
டும்! அங்குள்ள சித்திரங்களிலாயது, அல்லது அழகிய கூந்த
லிலாவது அவன் ஞாபகஞ்செல்லுமோ! டப்பாசாரியாயி
ருப்பவன்: அடே! இவன்காலுமுழம் சரிகையுள்ள வஸ்திரங்
கட்டியிருக்கிறான் பார்த்தையா! அவன் தலை கொண்டை எ
ன்ன வளைவாயிருக்கிறது பார்த்தையா! என்பவைகளைத்தானே
கவனிப்பான்? இப்படியாக நாம் எவ்வளவோ அந்தவிஷயங்
களிலும் யார்யாருக்கு எதிலெதில் பழக்கமோ அதிலதிலேயே
அவர்கள்மனது செல்லக் கண்டிருக்கிறோமன்றோ? அவ்வாறாய்
பரமேசுவர ஆராதனத்திலேயே நமதுமனதைப்பழக்கிவந்தால் ந
மது வியவஹாரங்களெல்லாம் அந்தவிஷயங்களாகவே யமைந்தி
ருக்குமன்றோ! நாமும் மேற்சொல்லிய நால்வருடன்போ
யிருந்தால் நமது கண்ணுக்கு கொடிநடைகளிலும் பெரிய புஷ்
பவனங்களிலும் இவைபோன்ற மற்றவைகளிலும் தானே
புத்திசெல்லும்? நாம் காணும் எதிலும், நாம்கேட்கும் எதிலும்,
நாம் முகரும் எதிலும், இம்மாதிரியாகவே நமது புலன்களைத்
தொழிற்படுத்தும் எல்லாச் செயல்களிலும் பரமசிவஸம்
ஸம்பந்தமே புலப்பட்டு இவ்வுலகப்பற்று அறவே நம்மைவிட்
டுவிட நாமெங்கும் சிவமாகவே தியானிக்கவருமல்லவா! "அ
ன்வைத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்—தானுவினோ
டத்துவிதஞ் சேருநாளெந்நாளோ?" என்று புலம்பும் ஸ்ரீதா
யுமானவர் விரும்பிய விருப்பம் விக்ரஹ ஆராதனத்தால் தானே

கை கூடும்? மெய்ஞ்ஞானத்தாலுவோடு அத்வைதமடைவது ஒன்றேயல்லவா பாசத்தாலலக்கணுற்றழியும் நாமெல்லாரும்விரும்புவது? அந்த அத்வைதத்தை அடைய சுலபமானவழி விக்கிரஹாராதனமாக இருக்கும்போது நாமேன் அதைக்கைவிடவேண்டும்? ஆகையால் விக்ரஹாராதனம் அத்யாவசியமாயிற்று. இதை யிம்மட்டில் நிறுத்திவிட்டுப் பின்விஷயங்களையும் யோசிப்போமாக.

III—அநுபவம்.

நம்பெருமக்க ளெல்லாம் இந்தவிக்ரஹ ஆராதனமே செய்துவந்தார்களென்பதை இப்பொழுதுள்ள பிரம்மாண்டமான கோயில்களே காட்டும். இந்த கோயில்கள் கட்டியுள்ள அழகே நம் முன்னோரது புத்திவிசாலத்தைக் காட்டுகின்றதலவோ? அவ்வளவு புத்தியில் ஆயிரத்தில் ஒரு பங்குமில்லாத நாம்தானு குறை குடம் தளம்புமென்பதை ருஜுப்படுத்தும் பிரத்தியக்ஷஸாக்ஷியங்களாக (Living Examples) விக்ரஹாராதனத்தை மறுப்பது! நாஸ்திகச் சிரேஷ்டர்களான, கிறி...வரில் சடையாயரும், உலக இன்பமே பெரிதென்று எண்ணுடவரும் ஆகிய புரொடஸ்டாண்ட் என்னும் வகுப்பினரின் கூட்டுறவாலேயே இப்போதைய பாலியர்களுக்கு விக்கிரஹாராதனத்தில் விரோதபாவமுண்டாகிறதன்றி வேறுயா...தான் அவ்விஷயத்தில் விரோதமுண்டு?

நண்பர்களே, மேலிருந்து கீழே வருதல் அதிஸுலபம். அதுபோல் நமது நல்ல ஆசாரங்களை விட்டு ஈனர்களாகிய கிறிஸ்தவர்களின் துராசாரங்களையும், கோணல் புத்தியையும் கிரஹிப்பது அதிஸுலபம் - இதற்குநாம் பிரயத்னப்படவேண்டியதுகூட இல்லை. கீழிருந்து மேலேபோவதுவருத்தம். ஆதலால் நுனிப்புல்மேயும் பேய்க்கிறிஸ்தவர்களும் அவர்களது கூட்டுறவால் கெட்டபெருங் கேடர்களும், விக்ரஹாராதனத்தின் மேலான தன்மையை அறிவதுவருத்தம். நாமோ மேலான அந்தஸ்திலேயே இருப்போராதலால் நம்ம இருப்

யைமட்டும் காப்பாற்றினால் போதும். ஆதலால் கனம்வைத்த, ய! பெரியோர்களே!! நம்ம பெருந்தன்மையை அறிந்து உய்யுங்கள். ஒட்டறைப்பாவிகளெல்லாம் கவிர்த்திருமாறும் அரசர் மகன் தன் பெருந்தன்மையை இழக்கமாட்டாதிருப்பதுபோல் நமது நல்ல ஆசாரங்களை இழக்கமாட்டீர்கள். விக்கிரஹாராதனமே உங்களை மோக்ஷத்துக்குக்கொண்டுபோகக் கூடிய பல்லக்கென்று அறியுங்கள். இப்போது விக்கிரஹாராதனத்தின் அருமையை அறியவேண்டுமானால் சண்டேசுவரப் பெருமானது பெரும்பதவி எப்படி வந்ததென்றும், ஸ்ரீ திருவள்ளூர் ஸ்வாமியின் கர்மாந்திர உத்ஸவம் எப்படிவந்ததென்றும் ஆலோசியுங்கள்.

இவ்வளவு பெருமையுடையதாய் விக்கிரஹாராதனமிருக்கவும், அதைச்செய்யும் பாக்கியம்பெற்ற மனிதர்களாது வம்சத்துதித்த நாம் வீணேகாலம் போக்குவதேன்? பண்டைக்காலந்தொட்டு, விக்கிரஹாராதன விசேஷம், அநுபவத்தில் நடந்துள்ளதல்லவா? கடவுளை ஒரு நிமிஷமும் பிரியாத பிராட்டியாரும் கம்பாநதியில் பூஜித்தது சொன்னோமே. இன்னும் கேளுங்கள். நமக்கெல்லாம் அருமையில் அருமையாய முன்னப் பிரமாணங்கள் நான்குவேதங்களுமே. அந்தவேதங்களே சிவபெருமானைப் பூஜிக்க எண்ணி, இப்பூலோகத்தில் வேதாரண்யமென்று இப்போது சொல்லும் ஸ்தலத்தில் வந்து தம்மனோரதப்படிப் பூஜித்துப்போயின என்றால் நமக்கு அந்தப்பூஜையினும் வேறு விசேஷமுளதோ? நமது திருவானைக்காவில், அம்பாள் பரமகருணைசாலியும், தன்னைவிட்டு நீங்காதவருமான ஐயனைப் பூஜித்துவந்ததற்கு பிரத்தியக்ஷ ஸாக்ஷியுமிருக்கிறதல்லவா? நம்மவர்கொள்ளும் கடவுள் இந்த ஒரு அண்டத்துக்கு மட்டுமென்றாவது, மனிதர்களுக்கு மட்டுமென்றாவது அல்லாது, இதுபோன்ற பலகோடி அண்டங்களுக்கும், முன்னும் பின்னுமுள்ள பலவகை யான்மாக்களுக்கும் அருள்புரிபவ ரென்பதற்கும் எவ்வளவோ பிரமாணமுள்ளன அன்றோ? இந்த உண்மையை எறும்பு பூஜித்து எறும்பீசுவ

நமென்றும், யானை பூஜித்து ஆனைக்காவலென்றும், வைகுந்தவாசியாகிய கமலை பூஜித்துக் கமலாலயமென்றும், நாகலோகத்தரசன் பூஜித்து நாகநாதனென்றும் வழங்கும் விஷயங்களை காட்டுமாதலால் நம்மனுபவமெட்டியவரை விக்ரஹாராதனமே விலாக்கியமென்று காணப்படுகிறதல்லவோ? கடவுளும் பிருதிவியினின்றும் திருவாரூரிலும், அப்புவினின்றும் திருவானைக்காவலிலும், தேஜஸ்ஸினின்றும் திரு அண்ணாமலையிலும், வாயுவினின்றும் ஸ்ரீ காளாஸ்தியிலும், ஆகாசத்தினின்றும் ஸ்ரீ சிதம்பரத்திலும், ஸூரியனினின்றும் சாயநந்திரி மு[illegible]பரத்திலும் எல்லாங் கலந்த விக்ரஹத்தினின்றும் எல்லா யோர்களிடத்தும், சந்திரனினின்றும் சாந்திராயணரிடத்தும், ஆன்மாவினின்றும் யோகிகளிடத்தும் பூஜையேற்று வருகிறாரல்லவா? ஆதலால் விக்ரஹாராதனம் ஒன்றே நம்மை அதிஸுலபமாய் நித்யானந்த நிலையிலிருத்துமெனத் தோன்றுகின்றது. அன்றியும் கிறிஸ்தவர்களுக்குள் ஆதிவகுப்பாராகிய ரோமானியரிடம் இந்த ஆராதனம் காணப்படுகிறது. அப்படியே மகமதஸ்தர்களும் ஒவ்வொருவிதமாக விக்ரஹாராதனம் நடத்திவருகின்றனர். இவற்றையெல்லாம் விஸ்தரித்தெழுதுவது காலநாசம் செய்யுமென்று நீக்கி இத்துடன் சுருதி, யுக்தி, அநுபவமென்னும் மூன்றையும் நிறுத்துவோம். ஆனால் சுருதி, அநுபவமிரண்டிற்கு மிவ்வளவு சொல்லியது போதுமென்றாலும் யுக்திவிஷயம் போதாது. நமது கக்ஷிக்கு ஸாதகமாகச் சொல்வதுடன் பிறரது கோணல் யுக்திகளுக்கும் தடைசுத்தி செய்துப்புவதே நமது நிலைமையை உறுதிசெய்யுமாதலால் அப்படியே செய்வோம்.

(1) எங்கும் நிறைந்தவராகிய கடவுளை கல்லில் வணங்கலாமா? என்று நம்மெதிரிகள் கேட்பார்கள். இதற்கு நாம் சொல்வதோ என்றால்; கடவுளோ எங்கும்நிறைந்தவர்; எங்கும் என்பதில் நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான பலவும் அடங்குவதால், அதின் விஸ்தீரணமிவ்வளவென்பதே நமக்குத் தெரியாது. அது அளவிலடங்காதது, அப்பேர்ப்பட்ட வி

சலமான இடத்தில் கடவுள் நிறைந்திருப்பாரேயாகில் அவரை யெப்படி தியானிப்பது? இடமே தெரியாது; இடத்தில் நிறைந்த கடவுள் எப்படி தெரிவார்? நாமோ சிற்றறிவுடையோர், நமது சிற்றறிவில் ஸர்வவியாபகத்வமுள்ள தன்மை எப்படிப்படும்? நமக்குத் தெரிந்தது இத்திருச்சிராப்பள்ளி; இதில் மழை, ஊர் முழுதும் பெய்ததென்று நான்சொல்லுகிறேன். சொன்னாலும் திருச்சிராப்பள்ளி முழுவதும் பெய்தமழையின் விஸ்தாரணமிவ்வளவென்று இங்கிருக்கும் யாராவது எண்ணமுடியுமானால் ஸத்யமாய் சொல்லுங்கள். அதோ கேவலம் அஸாத்தியம். மயிலந்தக்கைப் பக்கங்களை ஞாபகத்துக்குக்கொண்டுவந்தால் காவேரிப் பக்கம் மறந்துவிடும்-ஒருபக்கம் நினைக்கவும் ஒருபக்கம் மறக்கவுமே முடியுமன்றி ஏககாலத்தில், மாரியான திருச்சிராப்பள்ளி முழுவதையும், அதில் பெய்யும் மழை முழுவதையும் எப்படி ஒருவன் நினைக்கக்கூடும்? மழையும் நாம்காணாத அரூபப்பொருளல்ல, திருச்சிராப்பள்ளியும் அப்படியே. இப்படியிருந்தும் நமதுமனம் நினைக்கத்தடுமாறுகிறதென்றால் தெரிந்ததும், தெரியாததுமான எல்லாம் சேர்ந்து ஆன எல்லாமென்னுமிடத்தில் எப்படித்தியானிப்பது? ஆதலால் சிறிய இடத்தில் மனதுக்கு முழுவதும் அகப்படியான விக்ரஹத்தில் அமைத்து ஆராதிக்கவேண்டும்; அல்லாமலும், மாட்டிற்கு உடம்பு முழுதும் பாலாயிருப்பினும் அதை முலைக்காம்பாலேயே கறக்கிறோமல்லவா? ஆதலால் விக்ரஹாராதனைக்கு ஒருதோஷமுமில்லை. அன்றியும், எங்கும் கடவுளிருப்பது மெய்யானால் விக்ரஹத்தில்மட்டும் இல்லாமற்போவாரோ? ஆகையால் அங்கும் நாம் கடவுளை யாராதிப்பதிலென்னதோஷம்? அங்கு கடவுளில்லை யென்றால் எங்கும் நிறைந்தசக்தியே கடவுளுக்கில்லை என்னவேணும். அங்கு கடவுளிருக்கிறாரென்றால் பூஜிக்கயோக்யமான இடமாக அதைக்கொள்ளவேண்டும். தேகமுழுவதும் கலந்து தேகத்தோடு அத்வைதப்பட்டிருக்கும் ஆன்மாவாகிய நாம், தேகத்தின் ஒருபாகத்திலடித்தால் என்னையடித்தானென்று ஆன்மாவ

கிய தனக்கு முழு ஆக்ருதியிலும் அடிபட்டதாகச்சொல்லும் உலகவழக்குக்கு என்னகதி தேவை? ஒவ்வொரு அங்கத்தில் தானே மரியாதைகள் செய்யமுடியும்? அங்கிலேயநாட்டிலிருந்து கொள்ளைகட்டிக் கொண்டுபோக இந்தியாவுக்கு வரும் வெள்ளைமேனியர்களுக்கு மரியாதையாக அவர்கள் கழுத்தில பூமாலைபோடுவதும், அல்லது கடியாரச்சங்கிலி மாட்டுவதும், வழக்கமாயிருக்கிறதே. தேகம் முழுதும் வியாபித்த ஆன்மாவுக்கு அந்தத்தேகத்தோடு ஸம்பந்தம் சேர்ந்தேபெற்று அதற்குமேலுறையாகவுமுள்ள சொக்காயில் தங்கச்சங்கிலிமாட்டுவது அந்தமுழு ஆன்மாவையும் திருப்திசெய்ததாய் முடிகிறதல்லவா? அதுபோலவே தான் எங்குமுள்ள பரமனுக்கு அவனது அஷ்டதநுவிலொன்றாகிய பிருதிவியாலமைந்த விக்ரஹஸ்வரூபத்தில் ஆராதிப்பதும். இன்னும்; எங்கும் நிறைந்த கடவுளை விக்ரஹத்தி லாராதிப்பதே நல்லது. மற்றெல்லா இடங்களிலுமுள்ள கடவுள் விக்ரஹத்திலு மிருக்கிறாரன்றோ? எல்லா இடங்களையும்போல் கடவுளுக்கு உறைவிடமாய் இருப்பது மட்டுமல்லாது விசேஷத்தன்மையும் விக்ரஹத்தி லிருக்கிறதன்றோ? பரமகருணாசாலியான எம்பெருமான் பற்பல ஆன்மாக்களுக்கும் அவரவருக்கு அறியக் கூடியவகையால் ரூபியாகவும், அரூபியாகவும், ரூபாரூபியாகவும் அன்றோ வெளியாவான்! நாமறியக்கூடியவிதம் ரூபமன்றோ? அந்த ரூபத்தையல்லவா விக்கிரஹத்தி லாராதிக்கிறோம்? எத்தனையோ பொம்மைகளிருருப்பதை யெல்லாம் நாமாராதிப்பதுண்டா? கடவுளது அருவுருவம் ஒன்றைத்தானல்லவோ நாமாராதிப்பது? விக்ரஹத்தில், எங்கும நிறைவதாம் தன்மையுடனும், அருளும் ரூபத்துடனும் பரமனது ஸன்னிதானமிருப்பதால் அந்த அருவுருவமில்லாது, எங்கு நிறைந்ததன்மையை மட்டும் கொண்ட மற்றைய இடங்களி லாராதிப்பதைவிட விக்ரஹத்திலாராதிப்பதே விசேஷமாக முடிகின்றது! ஒரு பிரபுவைக்கண்டு தன்மனோரதத்தை அடையவேண்டி எண்ணிய ஒருவன் அப்பிரபுவின் இடமாகிய வீட்டுக்குப் போய் காக்கவேண்டியது உண்மை

தான். அப்படிகார்க்க ஸம்மதித்துப்போயும், அப்பிரபு எந்த வாசற்படியால் தினம் வெளியாகும் வழக்கமோ அந்த வாசற்படியில் காத்திருப்பதில் லாபமுண்டோ, அல்லது அந்த பிரபுவின் வீட்டை அங்குமிங்கும் சுற்றித்திரிவதில் லாபமுண்டோ? நாமொரு இடத்தில் சுற்றும்பொழுது அவர் ஒருவழியால் வெளியாகி அங்கு நின்றவர்க்கு வேண்டியன அளித்து உள்ளே திரும்பிப்போய்விட்டால் வீட்டின் புறமெல்லாம் சுற்றும் நமக்கு நஷ்டமேயல்லவா? சுலுவாக லாபமடைவதை விட்டு விட்டு நெடுந்தூரமலைவதும், நெடுங்காலம் போக்குவதும் நியாயமா? எங்கும் நிறைந்த பிரபுவை யாராதித்து, அவனிடமருள்பெற்று நமது துக்கத்தைப் போக்கிக்கொள்ளவேண்டிய நாம் அவன் வெளிப்படும் ரூபத்தையாராதித்தாலன்றோ சுலுவில் லாபம் அடைவோம்? அந்த வெளிப்படும் ரூபம் விக்கிரகத்திலல்லவா இருக்கிறது. அல்லாமலும் நமது விரோதிகள் கடவுளை எங்குமிருப்போனாக ஆராதிப்பது உண்டோ? மனதால் ஒருருச் செய்து அதில் தானே ஆராதிக்கமுடியும்? அந்த மனதும் "எங்கும்" என்னுமிடமல்லவே!! எங்குமென்னுமிடத்தில் கடவுளை யாராதிப்போர், எல்லாம் கடவுளாகவே கண்டபெரியோரன்றோ! அது நமக்கு எள்ளளவும் கிட்டாததாகவுமிருக்க விளையுவதில் பயன்யாது? ஆகவே மேற்படி நமது விரோதிகள் கேட்டகேள்வி வாயில் மண்ணைப் போட்டுக் கொண்டழுந்தது.

(2) அரூபியாகிய கடவுளை ரூபியாய் வணங்கலாமா? என்று கேட்பார்கள். அதற்கு நமது பதிலோ அப்படித்தான் வணங்க வேண்டுமென்பது. ஏனெனில் நமது மனதுக்கு ரூபத்தைத்தவிர வேறொன்றையும் நினைக்கத்தெரியாது. ரூபம் ஒன்றே மனதில் நன்றாய்ப்பதியக்கூடியது. ரூபத்தாலேயே உலகமெங்கு மன்பு நடந்து வருகிறது. தனக்கு நினைவுவருவதன் முன்னாருருவனுக்குத் தகப்பனிறந்துவிட்டதும்; மற்றொருவனுக்கு நினைவுவந்து நெடுநாளாய்ப் பின் தகப்பனிறக்கட்டும். இந்த உதாரணம் ஸாதாரணமாய் உலகில் யதேஷ்டம் கிடைக்குமே. இவ்விரண்டுபேரில் எவனுக்குத் தன்தகப்பன்பேரில் விசுவாச

மும் பயமும், பெயரைக்கேட்டமாத்திரத்தில் வியஸனமும் உண்டாகிறது? தகப்பனது உருவத்தைக் கண்டனுபவித்தவனுக்கே அல்லவா? அன்றியும் கன்றிழந்தமாட்டுக்குக் கன்று போல் உருச்செய்துவைத்துப் பால்கொள்ளுகின்றார்களே யதெப்படி? ரூபமே அதற்குப் பழக்கத்திலிருந்ததாலல்லவா? ஒருவனுக்கு அவனது அருமையான, தலைமகன் இறந்துவிட்டபின் அவன்தன்மகனை மனதில் நினைத்துக்கொண்டு, அழுகைசெய்வனேறு? தன்மகனைக்கண்ணாலே காணவேயன்றோ அவன்மனம் எண்ணும்? அல்லாமலும், கடவுள் அரூபியேயென்று யாவர்சொல்லக்கூடும்? நமது சைவத்திலோ,

"சோதியாய்த் தோன்று முருவமே,
அருவா மொருவனே சொல்லுதற்கரிய
ஆதியே, நடுவே, யந்தமே, பந்த
மறுக்கும் ஆனந்தமா கடலே,
தீதிலாநன்மைத் திருவருட் குன்றே,
திருப்பெருந்துறை யுறை சிவனே,
யாதுநீ போவதோர் வகை? எனக்கருளாய்,
[illegible] துன் னிணையடி தந்தே."

என்னும் பெரியோர் திருவாக்கின் படியே, உருவம், அருவம், எல்லாங்கடந்தவன் சிவன், என்றும்; அவன் ரூபியாவதும் அரூபியாவதும் ஆன்மாக்கள் நிமித்தமென்றும் சொல்லியுள்ளது. வைஷ்ணவம் முதலிய நமது இந்தியாவின் மதங்கள் யாவும் கடவுளுக்கு ரூபம், அரூபம் இரண்டும் சொல்லுகிறதேதவிர அரூபம்மட்டும் சொல்ல இல்லை. அரூபமெப்படி நமக்குப் புலப்படுவதில்லையோ, அதுபோலவே கடவுளது நிஜமயரூபமும், ஸாதாரண நமக்குத் தெரியாததலால், மொத்தமாய்க் கடவுளை அரூபியென்றதே யொழியவேறில்லை. கிறிஸ்தவமதத்திலும் ரூபம் சொல்லியே இருக்கின்றது. பரமண்டலத்திலுட்கார்ந்திருச்சிறாரொன்றும், மனிதனைத் தன்னைப்போல படைத்து அவன் மூக்கிலூதினதொன்றும், பாபம்செய்து, இன்னவேண்டாமென்ற கனியைத் தின்ற ஆதாமேயானைத்

கூடப்பேசிக்கொண்டே நடந்துவந்ததாகவும், அவர்களை "நீங்கள் எங்கிருக்கிறீர்களென்று" கேட்டாரென்றும், சொல்லுதால் ரூபமில்லை என்னக்கூடாது. ஆகையால் கடவுள் அரூபியேயல்லவென்றும் அவரை அரூபியென்றதின் பொருளெல்லாம் வாக்கு, சொல்லாலும் மனதாலும் எட்டுவதற்கு அரியபொருள் என்பதே என்றும்; ஸாதாரண அரூபம், ரூபத்தைப்போலவே அவன்சொரூபம் ஒன்றெனவும் பெறப்படலால் உருவத்தில் பூசிப்பதுதான்யுக்தம். நமதுகண்ணுக்குப்புலப்படாது,கட்டையில் கலந்து எங்கும் பரவிய அக்கினிபோல அந்தர்க்கதமாயிருக்கும் ஆன்மாவுக்கு அமைத்தாங்கிய தேகத்திலேதானே யல்லவா மரியாதைகள் நடத்திவருகிறோம். அப்படியல்லவா பரமனுக்கும் அவனது தூலவாகிய பிருதிவியின் ஸமரூபவிகாரமான [illegible]ரத்தில் ஆராதிப்பது? இன்னும்; கடவுளது எப்பொழுதுமுள்ள தன்மையை நேரே அறிந்து அனுபவிப்பதற்குப் பொருமையுள்ளமை நமக்கிப்போது வந்துவிடவில்லை என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். கடவுள் ஆன்மாக்களுக்கருள் புரிவதற்காக ரூபங்கொள்வது வழக்கமென்று எல்லாமதத்தாரும் ஒத்து, நம்பியிருக்கின்றார்கள் என்று மேலேசொல்லியவைகளால் விளங்கும். அப்படி அனுக்கிரகார்த்தம் கடவுள் கொள்ளுகிற ரூபத்தை நாம் ஆராதிக்க கடவுளுக்கு கோபத்தை எப்படி உண்டாக்கும்? வெள்ளைச்சொக்காய், கறுப்புச்சொக்காய், சிவப்புச்சொக்காயென்று வேறுவேறுவிதமாயுடுப்புகளை போர்க்கும் ஒருவனை, வெள்ளைச்சொக்காயுடன் அவர் கொத்தகிலையில் படம்பாடமெடுத்து வைத்து மரியாதைசெய்தால் அவனை அவமதித்ததாகுமாமோ! ஆவதனமாகமாட்டாதென்றே யாவரும் ஒப்புவார்களாகையால் அப்படியேயான கடவுளது ரூபாராதனத்தையும் புத்தியுள்ள யாவரும் ஒப்புவாரென்பது நிச்சயமன்றோ? அதுவன்றி; கடவுளை அரூபியாக வணங்குவது ஆவதனமாகாதபோது ரூபியாகவணங்குவது மட்டுமேன் ஆவதனமாகும்? ரூபியாகவணங்குவது ஆவதனமாகும்போது அரூபியாகவணங்குவது எப்படி ஆவதனத்தில் நீங்கும்? அரூபமும் ரூபமும் கடவுளது நிஜஸ்வரூபமல்

லாது நாமறிந்தானந்திப்பதற்கென்றே ஏற்பட்டுள்ளனவாத
லால், ஒன்றிலொன்று எப்படித்தாழும்? நாமறிந் தானந்திப்ப
தற்கென்று ஏற்பட்டுள்ள ஒன்றைநாம் அமைத்து ஆனந்திக்
காவிட்டால் நம்மிடததுக் கடவுளுக்குள்ள பிரியத்தைத்தான்
நாம்பெறுவதென்று? அப்படி பிரியத்துடன் நமக்குக்காட்டும்
ரூபத்தை தினம் தினமா கடவுள் வெளியாக்குகிறார்? அன்பிற்
பழுத்துக் கொழுத்த எம்பெரியோருக்கு அவரறியும் வகை
யான ரூபத்தால் ஆண்டான் காட்டும் கோலத்தை விக்ரஹமே
யல்லவா காப்பாற்றி வைக்கிறது? ஆதலால் அந்தரூபமுள்ள
இடத்தில், அதாவது விக்ரஹத்தில், ஆராதிப்பது நியாய
மும், அவசியமுமே யாகின்றதன்றோ? அன்றியும்; நமது மன
தால் கடவுளது அரூபத்தை தியானிக்கமுடியாதென்றும், ரூப
த்தையேதான் தியானிக்கமுடியுமென்றும் சொல்லியுள்ளோம
ல்லவா? மனதோ மாறிமாறி வேறுவேறு யோசனைகளைச் செ
ய்வதால் இன்றொருவிதமாகவும், நாளை ஒருவிதமாகவும் கடவு
ளது ரூபத்தை எண்ணுதென்பதற்கு ஞாயமென்னா? அப்படி
அது வேறுவேறு மாதிரியாய்க் கடவுளுக்கு ரூபம் கொடுக்கு
மானால் அதுவல்லவோ தேவதூஷணையாக முடியும்? ஆதலால்
இன்றொரு ரூபத்தையும், நாளை ஒரு ரூபத்தையும் மனதாலெ
ண்ணி ஆராதிப்பதிலும் என்றுமொருபடித்தாய விக்கிரஹத்
தில் வணங்குவது [illegible]தாகும்? நமது வேதங்கள், கடோப
நிஷத் என்னும்பேரால் "അംഗുഷ്ഠമാത്രപുരുഷമദ്ധ്യയം" என்று
துதிப்பதுமல்லாமல், கைவல்ய உபநிஷத் என்னும் பெயரால்
"ഉമാസഹായം പരമേശ്വരം" என்றும் துதிக்கின்றன அன்றோ?
ஆதலாலிரண்டாம் கேள்வியு மிப்பொழுதொடிந்து வீழ்ந்தது.

(3.) அவையவங்களிருந்தும் தொழிற்படாக்கல்லைக் கடவு
ளாக வணங்கலாமா? என்பார்கள். இதற்கோ என்றால், நல்ல
பதில் எவ்வளவோ இருக்கிறது. அல்லாமலும் இன்றும்
சொல்லுவோம். விக்ரஹாராதனம் செய்வது பிசகென்றுசொ
ல்லி மாரடிப்பவர்களாகிய இப்பிணங்கள் தொழும்போதுமட்
டும் கடவுள் ஏன் என்கிறாரா? ஏன் என்றுசொல்ல வல்லமை

கடவுளுக்கில்லை யென்றால் அவரை ஸர்வ வல்லமையுடையவ ரென்பதுபிசகாகுமே. ஆதலால் ஸர்வவல்லமை யிருந்தும் "கடவுளே" என்றபோது 'ஏனென்றுமலும்' வியஸனப்பட்டு அழும்போது கண்ணைத் துடைக்காமலும், பசித்தபோது வந்து பரிசாரகம் செய்யாமலும் உள்ள கடவுளை வணங்கலாமா? என்றுயாம் கேட்கிறோம். இந்தமௌட்யாளெல்லாம்கும்புகூடி யோசித்துப் பதில் சொல்லட்டும். அதே பதில் அவையவமிருந்தும்தொழிற்படாததற்குச்சொல்லயாம்ஸித்தமாயுள்ளோம். கையிருந்தும் நம்மைக்கட்டியணைக்கவில்லையென விக்கிரஹாராதனத்துக்குத் தோஷம்சொல்லும்இந்தபுத்திசாலிகள் "பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே" என்றுமோட்டு உத்திரங்களைப் பார்த்ததும் "எண்டாப்பா!! ஜூசே!!!" என்று ஒருநாளாவது சொன்னதுண்டா? அனதுபற்றி அப்படி ஜபிப்பதை பிசகென்று விட்டுவிட்டார்களா? கடவுள் செய்கையென்ன? கூப்பிட்டதும் ஏனென்பதும் வருத்தம் வந்ததும் கட்டியணைப்பதுமா? இப்படியானால் வருத்தத்தை யோட்டுவது கடவுளல்லவென்றேற்பட்டு நாத்திகராய் விடவேண்டுமே. அவரவரது அன்பின் நிலைமைக்கும், பரிபாகத்துக்கும் தக்கபடி விக்கிரஹத்தினின்றும் கடவுள் வெளிப்படுவது உண்மைதான். விரிஞ்சிபுரத்தில் அருக்களுக்காக முடிசாய்த்ததையும் மார்க்கண்டேயருக்காக லிங்கத்திடமிருந்து புறப்பட்டதும், கண்ணப்பருக்காகக் கையைநீட்டிக் கையைப் பிடித்ததும், அடியவருக்காகத் திருநாரையூரில் மோதகம் பழமெல்லாவற்றையும் யாவரும் காண உண்டதும் உண்மையாகையால் பரிபாகத்துக்குத் தக்கபடி விக்கிரஹத்தினின்றும் தொழிற்படுவது உண்மைதான். நமக்குப் பரிபாகம் வந்தபிறகும்கூட அவசியமிருந்தால்தான் விக்கிரஹத்துக்குள்ள கையும் காலும் தொழிற்படும். இதே ஒழிய கடவுள் வைத்யம் பிடித்துப்போய்க் கூப்பிட்டதும் எண்டாப்பா ஆரோக்யம், என்பவரல்ல!! இவர்கள் கூப்பிட்ட உடனே, ஏசுவாவது, மகமூதுவாவது, புத்தருவது, ஸோராஸ்டராவது ஜெஹோவாவாவது, பிர்மஹமாவது, மஹாத்துமாக்களாவது, எண்டாப்பா ருப்பா!! என்று பதில் சொல்லித்

பதிலே நாமும் கேட்கச்செய்து, நாம் ஆராதிக்கும் விக்ரஹத்தி ல்மட்டும்பதில் வராதிருந்தாலொழிய இப்பேயர்கள் தெந்தி னங்களையெல்லாம் கௌரவம் செய்வோர் யாவர்? ஆதலால் மூன்றும்கேள்வைமுதலற்று வீழ்ந்தது.

(4.) ஒரே கல்லின் ஒருபாதி கடவுளாகவும் மறுபாதி கண் டபடி மிதிபடவும் செய்யலாமா? என்று வினவுவர். அதற் கும் பதில் சொல்வோம். அது ஸ்தான விசேஷத்தால். ஒரே அம்மைவயிற்றில் பிறக்கும் இருவரில் ஒருவன் உத்யோகம் பண்ணவும் மற்றொருவன் அவனுக்கு வண்டியோட்டவும் நேரிடுவதைநாம் கண்ணால் கண்டிருக்கிறோமே அதேன்! மூத்த பிள்ளையை ஒருமாதிரியும் இளையபிள்ளையை ஒருமாதிரியும் கலந்து பெற்றொன்று பெற்றவரிடம் தப்பிதம் ஏற்றலாமா? ஒருவன் கர்மம் வண்டி ஓட்டச்செய்கிறது. மற்றொருவனது கர்மம் வண்டி ஸவாரிசெய்ய விடுகிறது. ஒரே வயலில் முளைத்தவற்றில் களைகளைமட்டும் பிடுங்குவதேன் பயிர்களை மட்டும் விடுவதேன். மேல், கருக்காய்களைமட்டும் விலக்குவானேன்? நெற்களைமட்டும் அன்புடன் கொள்வானேன்? இவற்றிற் கெல்லா மென்னஸமாதானமோ அதுவே விக்ரஹாராதனைக்கல் விஷயத்திலும் மேற்படுகின்றது. இன்னும் ஒரேகால்வாயின் ஜலத்தில், ஒருபாதியை குடிக்கவைத்துக் கொள்வானேன். ஒருபாதி மலோபாதிவ்யயச் சுத்தம்செய்யவும், காலில்விடவும், சாணியில்விட்டுக் கரைக்கவும், இடந்தருவானேன்? சில ரோமங்களைமட்டும் எழுத்துகளாகக் கொண்டு மற்றவற்றை மதியாதிருப்பதேன். ஒரேஸ்திரீயைமட்டும் கட்டியணைக்கவும் மற்றையவர்களை விலக்கவும் செய்வதேன். ஒரே வீட்டில் உள்ள எல்லா இடமும் ஸமமாக எண்ணி நம்மெதிரிகள் கக்கூசு அறையின் அடுப்பின்மீது சமைத்துண்பார்களேயானால் அன்றே அவர்கள் நம்மை ஒரேபாகத்தை வணங்கலாமா? என்று கேட்கட்டும். ஒரே தேகத்தில் தலைமட்டும் கிரீடம் தரிப்பானேன். கால்மட்டும் ஜோடுபோடுவதேன்? எவனுவது தலையில் ஜோட்டை மாட்டிக்கொண்டு நாலுநாளளவும் தெருத்தெருவாய்ச் சுற்றுவானேயானால் அவன்மட்டும், ஒரே பாகத்தை வ

ணங்கலாமா? என்று மிந்தக்கேள்வி கேட்கட்டும். இந்தக்கே ள்விக்கு, சாந்தமான பதிலென்னவென்றால், எந்தப்பாதியை நாம் வணங்குகின்றோமோ அந்தப்பாதி கடவுளது அநுக்ரஹ ரூபத்தைப்பெற்ற விசேஷத்தால் தான் என்பதே. ஒரோநா மருபங்களால் வேறுபட்ட, பிரகிருதியின் தனித்தனியான அநேகம் பொருள்களில் ஸூர்யனது சக்தி ஸூர்யகாந்தக்கல் லில் விசேஷமாய்ப் பிரவர்த்திப்பதேன்? அதுபோலவேதா ன் கடவுளது சக்தி அவரது அநுக்ரஹ ரூபமுள்ள விக்ரஹ த்தில் பிரவர்த்திக்கிறது. அப்படி பிரவர்த்திக்குமிடமானதா ல் தான் ஒரேபாதியைக் கடவுளாக வணங்க இடமுண்டாயி ற்று. இதுநிற்க; இதேமாதிரி நாமும் ஒருகேள்விகேட்கி ன்றோம், நம்மெதிரிகள் யோசித்து பதில்சொல்லட்டும். அவர்க ள் சொல்லும் பதில் நமக்கும் ஸாதகமாவதுதானோ அல்ல வோ என்று அவர்களே யோசிக்கட்டும். ஒருமனிதனுண்டா கும் ஒரு தோற்றத்தை அபஸ்மாரமாகவும் இன்னொன்றைக் க டவுளாகவும் என்னுவதேன்? என்றுதான் நாம்கேட்கிறோம்!! இப்படி யனந்தமாயுண்டாகையால் ஒரே கல்லைக்கும்பிடுவதே ன், ஒருகல்லை மிதிப்பதேன் என்னும் கேள்வி யழிந்தொழிந்தே மாண்டது.

(5.) இனி, யாவராலும் படைக்கப்படாக் கடவுளை நாம் ப டைத்து வணங்கலாமா? என்றும் [illegible]வுளால் படைக்கப்பட் ட கல்லையே கடவுளாகவைத்து வணங்கலாமா? என்றும் கே ட்பார்கள். இவற்றிற்கும் பதில்சொல்வோம்.

நாம் பூஜிக்கவேண்டி யிருப்பதால் நாம்தான் படைக்கவே ண்டும். நாம்படைக்கக் கூடாதெனில், வேறு யாராவது ப டைக்கவேண்டும். யார்படைத்தாலென்ன? ஆராதனத்தைப் பற்றிப் பேசவந்தோமே யொழிய படைப்பைப்பற்றிப் பேச வர இல்லையே. அன்றியும் கேட்கும் கேள்வியே மூடக்கேள் வியாயிருக்கிறதே!! படைக்கப்படாக் கடவுளென்றும், நாம் படைக்கலாமா, என்றும் கேட்கும் பிரச்சினங்கள் ஒவ்வொ யொன்று உதைத்துக் கொள்கின்றனவே. நாம் படைக்கலா மா என்றகேள்வி, நமக்குப்படைக்குந் தொழிலுண்டென்று

ஸ்தாபிக்கிறது. நமக்குப்படைக்குந் தொழிலுண்டென்னும் போது "யாவராலும் படைக்கப்படாத" என்று சொல்வது பேய்த்தனம். நாம் படைக்கிறோம் என்றும், யாராலும் படைக்கப்படாதவர் என்றும், முரணியதன்மையுள்ள விறு அஃது பாரமில்லாமற் போய்விட்டது. அன்றியும், கடவுளையா படைக்கிறோம்? கடவுளது ரூபத்தையல்லவா படைக்கிறோம்· படைக்கும் சக்தியும்நமக்குப் பிரத்யக்ஷக்காக்ஷியா யிருந்தும் படைபடாத்தன்மை சொல்வது பிசகல்லவோ? அதவும் கடவுள் ஏற்ற ரூபத்தையாவது நாம் படைந்தோமா? அந்த ரூபம்போலல்லவா கல்லில் ஒருருப்படைக்கின்றோம்? ரூபமே படைக்கக்கூடாதென்றால் தியானமே செய்யக் கூடாதென்றல்லவோ ஆகிறது? பாராத ஒன்றை தியானிக்க முடியாதென்பது பசுமரத்தாணியறைந்தாற்போலநாம் முன்னமேயே, தீர்மானம் சொல்லியிருப்பதால், பார்த்த ஒன்றையே அல்லவோ தியானிக்கமுடியும்? பார்வையென்னுந் தொழில் ரூபத்தினிடம் பிரயோகப்படுமே யொழிய ரூபமில்லாவிடத்து பயன்படுதல் கிடையாதே. ஆலால் ரூபத்தை நாம் படைக்கக்கூடாதென்றால் தெய்வாராதனமேகூடாதென்று சொல்வதாக முடிகின்றதே! தெய்வாராதனம் செய்யாதவர்கள் தெய்வத்தின் இருப்பையே ஸந்தேகிக்கும் நாஸ்திகப்பேய்க ளல்லவா? நாஸ்திகர்களுக்கு இன்றி ஆஸ்திகருக்கே இன்று யாம் பிரஸங்கிப்பதால், நாஸ்திகர்கள் இன்று பேசகியாயமில்லே. கல்லால் செய்யப்படும்போது கடவுள் படைக்கப்பட்டாரென்றும், ஆதலால் கடவுளுக்கு அபாவம் வந்ததென்றும் சொன்னால், மனதால் தியானிக்கும்போது மட்டும் மனதில் கற்பிக்கப்பட இல்லையா? அப்போதுமட்டும் கடவுளுக்கு அபாவம் வர இல்லையோ? பாவித்தேதியானிக்கவேண்டும், பாவம் படைப்பைச்செய்யும். ஆனல் படைத்துத் தொழக்கூடாதென்றார்கள். ஆதலால் தியானம் நீக்கமடையும். ஆதலால் நாத்திகத்வம் லபிக்கின்றதே யொழிய வேறென்ன? அதிகமாய்ச் சொன்னாலும் புத்தியில்லாதவர்களுக்கும், பரிபாகமில்லாதவர்களுக்கும் விளங்குவதில்லே ஆனால் முதல்விஷுவுக்குப்பதி லித்

துடன் நிறுத்துகிறோம். இதுகாறும் சொல்லிவந்த நியாயங்களால் நாமேயடைந்து நாமேதான் பூஜிக்கவேண்டுமென்றேற்படுகின்றது. ஜான் என்றும், ஜேம்ஸ், என்றும் பெயர்கொண்ட ஜனங்களுக்குப் பிறந்து, பண ஆசையால், நமது, "பாலொழுகித்தேனொழுகும்" இந்தியாவுக்கு வந்து, தான்செய்யவேண்டிய வேலையைக்கூட ஸரியாகச்செய்யாமல் ஊருக்குத் திரும்பும் வெள்ளைமூஞ்சிகளை இவர்களேன் பளிங்குக்கற்களாலும், மெருகுக் கற்களாலும்படைக்கிறார்கள்என்று நாம்கேட்கின்றோம். அதற்கிவர்களே பதில்சொல்லட்டும். நம்மபதிலைத் திருடாதபடிப் புதியயுக்திகளால் சொல்லட்டும். அப்போது கூட அதே நியாயங்கள் நமக்கு முண்டல்லவா என்று நாம் கேட்போம். மனிதனுக்குமட்டும் நன்றி யுணர்ந்தவனென்று காட்டவும், தெய்வத்துக்கு நாமம் சாத்துவோமென்று வெளிப்படவும் இப்பேய்கள் ஏற்படுவது அவர்கள் வினையுள்ளவாறே ஒழியவேறன்று! வேறன்று!!

பின்னர், கடவுளாலுண்டாக்கப்பட்ட கல்லையே கடவுளாக வணங்கலாமா? என்றார்கள். இதற்குப்பதிலுஞ்சொல்லவேண்டுமோ? கல்லைவைத்துவணங்காவிட்டால்வேறெதைப[illegible]வைத்துவணங்கவேண்டும்; கடவுளால் ப[illegible]க்கப்படாததேதேனும் உண்டோ! எல்லாம் கடவுளாலே[illegible]படைக்கப்பட்டிருப்பதாலும், நமது உபகாரத்துக்கென்[illegible] படைக்கப்பட்டிருப்பதாலும், கடவுளால் படைக்கப்படாதது ஏதேனு மிருந்தால், கடவுளுக்கு ஸர்வஸ்ருஷ்டிகத்வம் நீங்குவதாலும், நமது உபயோகத்துக்கன்றிவேறாக ஏதேனுமிருந்தால், கடவுள்பயனில்லாதன செய்கின்றானென்றாவது "வேண்டுதல், வேண்டாமை" யுளானென்றாவது ஏற்படுவதாலும் இவர்கள்கேள்வி அகௌரவமேபெற்றது. பின்னர் நாம்யாரைக் கடவுளென்கின்றோமோ அவர் கடவுளல்ல என்றேற்பட்டு நமது ஜென்ம (ருமி) நாத்திகரது கொடுங்கையில் அகப்படுமே!! நமது மனதும்கடவுளாலேயே படைக்கப்பட்டதாதலால், அதாலும்வேறெதாலும் கூட நியாயிக்கமுடியாமல் நாமும் நாத்திகம் எய்தவேண்டுமோ? ஆதலாலிதை இத்துடன் நிறுத்துகின்றோம்.

(6.) இனி, என்றுமழியாக் கடவுளை அழியும்பதார்த்தத்தில் தியானிக்கலாமா? என்றும்; நம்மா லழிக்கக்கூடிய ஒன்றை நாமேவைத்து வணங்கலாமா? என்றும்; கேட்பார்கள். இதற்கும்பதில் சொல்வோம். அழிவதென்றால் அர்த்தமென்ன? இல்லாமலே போய்விடுவதல்லவே! நம்மால் காணப்படும் பதார்த்தங்கள் ஒன்றாவது இல்லாமற்போகக்காணேமே. என்; நேற்றிருந்தோனை இன்று காணேமே! என்றால்; நேற்றிருந்தவனை இன்று காணாததால் அழிந்ததாய்ச் சொல்லலாமோ? இன்று இவ்வூரிலிருந்தவன் நாளைக்கு வேறூருக்குப்போய் புது மாதிரி உடுப்புகளைத் தரிப்பானானால் நேற்றிருந்தவன் இன்று இறந்ததாக இவ்வூரார் சொல்லலாமோ? அன்றியும் நேற்றிருந்தவன் என்றால்அவன்ஆன்மாவைப்பற்றிபேசும் பேச்சா? அல்லது அவன் தேகத்தைப்பற்றிப்பேசும் பேச்சா? நாஸ்திசர் நீங்கலாக மற்றயாவரும் ஆன்மா அழியாததென்றே சொல்வதால் அழியும் தன்மை ஆன்மாவின் மீது ஏற்றப்போகாது. தேகத்தின்மீது ஏற்றலாமோ என்றால் அது ஒரு ரூபத்தில் இருந்து மற்றொரு ரூபத்துக்கு மாறிவிட்டதே யொழிய அழிந்து ஒன்றுமில்லாத சூனியமாய் விடவில்லை. இப்பேர்ப்பட்டபொருளே, அதுவே விக்ரஹமானது மாறிமாறி வரும் ஸ்வபாவமுள்ளது என்னும் பொருளே, "அழியும் பதார்த்தம்" என்றதற்கு நிலைக்கும்; அழியாத பதார்த்தம் ஒன்றும் கிடையாததாகவும், அழியாததாயுள்ள ஜீவர்களது அழியதாகியமனத்தின் படைப்பை மலபந்தமற்ற கடவுளாக வணங்குவதும் பிசகாகுமாதலாலும் ஆராதியாமலே இருந்துவிடவேண்டும். அது கூடாதாகையால் அழியும்பதார்த்தத்தில் தான்வணங்கவேண்டும். அதிலும்சீக்கிரமழியக்கூடிய பதார்த்தங்களைஒழித்து மெதுவாக அழியக்கூடியபதார்த்தங்களிலேயேஆராதிக்கவேண்டும். மனதோநிமிஷத்துக்கு நிமிஷம் மாறும். நேற்று ஒருபதார்த்தத்தில் விருப்புக்கொண்டமனம் இன்று அதே பதார்த்தத்தில் விருப்புமாறி, அதுகாரணத்தில் அழிகின்றது. ஆனால், எம் அநுபவம் எட்டியவரையில், இருபது வருஷங்களுக்கு முன்செய்த விக்ரஹம் இன்னும் ஒ

ரோமதிரியாய் அழிதலில்லாமலிருக்கின்றது. ஆதலால் நம்மனதைவிட விக்ரஹம் தாழ்ந்துவிட இல்லை. ஆகவே அழிவதாகிய பதார்த்தத்தில் ஆராதிப்பது எள்ளளவும் பிசகல்ல. இன்னும், எதை ஆராதிக்கிறோம்? அழிவதாகிய பூதத்தையா? அப்படியானால் விக்ரஹமல்லாத மற்ற இடங்களிலும் ஆராதனம் செய்ய, யாம் உடன்படுவதை இவர்கள் கண்டதுண்டா? நாம் ஆராதிப்பது பரமனது அருளுருவத்தை; ஆதலால் அவ்வுருவத்தை நெடுநாள் அழியாமலிருக்கக் கூடிய விக்ரஹத்தில் ஆராதிப்பதே, நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் மனதில் ஆராதிப்பதினும் மேலாகின்றது. ஆகவே நாம், அழியாக் கடவுளது ரூபத்தை அழியும் பதார்த்தத்தில் ஆராதிப்பது யோக்யமாகவே முடிகின்றது. அப்படி ஆராதிப்பதால் அழியாத கடவுளுக்கு ஒரு கவுரவக்குறைவாவது, ஆராதிக்கும் நமக்கு ஒருபாபமாவது வருவதில்லை யென்பது ஸித்திக்கின்றது.

மேல், நம்மாலழிக்கக்கூடியதைநாமேவைத்துவணங்கலாமா என்றால் எப்பொழுது வணக்கத்திற்கென்றாக்கிக்கொண்டோமோ அப்பொழுதுஅது நம்மாலழிக்கக்கூடிய ஒன்றல்ல!!அதை அழிக்கஎண்ணும் தக்ஷணத்தில்நமது வணக்கம்அழிந்துவிடுகின்றது. வணங்கப் புத்திவந்த பின்னரே விக்ரஹம் அமைப்போமே ஒழியவணங்குவதன் முன்னர் ஒன்றும் செய்யோமாதலால் விக்ரஹாராதனத்துக்குத் தோஷத்தைக்காணோம். நம்மால் கொன்றுவிடக்கூடிய ஒரு பிராணியை நாமே போஷிப்பது பிசகாகுமோ? அந்தப்பிராணிக்காவது, அதை வளர்ப்போனுக்காவது அகௌரவம் வந்துவிடுமோ? நம்மாலழிக்கக் கூடியதை நாம்வணங்கலாமா என்று நம்மைக்கேட்கும் இஞ்ஞமலிகளுக்கு இன்று ஸத்யோபதேசம் செய்வோம். திருந்தினால் திருந்தட்டும்; இல்லையானால் போகட்டும். மனதினால் நினைத்து தியானிக்கும்போது இன்று கடவுளைப்படைக்கிறார்கள். ஆனால் தியானம் முடிந்ததும் உடனே மனதை வேறுவிஷயங்களில் செலுத்துகிறார்கள். ஆதலால், தியானம்முடிந்தவுடனே இவர்களது கடவுள் அழிந்துவிடுகிறார் !! இவர்களாலழிந்துவி

டும் ஓர்படைப்பை இவர்களேன் செய்கிறார்கள் ? இவர்களேன் தியானிக்கிறார்கள் ? விட்டுவிடட்டும். விட்டால் தியானமே போய்விடுமென்றோ ? என்பார்கள். நம்மைப்பின்பற்றி நின்று விக்ரஹத்திலாராதிக்கட்டும். விக்ரஹமோ நம்மாலழிக்கக்கூடியதன்று. அதை சீக்கிரம் அழியும்மனத்தால் நாம்செய்யவில்லை. அநேகவருஷங்களளவும் நிலைத்திருக்கக்கூடிய பிருதிவியால் தான் செய்கிறோம். நமக்கு அந்தவிக்ரஹாராதனையில் அன்புமிகுந்திருப்பதால் நாமும் விக்ரஹங்களை அழிக்கமாட்டோம்; பிறரையும் அதின்கிட்டவழி விடமாட்டோம். ஆதலாலதை அழிக்க யாராலுமாகாது. விக்ரஹாராதனை செய்யும், எங்களுக்குக் கொடியபாசவினையால் ஒவ்வோர்காலத்துத் துன்பம் வந்துவிட்டதுண்டு, ஐதர்கலாபம்பொன்றஅநேகம் உண்டு. அக்காலங்களிலும் நாங்கள் அருமையாய்க்கொண்ட விக்ரஹங்களைத் தக்கமரியாதையுடனேதான் பத்திரப்படுத்திக் காப்பாற்றினோம். ஆதலால் எந்தஆபத்திலும் எங்கள் அருமையான விக்ரஹங்களை அழிக்கயாராலும் முடியாது ! முடியாது !! நாத்திகர்கள், கடவுளது இருப்பையே அழித்துவிட்டால், அதினால் நமது தெய்வத்தியானத்துக்கு இளப்பம்வந்துவிடுமோ? அல்லது கடவுளுக்காவது ஒருகௌரவக் குறைவுவந்து விடுமோ ? அதுபோலவேயான் விக்ரஹாராதனைசெய்வோரின், தெய்வத்தைப்பிறர்அழித்தாலும்அவரது தியானத்துக்கேனும், அவரால் ஆராதனைகொள்ளும் கடவுளுக்கேனும் குறைவுவராது. நம்மெதிரிகள் சற்றுயோசிக்கட்டும்; அவர்களது தாய்மார்களை அவர்களால் கொன்றுவிடவிடியாதோ? அவர்களது தந்தைமார்களை அவர்களால் கொன்றுவிட முடியாதோ ? அவர்களை ஆள்பவர்களை அவர்களால் கொன்றுவிடமுடியாதோ ? அவர்களால் கொன்றுவிடக்கூடியவர்களாகையால் அவர்களது ஈன்றோரையும், அவர்களது அதிபர்களையும் அவர்கள்வணங்கி நடப்பதுபிசகென்றெண்ணுவார்களோ? ராத்திரிகளில் பிச்சைக்குவரும் ஒருகட்டைத்தடியன் ஒருஉதாரமுள்ளபிரபுவைக்கொல்ல முடியும், அவ்வளவுக்குபலமுள்ளவன்தான். ஆதலால் “ ஐயா ! பிச்சை” என்று அவன் குறையிரந்து நின்று

லைங்கல் பிசகாகுமோ? இப்படியனந்தமுண்டல்லவோ? ஆத
லால் நம்மாலழிந்துவிடக்கூடிய ஒன்றைநாம் ஆராதிப்பதில்
தோஷமேயில்லை. நம்மாலழிக்கக்கூடியதுதான் நெருப்பு; ஒரு
செம்பு தண்ணீரைவிட்டால் சாம்பலாய்விடும். நம்மாலழிக்
கக்கூடியதுதான் தண்ணீர். நல்லதீயைமூட்டினால் தண்ணீர்
அழிந்துவிடும். இப்படி அழிந்துவிடக்கூடிய நெருப்பையாவ
து, நீரையாவது, நமதுஉபயோகத்துக்குக்கொண்டால் அவை
பயன்படாவோ? நம்மாலழிந்துவிடக்கூடும் என்றமாத்திர
த்தில், அப்படியுள்ள பதார்த்தங்கள் என்றாழ்ந்ததாகும்!
பேதைகள்! விக்ரஹாராதனையின் பெருமையையறியாததோ
ஷமேயிப்படிவினவினார்கள்!! மனதால்தியானிப்பதாகவெண்ணி
க்கொண்டுவிட்டால் பிறகு தியானமே அழியத்தடையென்ன?
ஒருவன் தியானம்செய்தான் என்பதும் செய்யஇல்லை என்ப
தும் பிறனுக்கெப்படிப்படும்? கண்ணைமூடிக்கொண்டு பிறவி
ஷயங்களை யோசித்துக்கொண்டிருந்தால் பக்கத்திலிருப்பவர்
அவனை தியானத்திலிருப்பதாகவே எண்ணுவர். பக்கத்திலுள்
ளோர் அப்படிஎண்ணிவிட்டபோதுஅவனுக்கு தைரியந்தான்.
தெய்வதியானமே இல்லாமலுமிருக்கலாம். அந்தமாதிரி இப்
போது எவ்வளவோ பூனைகளைப், பாதிரியான் கோவிலில்
பார்க்கலாமல்லவோ? நமது கோவி[illegible]லா? ஒருரு எதிர்
கிருப்பதால் கண்ணில் பட்டேதீரும், அதைமறுக்கமுடியாது.
கண்ணில்பட்டால்அயலிற்போருக்குப் பயந்தாவது அந்தஉரு
வத்துக்கு ஒருகும்பிடுபோடவேண்டும். அதைச்சாக்கிட்டா
வது ஒருநாளில்லாவிடில் ஒருநாளாவது உண்மை யன்புண்
டாய்விடும். இந்தநயம் மனத்தியானத்திலுண்டோ? இன்னும்;
ஒருவன்மனதால் தியானிக்கும்போது அதிகசிரமப்பட்டு,மன
தைப்பிறவிஷயங்களில் போகாமலடக்கி ஒவ்வொரு அங்க
மாகவிடாது தியானிக்கவேண்டும். இதனிடையில் ஏதாவது
அவனது ஞாபகத்தைக்கலைக்கும்படி, நேரிட்டால் அவனது
தியானம் அழிந்துவிடும். இந்தமாதிரிநேரிடும்போதெல்லாம்
அவனதுதியானப்பொருள் அழியும். அப்போதுகடவுளைச்சித்
ரவதை செய்ததாகவும் முடியும்!! அவன்தியானிக்கும்தெய்வீ

ருதட்வையிலும், தன்மனத்தைப்பிறவிஷயங்களில் செல்லாது அடக்கவேண்டும். இப்படி,விகாதப்பட்டுக்கொண்டே இருந் தால்ஒருதடவையாவது பூர்ணமாய் தியானிப்பதற்குள்எத்தனை காலமோ சென்றுவிடும். ஆதலால்தியானத்துக்கே, கேடுவந்து விடும். விக்ரகாராதனையிலோ, நாம் ஆராதிக்கும்போது, வேற் றுவிஷயங்களில் மனம்சென்றாலும், உடனே அதைத்திருப் பலாம் ; கண்ணுச்கு உடனேரூபம்படும் ; நாம்வேற்று விஷய ங்களில் கவனம்வைத்தபோதும் நம் முன் உள்ள விக்ரஹம் அழியாதிருக்கிறது. இதனால், நாமே, அழியாததை, சுலபத் தில், வணங்குவதாகவும் ; மனதால் தியானிப்போரே, அவர் களாலடிக்கடி அழிவதை, கஷ்டப்பட்டு, நெடுநேரம்போ க்கி, ஒருக்கால் அதிர்ஷ்டமிருந்தால் மட்டும் வணங்குவதாக வும் பெறப்படஇல்லையா ? இன்னும் ; மனதால்செய்யும் ஆரா தனம் யாருக்குமுடியும் ? நல்லவயதுவந்தவர்களுக்கும், கிழட் டுப்பருவ மடையாதவர்களுக்கும் மட்டுமே அன்றே ? சிறு வயதிலுள்ளோரின் மனம்ஒன்றிலும் ஸ்திரமாகப் பற்றுமல் ஆசையிலேயே பிரவர்த்தித்து எங்கும் நிலைத்து நில்லாமல் அலையுமொன்றல்லவா ? இப்படியுள்ள மனது எப்படி தெய்வா ராதனம் செய்யும் ? கிழ டு வயதிலுள்ளோருக்கும், ஞாபகக் குறைவு, விசாரம், ஆகியவற்றால் மனத்தியான ஆராதனம் துஸ்ஸாத்யமாகுமே ! ஆதலால் மனதால் தியானித்து ஆராதி த்தல் யாவருக்கும் ஒப்பமுடிய இல்லையே ? விக்ரஹாராதனத் திலோ சிறுவராஜலும் "ஓம்பாச்சி" என்றுசொல்லிக் கன்ன த்திலடித்துக் கொள்ளமுடியும் ; நமஸ்கரிக்கமுடியும் ; கும்பிட முடியும். கிழவராஜலும், "ஹே ! பிரபோ !! என்னை இன்னும் வைத்திருக்கவேண்டுமா?" என்றுவிக்ரஹத்திலுள்ளதிவ்யசுதன த்தைப்பார்க்கக்கூடும் ஆதலால் விக்ரஹ ஆராதனமே கிழவரு க்கும், சிறுவர்களுக்கும் கூடஸாத்தியமாயிருக்கிறது. இந்த நலத்தை அறியாது, அது நம்மால் அழியும்பதார்த்தத்தால்செ ய்த விக்கிரஹம்; அதை நாம்வணங்கக்கூடாதென்று சொல் வதென்ன பேதைமை ? இன்னும் ; தெய்வாராதனத்தில் முக்யமாய்வேண்டுவது, தெய்வத்தினிடம் அன்பும், நாம்

செய்துள்ள கொடியவிஷயங்களுக்காசபயமும், நமக்கும்தர்சனயோக்கியமாய்ப் பெருமானிருப்பதில் !ஆச்சரியமும், நம்மைப்பிறவிஷயங்களில் அலைக்கும்மனத்தின்மீது கோபமும் அல்லவா ? இவையெல்லாம்சேர்ந்து, நம்மனதுருகி "ஐயனே ! ஐயனே ! ! ஹேஞானஸம்பந்தமூர்த்தே !! என் அப்பனே ! ! ! என்குருமணியே ! !" எனக்கதறுமனம்போல்கதறியும், பதறியும், நாம்நிற்றலே யன்றோஆராதனமென்பது? இதற்கு விக்ரஹமின்றி முடியாதே !! மனத்தால்சிந்தித்தல் உருக்கமாகாதே!!சிந்திக்கும்போது ஒவ்வொருஎண்ணமாகஒன்று கூட்டுகிறோம். அவையவங்களை ஒன்று கூட்டி ஒருருவைச்சிந்திக்கிறோம். சிந்தனை உருக்கமல்ல. இந்தியா என்பது வடக்கே இமையமலையாகும் எல்லையும், கிழக்கேபங்காளக்குடாக்கடலாகும் எல்லையும், தெற்கேயும் மேற்கேயும், இந்தியமஹாஸமுத்திரமாகும் எல்லையும் உடையதென்றெண்ணி சிந்திக்கிறோம். இந்தச் சிந்தனையின்போது நமது மனம் செய்யும் தொழில் பலவற்றை ஒன்று கூட்டல். இதுவேதான் தியானம். தியானம்வேறு, மனதுருக்கம்வேறு; விக்ரஹாராதனையில்லாதவர்கள் கடவுளை முதலில் தியானிப்பார்கள். அப்போது மனம் உருகாது தியானித்தபின்னர் அவர் மனம் உருகினால், அப்படி உருகும்போது அதன் முன் தியானித்த ரூபம் மறைந்துவிடும். ஏனெனில், மனவுருக்கத்தில் மனம் எவ்வளவோ விஷயங்களில் அதி சீக்கிரத்தில் பிரவர்த்திக்கவேண்டியிருக்கிறது. !! ஆகலால் அவர்கள்மனதுருகும்போது அதற்கும், ஸாதாரணமாய் நாத்திகர்கள் தமது துக்கங்களை நினைத்துக்கொண்டிருகுவதற்கும் பேதத்தைக்காணோம். அன்றியும் தெய்வாராதனத்திற்கு முக்கியமாய்வேண்டியது அன்பு. அன்பு பெருகக்காரணம் ஆலிங்கனமும் நம்மால் விரும்பப்பட்டவருக்காக நாம் கையாட்டம் செய்வதும், நமது சரீரத்தைத் தொழிற்படுத்துவதுமே, ஆகலால் விக்ரஹாராதனமே அவசியமாகிறது. இதிலேதான் நாம்விருப்பத்துடன் அமைத்துக்கொண்ட விக்ரஹத்துக்கு ஸ்நாநம் செய்விப்பதாலும், அதை அலங்கரிப்பதாலும், அதற்குப் பூஜைசெய்ய நல்லபத்

புஷ்பாதிகளைத் தேடிப்போவதாலும், பூஜைசெய்யும்போது, என் ஐயனுக்கு இது செய்யவேண்டும், அதுசெய்யவேண்டும், என்றெண்ணுவதாலும், கண்ணால்பார்த்து இந்த நல்லபுஷ்பத்தை ஐயனுக்கு நான்போட வேண்டுமென்றெண்ணுவதாலும், என் ஐயனே என்னைக்கார் என்றுசொல்லி மனதாரக்கட்டிக்கொள்வதாலும், அன்பு, வர வர அதிகரிக்கும். இதெல்லாம் அனுபவத்தில் காணக்கூடிய ஒன்றேயொழிய காதால்மட்டும் கேட்டால் அவ்வளவு நன்றாய்த்தெரியாது. இவ்வளவு அருமை விக்ரஹாராதனத்திலிருப்பதறியாது, நம்மாலழிக்கக்கூடியதை நாம்வணங்கலாமா ? என்றல் பேதைமையாகவே முடிகிறது. இன்னுமிதுபோன்றபலவியாயங்களையும் புத்திசாலிகள் யோசித்துக் கொள்ளட்டுமென்று இதை இத்துடன்நிறுத்துகின்றோம்.

(7.) இனி, உங்கள்பட்டணத்துப்பிள்ளைகூட "சொல்லிலும் சொல்லின் முடிவிலும்" என்றபாட்டாலும், "உளியிட்டகல்லையும்" என்றபாட்டாலும், விக்ரஹாராதனம் கூடாதென்று நிந்திக்கின்றாரோ ? என்பார்கள். இந்தப்பேய் விருவுக்கும் தாடைசுத்தி செய்தனுப்புவோம்.

பட்டணத்தாரை நாமெல்லாரும், பெரியவராகக்கொண்டிருப்பதால், அவரிடமிருந்து நமது கக்ஷிக்கு விரோதமாகவதாவது நம்மெதிரிகள்சொன்னால், நாமதைக் கவனிப்பது அவசியம்தான். "சொல்லிலும்சொல்லின்முடிவிலும், வேதச்சுருதியிலும்—அல்லிலும், மாசற்ற ஆகாசந்தன்னிலுமாய்ந்து விட்டோர்—இல்லிலும் அன்பரிடத்திலு மீசனிருக்குமிடம்—கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்றும், "உளியிட்ட கல்லையும், ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்—புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் உயர்பொன்னெனவே—ஒளியிட்டதா ளிரண்டுள்ளே யிருத்துவதுண்மையென்று—வெளியிட்டடைத்துவைத்தேனினிமே லொன்றும் வேண்டிலனே" என்றும் சொல்லியுள்ள பாடல்களைக்கேட்ட மாத்திரத்தில் நமக்கெல்லா மாநந்தபரவசமாய் பட்டணத்தாரையும் அவரதுபெருந்தன்மையையும், அவர்செய்துவந்த விக்ர

ஹாராதனைப் பெருமையையுமே நினைக்க நேரிடுகிறதன்றி இக்தப்பேய்களைப்போல விக்ரஹாராதனையில் விரோதபாவமுண்டாக இல்லை. ஒருவருடையவாக்கைப்படிக்கபாக்யம்பெற்றும், அதனர்த்தம் தெரியாமல், குங்குமஞ்சுமந்த கழுதைகள்போல பாட்டைச்சுமந்து திரிவதில் பயனென்னவோ தெரியவில்லை? குறளில் "கற்றதினாலாயபயனென் கொல்,வாலறிவன்-நற்றாள் தொழாஅரெனின்" என்று சொல்லியிருக்கிறது. இதில்கற்றதினாலாயபயனென்கொல், என்பதைமட்டும் ஆதாரமாயெடுத்துக் கொண்டு, மற்றையபாகத்தை விட்டுவிட்டு, ஸபையேறிநின்று படிப்பதுபிசகென்று பிரஸங்கிக்கும்பேதைபோல் இப்பேய்கள் சொல்லுகின்றனரோ ஒழிய வேறென்ன? "காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே—பாலுண்கடைவாய்ப் படுமுன்னே—மேல்விழுந்தே—உற்றாரழுமுன்னே ஊரார்சுடுமுன்னே குற்றாலத்தானையே கூறு" என்றும்; "அலையாருறவும் அரன்பூஜைநேசமும் அன்புமன்றிப்—படியீது வேறுபயனுளதோ" என்றும் "[illegible]ண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப் —பண்ணாரும்பாடச்செவியுண்டுகேட்கப்பலபத்தியிலையால்— என்றாலும்சாத்த, [illegible] ஈசனிருக்கையிலே—யன்றுண்டு போகுதையோ! கெடுவீரிந்தபாவிகளிடமே" என்றும்; "கையொன்றுசெய்ய, விழியொன்றுநாட, கருத்தொன்றெண்ணப்—பொய்யொன்று வஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழும் மெய்யொன்றுசாரச் செவியொன்றுகேட்கவிரும்பியான்—செய்கின்றபூஜையெவ்வாறுகொள்வாய் வினைதீர்த்தவனே" என்றும், "நல்லாரிணக்கமும், நின்பூஜைநேசமும், ஞானமுமேயல்லாதுவேறுநிலையுளதோ"? என்றும் "அத்தனைமுப்பத்துமுக்கோடி தேவர்க்கதிபதியை—நித்தனையம்மையொடுகாமசுந்தரிசேசனை, எம்—கத்தனைப்பொன்னம்பலத்தாடும் ஐயனைக்காணக்கண்கள்—எத்தனைகோடியுகமோ தவம் செய்திருக்கின்றதே" என்றும் மனதுருகி, நெஞ்சம்நெக்குவிட்டுக் கதறி, எவ்வளவோ யுகத்தில் செய்ததவப்பயனோ ஸ்ரீநடராஜ விக்ரஹத்தை அம்மையாருடன்காணக்கிடைத்த விபவம் எனச்சொல்லும் பெரியோர், கல்லையும் மண்ணையுமென்று இகழ்வாரா?

அநேககோடியுகம் இவ்வளவுகாலமென்று மனதாலும் நினைக்க அரியதா யிருக்கின்றதே. அத்தனைகாலத்தவம் செய்துதாம்பெற்ற விக்ரஹாராதனத்தைப் பிசகென்றுதாமே சொல்வாராயின், பெரியோரொன்று அவரைச்சொல்வது செரிக்குமா? "நோன்பென்பது கொன்றுதின்னாமை" என்னும் ஔவையார் வசனத்துக்கு, விரதமெனப்படுவது கொல்லாமையும், கொன்றதைத்தின்னாமையுமென்றுஅர்த்தமிருக்க, அதைவிட்டுவிட்டு, நோன்பென்பது, கொன்று+தின்னு+ஆமை, எனப்பிரித்து, ஆமையைக்கொன்றுதின்பதே விரதமென்றும்; கொன்று+தின்று+ஆ+மை, எனப்பிரித்து, ஆவையும், ஆட்டுக்கிடாவையும் கொன்று தின்பதேவிரதமென்றும்; அர்த்தம்செய்து, உங்கள் ஔவையாரே இப்படிச்சொல்லியிருப்பதால் தின்னாலுண்ணல் தோஷமில்லையென்று, ஒருமூடனெழுந்தால் அவனுக்கென்னஸன்மானமுண்டோ அதேஸன்மானம் நமது விரோதிகளும் பெறுவதில் தடையென்ன? இப்படி நமதுவிரோதிகள் குருட்டர்த்தம்செய்வதையறியாத நமது பாலியர்கள், நமதுவிரோதிகள் வலையிலகப்பட்டுக்கெடுகின்றார்கள். இவ்வல்லலெல்லாம்தொலையும்படி, உண்மை அர்த்தத்தை இன்றுயாம் சொல்வோம்.

மேற்பாட்டின் அர்த்தம்.

சொல்லிலும்=வாக்குத்தயிலும்; சொல்லின் முடிவிலும்=வார்த்தையின் நிர்மாணத்திலும்; வேதச்சுருதியிலும்=வேதமாகியசுருதியிலும்; அல்லிலும்=பூதஇருளிலும் (அல்லது, அவஇருட்டிலும்); மாசற்ற ஆகாசந்தன்னிலும் = குற்றமற்ற பூத ஒளியிலும் (அல்லது சிதாகாசத்திலும்); ஆய்ந்துவிட்டோரில்லிலும்=ஆத்மாநாத்ம விசாரம்செய்து துறவடைந்தவாசஸ்தயத்திலும்; அன்பரிடத்திலும்=உண்மைதிருத்தொண்டுசெய்யும் எம்பெரியோரிடத்திலும்; ஈசனிருக்குமிடம்=பரமபதியிருக்குமிடம் (இப்படியிருக்க); கல்லிலும் செம்பிலுமோ=கல்லாலும் செம்பாலும் செய்த விக்ரஹங்களில்மட்டுமோ; இருப்பான் எங்கள் கண்ணுதலே=எங்கள் முக்கண்ணீசன் இருப்பது?

இப்பாட்டு; கண்ட ஞானிகளை நோக்கிச்சொன்னது. ஞான

ங்களே - நீங்கள் கோயிலுக்குப்போய் விக்கிரகரூபியான கடவு
ளண்டை நிற்கும்போதுமட்டும், தெய்வஸன்னிதானத்தில்,
பொய்யுரைக்கக் கூடாது என்றும், பொடிபோடக் கூடாது
என்றும், சுருட்டுப்பிடிக்கக் கூடாது என்றும், அநாசாரமும்
பாபஸம்பந்தமுமான தீத்தொழில்களைச் செய்யக்கூடாதென்
றும், என்றுரைக்கின்றீர்களே! கடவுள் சொல்லிலுமிருக்கின்றார்,
ஆதலால் பேசும்போதெல்லாம், தெய்வஸன்னிதானத்தில் பொ
ய்யுரைக்கப் பயப்படுவதுபோல், பயப்படவேண்டும்: சொல்லி
ன்முடிவிலும் கடவுளிருக்கின்றனர்: சுருதியிலும் கடவுளிருக்
கின்றனர்: என்றுண்மையங்களை கிரமமாகச்சொல்லி அகல
டஞான உபதேசம் செய்தபாடியாம்; இப்படியே அன்றி வேறி
ல்லையே? நமது விரோதிகள் ஏதோ வின்றாலம்செய்தது?

இரண்டாம்பாட்டின்அர்த்தம்.

உளியிட்ட கல்லையும் = (கல்) தச்சரால் பொளிந்தகல்விக்கிர
கத்தையும்; ஒப்பிட்டசாந்தையும் = ஒன்றாகக்கூட்டிச் செய்த
சாந்தாலான விக்கிரகத்தையும்; மத்தையறப் புளியிட்ட செம்
பையும் = அழுக்குநீங்கப் புளியாலலம்பித் தேய்த்தசெம்பு
விக்கிரகத்தையும் (மட்டும்); போற்றேன் = நான் வணங்கு
வதில்லை; உயர்பொன்னெனவே = உயர்ந்தபொன்போல; ஒ
ளியிட்ட தாளிணை = பிரகாசம்பொருந்திய பாதாரவிந்த யுக
ளத்தையும், உள்ளேயிருந்தவ துள்ளவையன்றே = (பரமன்,
சராசரங்களாகிய) யாவற்றுள்ளும் இருந்துவது ஸத்தியமென்
றே; வெளியிட்டு = (உலகத்தார்க்கு) வெளிப்படுத்தி; அடை
த்துவைத்தேன் = (என்மனத்திலும் அவ்வுண்மையை) அடை
த்துக்கொண்டேன்; பின்னையாதொன்றும் வேண்டலனே =
வேறு எனக்கொன்றும் வேண்டியதில்லை; என்றபடியாம். இப்
பாட்டும் மேற்பாட்டைப்போலவே, கண்ட ஜனங்களை நோக்
கிச் சொல்லியது. கடவுள் உளியிட்ட கல்லிலல்லாமல் உளியி
டாத ஸாதாரணக்கல்லிலு மிருக்கின்றார், அங்கும் கடவுளை
வணங்கலாம். அதாவது கடவுளில்லாத இடமில்லை. ஆதலால்
எங்குமொரேமாதிரி அன்பு நடத்தவேண்டும். ஒப்பிட்டசாந்தில்
மட்டுமல்லாது ஒப்பிடாச்சாந்திலுமிருக்கின்றார். புளியிட்ட

க்ரஹத்திலு மிருக்கின்றார். ஆதலால் கட்வுளெங்கு முள்ளதன்மையை உணர்ந்து அதற்குத்தக்கபடி நடவுங்கள் என்றபடியாம். இந்த இரண்டுபாட்டுகளில், முந்தியதில், கல்லிலும் செம்பிலும் கடவுளில்லையென்றர்த்தம்கொண்டால் பட்டணத்தார் கடவுளை எங்கும்நிறைந்தவராகக்கொண்டவரன்று என்றாய், விபரீதம் விளையுமன்றோ ! இந்தப்பாட்டால் அவர் எம்போன்ற ஏழைகளைநோக்கி, நீங்கள் விக்ரஹாராதனை மட்டும் செய்தவருவதுபோதாது ! கடவுளைப்பற்றிப் பிறர்க்கு உபதேசிக்கவேண்டும்; கடவுளை அர்த்தம் நிறைந்தவேதங்களால் துதிக்கவும் வேண்டும், அவராலேயே எல்லாமாகின்றது; "காலன்பாபார்க்கன்றுதலாய்காட்டாக்காலே," என்றும்; "ஆட்டுவித்தாலாரொருவர் ஆடாதாரோ" என்றும்உள்ளநம்பரமாசார்யர்களின்திருமொழிக்கிணங்க நமக்குஸ்வதந்திரம் கிடையாது, எல்லாமவனாலேயே ஆகின்றது என்றுஎன்னுங்கள்; நமது ஆணவத்தைஅறிந்து அவற்றால் நாம் கஸ்திப்படுவதைக் கண்டிரங்கி அயனருள்வன்; அவன் எல்லார்விசாரத்தையும் தானேவற்றவனாயிருந்தும், நிர்விசாரியாய், தம்குழந்தைகளாகிய ஆத்மாக்களையுள்ள மெள்ள பாசவிமோசன மடைவதைக்கண்டுமகிழ்ந்து,சிதாகாசத்தில் அனவரதத்திவ்யதாண்டவம் செய்கிறான்; பதியினது உண்மைஞானிகளாய் ; உணர்ந்தபரமயோகிகளுடையஇருதயத்திலிருந்து அவர்களுக்கு ஆநந்தம்கொடுக்கிறான்; அவனே "பக்திவலையில்படுவோன்"; என்னும்இவ்வளவையும் உணர்ந்து நீங்கள்விக்ரஹாராதனம் செய்யுங்கள். என்னும்ஸத்யஉபதேசமன்றோ எம் ஐயன்சொல்லி யிருக்கிறார் ?

இரண்டாவதில் ; ஏ ! என் அருமை நண்பர்களே !! நான் விக்ரஹாராதனை செய்வோனென்று நாத்திகர்கள் என்னைச் சொல்லுகிறார்கள். அவர்களின் கருத்து.—தெய்வத்தை நான் கல்லாக எண்ணிவிட்டதாக. உங்களையு மப்படிச் சொல்லுவார்கள் !! ஜாக்கிரதை !! நான் தொழுவது கல்லையல்ல !!! எங்கும் நிறைந்த எம்பரமகதியாவான்இந்த உளியிட்ட கல்லுக்குள் இருககின்றானல்லவா ? இங்கு அவனில்லாவிடில், அவனெங்கும் நிறைந்தவனாகானே ! எங்குமிருப்பதுபோல வித

ஒன்றும் பரமனிருக்கிறான் என்று உங்களுக்கு “வெளியிட்டேன்”!! உங்களுக்கொன்று சொல்லி நான் ஒன்று செய்பவனல்ல. என் மனதிலும், ஸத்யமாக அதே எண்ணத்தை அடைத்துவைத்தேன்.” பிறர் என்னை தூஷித்து அதனால் கேட்டை அவர்களே அடைவார்களாதலாலும், நான் என் “எத்தனை கோடியுகமோ தவஞ்செய் திருக்கின்ற” வாகிய கண்களால் நிர்ப்பியமாகக்கண்டு களிக்க ஸாதாரணமான உளியிட்ட கல்லல்லாமல், பரமேசுவரன் அனுக்ரஹார்த்தம் வெளியாகுப்ரூபந்தாங்கியதும், அவன் நிறைவதந்து இடமாவதுமான, விக்ரஹத்தை ஆராதிக்கும் பெரும்பாக்யம் பெற்றேன். என்போன்ற பாக்யசாலியாருளர்? இந்த அருமையான விக்ரஹாராதனை செய்வதன்றோ என்னை உய்விக்கும், ஆதலால் நான் இறுமாந்தேன், “பின்னையா தொன்றும் வேண்டிலேன்” என்பது தானல்லவோ எம் பெரியோன் சொல்லியுள்ளார். இந்தப் பாட்டைப் படிக்கப்படிக்க நமக்குமட்டும் ஆனந்தபரவசமாகும்போது, அந்தோ! பாவிகாள்!! நமது விரோதிகளுக்கேன் இந்த நியார்த்தம் படவில்லையோ? பரிபாகம் இல்லை, என் செய்வார்!! ஐயோ, பரிதாபம்!!

இவ்வளவு அரியவிஷயம் பேய்க்கணங்களுக்கு விளங்குமா? ஆதலால் குருட்டர்த்தம் செய்யப்பட்டன. இப்படியே குருட்டர்த்தம்செய்ய இடந்தா[illegible] நாம் நமது வேதத்தைப் பத்திரம்செய்து வைத்திருப்பதைக்கண்டு மனம்பொங்கி இந்துக்கள் வேதம் உண்மையான கடவுளால் உரைக்கப்பட்டால் எல்லார்க்கும் தெரியும்படி வெளியாக்கக்கூடாதா? என்றும்; பிராம்மண ரெல்லாம் மோசக்காரர் என்றும்; சொல்லி, ஊரிலிருக்கும் பிராம்மணப் பிள்ளைகளுக்கும், க்ஷத்ரியபிள்ளைகளுக்கும் தலையெழுதிவிட்டுக்கொண்டும் (=குடி முடிந்துவி[illegible]றது) அதை விளம்பிக்கொண்டும் வருகின்றனர். அவர்களது மோசத்துக்காளாகாதீர்கள். எவ்வளவோ காலம் தவஞ்செய்து பெறக்கூடிய தெய்வ ஆராதனையைத் தடுக்க இவர்கள் முயலுகின்றார்கள் என்பதைக் கேட்டபின்னும் அவர்கள்பக்கம் சாராதேயுங்கள்!!

(8.) இனி, எல்லாம் ஸரிதான்; சிவனுக்கு சாபத்தாலற்றுவிழ்ந்த ஆண்குறியைக் கடவுளென்றும், லிங்கமென்றும் வைத்துக் கும்பிடலாமா? என்று உங்களைக்கேட்டிப்பார்களாதலால், அன்னோர்களின் வாயடங்க ஸமாதானம் இதோசொல்லுகின்றோம்.

சிவலிங்கம் என்பது சிவனது ஆண்குறி யென்றும், அது தாருகாவனத்துக்குச் சிவன்போனபோது அந்தரிஷிகளின் சாபத்தாலற்றுவிழ்ந்ததென்றும் சிலர் சொல்லுகின்றனர். இது பொய்க் கதையே ஒழியவேறில்லை. முதலாவது சாபம் என்றால் என்ன? பெரியோரிடத்து இருந்து சிறியோர்க்குவரும் ஒன்றல்லவா? தாருகா வனரிஷிகளுக்கு வந்த ஆற்றலெல்லாம் சிவனிடத்து தல்லவா? அப்படியிருக்க சிவனிடத்தெப்படி தாருகாவனத்தவர்களது சாபம் ஏறும்? சாபம்பெறுவதும் செத்தும் செத்துப் பிறப்பதும் சிவன் குணமல்லவே! பெரியமஹானை அண்டி, கலவித்தைகள் கற்றுக்கொண்டு, கர்வமிகுதியால், கற்பித்த குருவையே ஒருவன் நிந்திப்பானானால் அது சாபமாகாது!! அக்ஞானவிசேஷத்தால், வாயில்வந்தபடி ஒருவனை அவன் திட்டினால் அந்த திட்டுசாபமாகுமா? ரிஷிகளின் சாபங்கள் வண்ணமேபிறர் இறந்ததில்லைப்போலவும், பிருகு முதலியோரின் சாபங்களின்வண்ணமே பிறந்திறந்தவர்களைபோலவும் இல்லாதால் சிக்கனத்திருமேனியாய் வந்தசிவபெருமான்மீது அவர் கருணையால் தேவேந்திரியங்களையும் தபோபலனையும் பெற்ற மனிதர்களது திட்டுப்பலிக்குமா? இதுநிற்க.

லிங்கம் என்பதற்கு அடையாளமென்றல்லவா பொருள்! சிவலிங்கம் என்பதற்கு சிவனதுபிரஜாபதி என்று அர்த்தம் கொள்வோர், ஸ்தாவரலிங்கமென்பதற்கென்ன பொருள்கொள்வாரோ தெரியவில்லை? புல்லிங்கம், ஸ்த்ரீலிங்கம் என்பனவாதி இடங்களில் எத்தனை விபரீதம் கொள்வார்களோ யாரறிவார்! ஸ்த்ரீகளுக்கு ஆண்குறி கிடையாதலால் அங்குள்ள லிங்கம் இவர்கள் கொள்ளைப்புத்தியை கொறுக்குமே!! சிவ

லிங்கம் என்பதைத் தூஷிக்கும் பாபிகள், ராமலிங்கமென்று பிரசித்தியாய் ராமேசுவரத்திலுள்ளதற்கு என்னபெருண்டாக்குவார்! இவர்களுக்கு, லிங்கம், என்னும் பதத்துக்கு ஒரு பொருளே தெரியாதால் ராமனுடைய என்றாவது, ராமனுடைய என்றாவது, ராமன்பூஜித்த என்றாவது முன்பகுதி செய்து பின் சேர்ப்பார்கள்!! ஆறும்வேற்றுமையாகக்கொண்டால் ராமனுக்கு சாபம் யார் கொடுத்தார்கள். சிவனுக்குத்தான் தாருகாவனத்தில் சாபம்வந்ததாக உளறுகின்றனர். ராமனுக்கெங்கு சாபம்வந்தது? முன்னொருதரங்கு மதுரையில் உளறினதாக நாம் கேள்விப்பட்டபடியே, சைவர்கள் பூஜிப்பதற்காக லிங்கத்தால் ஸ்ரீ ராமசந்திரர் தன்லிங்கத்தைவைத்தாரென்றால், அதன்பிறகே அவருக்குப்பிள்ளைகள் பிறந்ததை சொல்லப்படுவதால், சிவப் பிராட்டிக்குச் சோரநாயகன் சேர்ப்பதாகின்றதே. இப்படியும் உண்டா! சிடசிவ!! ராமனுடைய என்று கொண்டால் ராமன்லிங்கமாக உளது எந்தக் கௌதமர் சாபத்தால்? ராமன் பூஜித்த லிங்கமெனக்கொண்டால் இவர்கள் தெய்வமே பூஜித்த ஒரு லிங்கத்தை இவர்கள் இகழ்வாரா? சிவப்பிரதாபத்தையே ராமனுக்கே இவர்கள் தேடிவைத்துக்கொண்டது அதிசயம்! அதிசயம்!! சிவலிங்கமே, என்பதில் லிங்கமென்பதற்கு விபரீதார்த்தம் ..., அதற்கெனவேதய ம் சொல்லும் புராயத்தங்கள் பிரா...க்காவது, பிராணுக்காவது லிங்கஸம்பந்தம் காட்டுகின்றதால் அந்தக்குருட்டார்த்தத்தை நம்மெதிரிகள் இன்றுடேதத்தம் செய்வாராக. பேதைகாள்! லிக, என்னும் தாதுவுக்கு சித்திரித்தல், படைத்தல், காத்தல், முதலியவைகளிருமே, உலகத்தைச் சித்திரிப்பதாகிய, சிவனது, பிரபாவத்தையும்; லிங்கமென்பதை "லிங்+கம்" எனப்பிரித்து, "லியம்=ஆதாரஸ்ருஷ்டி" என்று விரித்து, சிவனது, ஆகாரஸ்ருஷ்டித்வத்தையும்; உள்ள அர்த்தங்களைக் கேட்டிய வழிதேடாது எதிராகிறது ஆளாகின்றனரே—அந்தோ!!

வேதத்தால் புகழ்ந்துரைக்கப்படுவது லிங்கம்; விஷ்ணு. வைகுந்தபதியானது லிங்காராதனத்தால் தானென்று மேலே

வேதப்ரமாணமும் சொன்னோம்; லிங்காராதனமின்றிச் சாப்பிடவும் கூடாது என்று வேதபுருஷன் கதறுகின்றான். இப்படியிருக்கவும் வேதபாஹ்யர்களாகப்பவிக்கும்படி என்ன பாபம்செய்தார்களோயாரறிவார்! கோயிலுக்குள்ளேயிருக்கும் ஸதாசிவ மூர்த்திமட்டுமெல்லாது, பலிபீடத்துக்கு பத்ரலிங்கமென்றும்; கோபுரத்துக்கு ஸ்தூலலிங்கமென்றும்; பெயரிருப்பதால் கோபுரதர்சனம்செய்தாலும் சிவதர்சன மாகமேவ சிஷ்டர்கள் கொண்டிருப்பதை யறியாது இக்குருமலிகள் குரைக்கின்றவே! ஐயோகொடுமை!! லிங்கசரீரமெனவும்; அங்கலிங்கமெனவும்; ஷட்லிங்கதாத்பரியம்எனவும் தனித்தனியுள்ள வற்றிற் கெல்லாம் எத்தனை அர்த்தமும் கதையுமுண்டோ? இவர்களுக்கு வியாதிவந்து வைத்தியர்கள் உத்திரவால், லிங்கம் உரைத்து மருந்தில் கலந்து குடிக்கவேண்டியபோது இவர்கள் எந்தலிங்க முரைப்பார்கள்? இதுநிற்க தாருகாவனப்பிரஸ்தாபம் செய்தார்களே. அதைக்கொஞ்சம்பார்ப்போம். தாருகாவனத்தவர்கள் கர்மமே பலந்தருமென்றும், கடவுளென்போ னில்லையென்றும், அதவா ஒருவனப்படியிருந்தாலும், அவனது தயவேனும், வேறேதேனும் நமகளுக்கு வேண்டாமென்றும், எண்ணியிறுமாந்துகர்மப்பிரம்ஹ வாதிகளாய்த் திரி[illegible]ர்கள், அப்போது கெட்டாருக்கும் நல்லவழிசொல்லித் திருத்திக்காக்கும் பரமகருணாசாலியாய், கேளாதேயிருக்கவலிதுவந்து மழையைத்தரும் மேகமேபோல உள்ளசிவபிரான் தம்மை விரோதித்துவந்த இந்த துஷ்டர்களிடத்தும் அதிக கருணைகொண்டு அவர்களுக்கு புத்தி சொல்ல வெண்ணித்தமது பாதமேகதியென்று நம்பிய மகாவிஷ்ணுவை அழைத்து நீ மோஹினிவேடங்கொண்டு அந்த ரிஷிகளிடம்போய் அவர்களைக் கர்வபங்கம் செய்து விட்டு அவர்களால் ஸ்பர்சமடையாமல் திரும்பு. நானே பிக்ஷை வாங்குபவனாக அந்தரிஷி பத்தினி மாரிடம்போய் அவர்களது கற்பின் நிலைமையை அந்தரிஷிகளுக்குக் காண்பித்து அவர்களை ஆஸ்திகர்களாய்ச் செய்துவிட்டுவரவேண்டு மென்றார்.

அப்போது உடனே மோஹினியாய் விஷ்ணுவானவர் வந்தார். உடனே ஐயன் அதிஸுந்தரரூபியாய், யௌவனவேஷத்துடன், திகம்பரராய்த் தம்மையே எப்போது மிடைவிடாது துதிக்கும்வேதங்களைப் பாதகுறடுகளாக அணிந்து அனேககோடிசந்திரன் ஏககாலத் துதித்தாற்போலு முள்ளதிறம்பொருந்திய தமதுதேகத்தின்மீதும் பஸ்மதாரணம் செய்துகொண்டு கையிற்கப்பரையெடுத்து ஒருநாளும் உண்ணுதபெரும்பசியை ஆற்றுவான்போலப் புறப்பட்டார். ஆயிரயுகபரியந்தம்தேடி தேசத்தின் ஒருபாகமான காலைக்கூடக்காணமாட்டா திருந்த மோகினியோ எம்பெருமானைக்கண்டு அதிகசந்தோஷமுள்ளவராய்த்தான் பூண்டபெண் வேஷத்துக்கியைய ஆசைகொண்டு மயங்கி தாருகாவன விஷயத்தை மறந்து ஸ்வாமியைத் துதித்து ஐயனே! அஹங்காரம் கொண்டகாலத்து அடிகாட்டாத ஆண்டவனே! நானுன்னடைக்கலம்; நமேருகொமய காமயேதனையுந்தேன் நீந்த அதிசுந்தரமுள்ள உன்னைப்புணராவிடில் என்னுயிர்போய்விடும், உன்னையே முற்றிலும்மறுக்கும் ரிஷிகளுக்கு அனுக்ரஹிப்பதிலும் உன்பாதமே கதியென்று கெஞ்சும் எனக்கிரங்கக் கூடாதோ! பரமனே! இவ்வளவு அழகுடன் அனுக்ரஹரூபியாயுமுள்ள உன்னைத்தழுவாவிடில் நான் உயிர்துறப்பேன் என்று பலவாறு துதித்தார். அப்போது "எப்பாலும் பாலனமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக், கெடுப்பானு மேதென்று கேள்வி செய்வானுங் கெதியடங்கக், கொடுப்பானும் தேகியென்றேற்பானும ஏற்கக்கொடாமனின்றே, நடப்பானு நீயல்லையோ தில்லையானந்தத்தாண்டவனே" என்னும் திருவாக்கின்படியே ஆன்மாக்களை உய்விக்கும்பொருட்டு ஒன்றோடொன்றுகூடச் செய்தும், பிரித்தும், உண்ணச்செய்தும், கேட்கச்செய்தும், கொடுக்கச்செய்தும், பலவிதமாகப் பரிபாகமுண்டுசெய்து அதற்குத்தக்கபடியே அநுக்ரஹித்தும் வருநடனவள்ளல், கிருபைகூர்ந்து, ஏமாலே! நீ அவஸரப்படாதை!! உனக்கு இப்போது தர்சனந்தந்ததெல்லாம் நீஉய்யவேதான். இல்லாவிடில் இந்தஸந்தர்ப்பத்தில் உன்னைக்கூப்பிடுவானேன்.

எதற்காக உன்னை இப்போது அனுப்பினேனோ அதைமுடித் துக்கொண்டு வந்தாலுனக்கு அனுக்ரஹம் செய்வேனென்று கட்டளையிட்டுத்தானும்உடன்சென்றுரிஷிகளிடம் போய் ஐயா, தபசிநான், இங்கு ஆச்சிரமம் கட்டிக்கொள்ளலாமா என்றார். அவர்களோ எப்படியாவது இவனிடமிருந்து அந்தஸ்திரியைப் பிரிக்கவேண்டுமென்று எண்ணி அப்பா நீயாவது தவஞ்செய் யவாவது? பெண்சாதியுடன் என்ன தவம் செய்யப்போகிறா ய்! தவமோமிகவும் வருத்தமானது. உன்னைப்பார்த்துக்கொ ண்டே உன்பெண்சாதி நிற்கவும் உனக்குத் தவம் முடியுமா! அ வளை அனுப்பிவிடு' தவம் செய்யலாம் என்றார்கள். ஐயனோ ஏதடா இப்படிச் சொல்லுகிறீர்கள் இரக்கமில்லையா? அவரு க்குநானே ஜீவன் என்றாலேயே அவள்பெருமையடைந்தவள். அரைநிமிஷங்கூட நான்சும்மாயிருந்தாலவருக்கு நஷ்டமில்லை' என்று உள்ளதுள்ளபடியே சொன்னார். அவர்களோ அப்படி யானால் இங்கு தவம் செய்யக்கூடாதென்று மறுத்தார்கள். உடனே ஐயன்கோபம் கொண்டவர்போல், விஷ்ணுவைப்பா ர்த்து நீஇங்கேயேயிரு நான்வருகிறேனென்று உத்தரவு கொ டுத்துவிட்டுத் தெருவுக்குள் நுழைந்தார். அப்போதந்த ரிஷி களோ தவம் குலைந்தார்கள். விஷ்ணுவைத்தொடர்ந்தார்கள், காலில்விழுந்தார்கள். இப்படியாக அவர்களைமயக்கிக்கொண் டேமஹாவிஷ்ணுவும்சேர்ந்தார். பரமசிவவள்ளலோ மதயானை குரலிட்டு பிக்ஷைபிக்ஷையென்று சொல்லிக்கொண்டு வீதி யில் செல்ல, அப்போது அந்தரிஷிபத்தினிகள் மஹாவிஷ்ணு வாகிய ஆண்பாலே வேஷமாத்திரமாய்ப் பெற்ற ரூபத்துடனி ருக்கும் போதே யோசித்ததிவ்யமங்கள தேஜோநிதியைக் கண் டவர்களாகி மனமும் கண்ணும் ஒருவழிப்பட்டு அவரது திருவு ருவத்தைப்பார்த்து மயங்கிமயங்கி விழுந்தார்கள். உடனே பி க்ஷைகொண்டு வரப்போனார்கள். உள்ளேபோய் வருவதற்கு ள் அந்த வீட்டுப்பக்கம்போய் விட்டாரோஎன்று எண்ணி உள்ளே போகவும் துணியாது பிக்ஷைவிஷயம் மறந்தார் கள். இடுப்பில் கட்டியிருந்த வஸ்திரங்கள் நழுவமேலெல் லாம் அணிந்த ஆபரணங்கள் சிக்குப்பட ஆடுகிறார்கள், ஓடு

கிறார்கள், நெருங்குகிறார்கள், பிசைந்து கொண்டேயிருந்தாலும் அவர்கள் கண்கள் ஐயனது திருமேனியைப் பார்த்துக்கொண்டிருந்ததனையே யொழிய வேறொன்றிலும் செல்லாமல் கப்பறையில் போடுவதாக எண்ணிக் கீழேபோடுகிறார்கள். அடி தங்காய்! இவன் பிச்சைக்கு வரஇல்லை. நமக்கு ஆசையுண்டாக்கவே வந்தானென்கிறார்கள். எந்த எந்த அங்கங்களை யார் யார்பார்த்தார்களோ அந்த அந்த அங்கங்களை அவரவர்களே இடைவிடாது பார்த்துக்கொண்டு பின்தொடர்ந்தார்கள். பரமசிவப்படியே அவர்களெல்லாம் மகாவிஷ்ணுவின் பக்கம் வந்துவிட்டார். ரிஷிகளோ தங்கள் பத்தினிகளைப்பார்த்தார்கள். லச்சைவந்து விட்டது. தங்களது நிலைமையும் உணர்ந்தார்கள். இந்தப் புருஷனே யாவற்றுக்குங் காரணமென்றெண்ணமாய் யாகத் வளர்த்து அபிசாரின் மூலம் பெரியயானையையுண்டு செய்தனுப்பினார்கள். யானையோ பிளிறிட்டுக்கொண்டும் புறப்பட்டது. ஐயன் ஓரறையாலறைந்து தோலைக்கிழித்து, நாமெல்லாம் ஒருபாபமுமில்லாதுயிரைப் தூக்கவேண்டுமாதலால், அத்தோலை மேலணிந்து கஜசர்மாம்பரதாரி என விளங்கினார். உடனே ரிஷிகள் இவன் துஷ்டனென்றெண்ணி முநிகள் கொடிய புலியை சிருஷ்டித்தனுப்பினார்கள். புலியையும் அவ்வாறேசெய்து பக்தர்களுக்கு அருளின விஷயம் நம்போன்றவர்களறிந்துய்யும்வண்ணம் அரையில் கட்டிக்கொண்டு, வியாக்ரசர்மாம்பரதாரி எனவிளங்கினார். உடனே அநேகம்பாம்புகளை அனுப்பினார்கள். ஐயன் சர்வாபரணமாய் பெருமானதலாலும், துஷ்டர்களுக்கும் நாம் அருளுபவனானென காட்டவேண்டியும், அப்பாம்புகளைக் கையிலும், காலிலும், காதிலும், அரையிலும் மார்பிலும் அணிந்துகொண்டார். அதுகாரணம்பற்றியே பன்னகபூஷணரென்று நாமம் உண்டாயிற்று. பின் அக்கொடியர்கள் மானொன்றையனுப்ப அது கடுவண்ணடைவரவும் ஐயன் அதைத்தன் திருவரலால் தூக்கி யுயர நிறுத்தினார். அதுகாரணத்தால் மிருகதாரி எனப்பெயர்வந்தது. கொடியர்கள் பார்த்தார்கள். பெரிய உடுக்கொன்றை அனுப்பினார்கள். ஐயன் அதையுங்கை

யிற்பிடித்து டமருகஹஸ்தன் எனத்துதிபெற்றார். பிறகுயா கத்தீயையே அனுப்பி விட்டார்கள். அது தன்னெதிரிட்டயா வற்றையும் பஸ்மம் செய்யும்படிப் புறப்பட்டுவந்தாலும் பல் கோடிஸூரியன் முன்வரும் மின்மினிப் பூச்சிபோல் அபாவ மடைந்துநிற்க, ஸர்வஸம் ஹாரகாலத்தில் தமது நெற்றிக்கண் பொறி ஒன்றால் யாவற்றையும் சுட்டெரிக்கும்பரமன் தன் கையிலேந்தினர். பாவிகள் என்செய்வார்கள். பார்த்தார்கள்: வேறுகதியில்லை, தங்கள் தவத்தையெல்லாம் சேர்த்து ஓர்பூத உருச்செய்து அனுப்பினார்கள். அதைக்கண்டதும் ஐயன் காலின் கீழ் மிதித்துக்கொண்டார். பிரமவிஷ்ணுக்களுக்கேகாண்பரிய மஹாபெருமைதங்கிய பாதம் தன்மேல்பட்டதும் அப்பூதமாகிய அபஸ்மாரன்குதூகலித்தான். இது ஸமயத்தரிஷிகள் தங்களாலான சாபமெல்லாமிட்டார்கள். தங்களதுதவத்தையே அனுப்பிவிட்டார்களாதலால் இவர்களது சாபம் பயன்படவில்லை. "அற்றமில்தவங்கள்செய்யு மருமறைமுனிவர் யாரும், உற்றுரைத்திட்ட சாபமொளி மணிமுத்தம் சிந்தும், எற்றுநீர்க்கடலிற்றோன்று மிரவிமுன்மழுங்கு மீன்போல், பற்றலர் புரங்கள்செற்றோன் பாலணுகாது மாய்ந்த"; "நிற்றலுமதனைதநீயோர் நெருப்பெழ விழியாவின்னும்; உற்றனன் பரமனந்தோவுருற்றியர முய்த்தவெல்லா, மிற்றனகொல்லோ என்றே இரங்கியேஎ...ணில்சாபம், சொறறனருலகமெல்லாம் தொலைப்பவன் தொலையவென்றே" "சங்கையில் முனிவர் யாரும் சாற்றிய சாபம்யாவும்; எங்கள் தம்பெருமான் முன்னுமெய்தியதில்லையன்னோர், அங்கவன் றன்பாலுய்க்கும் அளவையிலிறுதி நாளில், பொங்கெரியதன் மேற்செல்லும்பூளை போல் மாய்ந்தவன்றே." "ஏற்றமில் முனிவர் தங்களேழைமை தனையென்னென்று, சாற்றுது மிறுதியில்லாத்தானுவை முடிப்பான் வேள்வி, யாற்றினர் பலவுமுய்த்தாரறைந்தனர் சாபமற்றுன், மாற்றிடவற்றோ தங்கள் வன்மையுமிழந்தார் மாதோ". இவ்வளவேதான், ஸ்காந்தத்தில், தக்ஷகாண்டத்தில், தக்ஷபிரஜாபதிக்கு ஸ்ரீ ததீசிபகவான் சொல்லியருளினர். ஸ்ரீ சிவபெருமானைப்பழித்து அவர்பேரில் தக்ஷன்சொன்ன ஒவ்

வொரு துறைபோலிருந்து தாடைசுத்தி செய்தனுப்பி, … வோத்கர்ஷம் செய்து அருளிய இடத்தில், சைவம்பழுத்த குருபெரியோன் சிவனுக்கு சாபம்வந்தது என்று சொல்லி விட்டால் அது மன்றே தன்தன் கக்ஷியை ஸ்தாபிக்கப்போகாதோ? அன்றே சைவம் நிலைகுலைந்து விடாதோ? இப்படியெல்லாருக்கும் பொய்யும் புரட்டும் இந்தப்பெரியவரிருந்து கட்டிவிட்டனரோ? இது நிலைகட்டிப்படுத்த …யதுபோலிருக்கிறதே இதிய தென்ன? பத்மாசுரன் என்று ஒரு அசுரனைப்படைத்து, அவனுக்கு சிவன் பய தோடியதாகவுமதையும்படைத்து சிவனுக்கு ஒளிக்கிடங்கொ… …லிங்காயம் படைத்துக்கொடுத்த இப்புலவர்கள் … தான் செய்யத்தகுதியானவர்கள் …கோத்திரத்தில்தான் இப்படி …ர்க்காதாரமில்லை யென்றால் அதேவிஷயத்தைச் சொல் யத்தில், லிங்க …ப்பத்தி …யாகிய லிங்கபுராணத்தில் …இவர்களுக்கு …பார்ப்போம். அதிலே, … மேலே சொன்னபடியே …டக்கிச் சொல்லி, …

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்றுசொல்லியிருக்கிறது. அதாவது, தக்ஷயத்திலே … நிலைமையைக்கண்டு அங்கு அப்படிநின்ற …சிவனையும் கண்டு …க் கொடுமையான வார்த்தைகளால் அந்த முனிவர்கள் பிதற்றினார்கள், ஆனால் அவர்களுடைய அர்த்தமில்லா சிவனாலேயே கிடைத்தன வாகையால் அவர் முன் ச…

ரொளி முன்உடுஒலிபோலாயின. ததீசியோரது சாபத்தால், தக்ஷப்பிரஜாபதியின் யாகம்குலைந்தது? பிருகு முனிவன் சாபத்தால் மஹாவீரியவானாகிய மஹாவிஷ்ணுவுக்கும், துக்கரூபமாகிய பத்துப்பிறவிவந்தது. கௌதமருடையசாபத்தால் இந்திரனுக்கு விரைமுதலாகிய மூன்றும் அழிந்தன. இப்படி இன்னும் பரமசிவன் நீங்கலாகஎவ்வளவோபேர்களுக்கு எல்லாம் சாபம்வந்ததுண்மைதான். பரமேசுவரனை வேண்டாதவர்களாகியிருந்த தோஷத்தாலிந்த முனிகளது ஜபம் பலிக்கவில்லை. என்றதேகருத்து. ஆதலால் இங்கும் சிவாபகர்ஷம் சொல்லப்படஇல்லை. ஆனால் அத்துடனில்லாது இவர்கள் தெய்வத்தின் நட்டே வெளியாகிறது. இந்திரன் பெற்றசாபம் எந்தையார்தலையிலேற்றும், மந்திகாள்! மாய்வேயிஷ்நாள் மலைவனோ மாய்வோர் சொல்லால்? அந்தமும்பிறப்பும் சாபம் அடைதலுமரிக்கேயன்றோ! தெந்தனமெல்லாம் விட்டுத்தே டிவிர் தேறுவீரோ. ஐயோ! ஜலஸ்பர்சத்தால் தணிந்த நெருப்பா மறுபடிசுடுமோ! தவத்தையெல்லாம் வீண்செய்து, புதமாகவும், உடுக்காகவும், மானாகவும், மழுவாகவும், அனுப்பிக்கெட்டு, அநாணிமித்தம் தவக்கேடுற்ற ரிஷிகளின் சாபமெப்படிப் பலிக்கும்? "యోంబస్వ్యింగేవలాంటేనస్యఃంబాసిఫ స్వసాంబ్రకో ப்" என்று தொடங்கிய சுருதியின் வண்ணமேஸர்வஸம்ஹாரகாலத்து ஆண்டானிடமெங்குமான்மகோடிகள் அந்த ஆண்டவனையே சபித்தாரென்பதுமலடிமைந்தனுக்கு ஆண்டுநிறைவு ஆயிற்று என்பதுபோலிருக்கிறதே! இப்படியாகவும் தாறுமாறாய் உளறியழியும் பேய்களுக்கு என்னகதியோ! நம்பரமகதியே அறிவார்.

(9) ஸரித்தான், லிங்கபூஜைசெய்வது விகாரமாயிற்றே. ஆண்குறியும் பெண்குறியும் சேர்ந்திருப்பது போலுமுள்ள இவ்வுருவத்தை நாம் வணங்குவது எவ்வளவு அகௌரவமாயிருக்கின்றது! என வினவுவர்.

இது மூடக்கேள்வியேயானாலும் இதனால் சில வாயாடிகள் நம்மவரை வென்றுவிட்டதாக கௌரவம்பாராட்டுவாராதலா

ல் அவர்கள் நிமித்தம் இதோ சொல்லுதும். முன்னைப் பின்னை எந்த ஜன்மத்திலாவது கோயிலுக்குப்போய் சிவபெருமானை தெரிசனைசெய்த எவருமிப்படிக் கேட்கமாட்டார்கள். சிவபெருமானுடைய லிங்காகாரம் ஆவுடையாளின் மீது தோன்றுவது எப்படி விகாரம்? இந்தமாதிரி எப்போதாவது ஆண்குறி பெண்குறி அமைவதுண்டா? ஐயோ இக்கேள்விக்கும் பதில்சொல்லும்படி நம் தலைவிதிவந்ததே சிவ! சிவ!! சிறிதும் யோசியாத சில வேதாந்திகளும், வைணவரும், கிறிஸ்தவரும், இவர்கள் கூட்டுறவால் கெட்ட வேறு சில பேதைச் சிறுவர்களும் இப்படி உளறுவது ஸஹஜம். அவர்களுக்கு சிவபூஜாமஹிமை என்தெரியும்? லோகம் முழுவதும் புருஷன் பெண்சாதி என்னும் இருவரால்ஆனது என்றும், இதை ஒழிய வேறில்லை என்றும் காட்டுவதே லிங்காகாரமாக வேதாந்திகளில் சிலர் உளறுகின்றனர். எப்படியாவது சைவத்தை நீந்தித்து வைணவத்துக்கு பெருமைகாட்ட ஆசைகொண்ட வைணவரோ இது தாருகாவனத்தி லற்றுவீழ்ந்த சிவன்குறியாகவும் அதையே பூஜிக்கும்படி சைவர்களுக்கு சாபம்வந்ததாகவும் சொல்லுவார்கள். கிறிஸ்தவரோ மேற்கூறிய இருவர்கள் சொல்வதையும் கலந்து அப்படியொருதடவை, இப்படியொருதடவையாக உளறுவார்கள். நம் சிறுவர்கள் இதைக்கேட்டு நான்ஸென்ஸ் என்பார்கள். இவ்வல்லலெல்லாம் தொலையும்படி நாமறிந்த உண்மையைச் சொல்லுவோம். இம்மாதிரிக் கேள்விகள் பிறக்குமென்றே நாம் சென்றபலகோயில்களிலும் சிவபெருமானது திரு உருவத்தை நன்றாக உற்றுப்பார்த்திருக்கிறோம், நாம் போயிராத மஹாஸ்தலங்களுக்குச்சென்ற நமது நண்பரை, ஸ்ரீ சிவபெருமானது திரு உருவமிப்படி யிருக்கிறது என்று பார்த்துவரும்படிசொல்லியு மறிந்திருக்கிறோம். ஒரு காலத்தில் ஸமயம்வந்துகோர ஒருதிருக்கோயிலிலுள்ள ஸ்ரீசிவலிங்கத்துக்கு கையாற, மனதார திரு எண்ணெய்காப்பும் திருமஞ்சனமும் செய்துமிருக்கிறோம். இதனாலெல்லாம் நாமறிந்தது யாதெனின் சிவலிங்கங்களில் மேல்நிற்கும் ரூபா ரூபமு

ள்ள, அதாவது அருபத்துடன் ஒத்துப்பார்க்கும்போது ருபமாகவும், ருபத்துடன் ஒத்துப்பார்க்கும்போது அருபமாகவும் உள்ள நீண்டஸ்தாணு. ஆவுடையாளி லிருந்து புறப்பட இல்லை. ஆவுடையாள், வெளிப்பார்வைக்குமட்டும் ஆதார பீடமாய்த்தோன்றினும் உண்மையில் கவசம்போலவே இருக்கிறது. அதாவது ஆவுடையாளை கழட்டிவிடலாம். அந்த ஆவுடையாளின் அடி இருப்பிடத்துக்கும், பாதாளத்தி லிருந்தே இந்த லிங்காகாரம் உத்பத்தியா யிருக்கிறது. இப்படியுள்ள இடங்களிலெல்லாம் ஸ்வயம்பு என்று லிங்கத்தை ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆவுடையாளின் ருபமும் ஒருவழித்தல்ல. சில இடங்களில் சதுரமாக அடுக்கல்போலவும், சில இடங்களில் மேலும்கீழும் வட்டமாக இடை சிறுத்தும், சில இடங்களில் முழுவட்டமாகவும், சில இடங்களில் தொட்டிபோலவும், சில இடங்களில் ஆவுடையாளே இல்லாமலு மிருக்கின்றன. ஆவுடையாளுள்ள இடமெல்லாம், அபிஷேகஜலம் அதினின்றும் கீழேவிழும்படி கோமுகி வைத்திருக்கிறது, அல்லது ஜலம் போகும்படி வேறோ ஒரு துவாரம்செய்திருக்கிறது. இப்படியெல்லாமிருக்க, யானைபார்த்த குருடர்போல் ஏன்று தந்தம் அறியாமையைக் காட்டி சிவலிங்கத்தை, யோனியுடன் ஸம்பந்தித்த லிங்கருபமென்னவேண்டும்? சிவலிங்கபூஜை ஒன்றே அல்லவா யாவற்றிலும் உயர்ந்தது. சிவபெருமான் திரு உருவு லோகாகாரமாய் நமக்குத் தெரிந்த இந்த பூமிக்கும் இதிலுள்ள சராசரமான பலவற்றுக்கும் அடிகுறியாய் நிற்பதே ஆவுடையாள். ஸ்ரீ சிவபெருமான் இவ்வாவுடையாளின் உள்ளும் புறம்பும் இருப்பதோடு இதுபோன்ற எவ்வளவையோ கடந்துயர்ந்தவர் என்பதைக்காட்டவே அன்றோ லிங்கருபம் ஆவுடையாளுக்கு மேல் உயர்த்திக்காட்டி யிருக்கிறது. நாமறிந்த பலவற்றுக்கும் ஆதியாய் நின்று இவற்றையெல்லாம் விரவிக்கலந்து இவற்றுக்கெல்லாம் அதீதப்பட்ட திவ்ய ருபத்தை எம்போன்ற எளியவர்களுணர்ந்து கவலைக்கடலினின்றும் நீங்கி ஓர் தைரியங்கொள்ளும் பொருட்டு அநாதியாகவே அமைந்துள்ள ஸ்ரீ சிவருபம் பே

கைகளுக்கு எப்போதும் தடுமாட்டம்தான் செய்யும். யோனிவா
ய்ப்பட்டு [illegible] லிங்கத்திலேயே கிரப்பியடையும் பேதைகளுக்கு, மஞ்
சட்காமாலை க்கேதாரக்கு உலகம்முழுதும் மஞ்சளாய்த்தோ
ன்று [illegible] போல் [illegible] சிவபெருமான் ரூபமும் மற்று முள்ளபலவு
ம் போல [illegible] தோன்றும். அவரவர்பரிபாகத்துக்கேற்ற
[illegible] யே, பாமர் பேய சாட்டுவாராதலின் அவர்களுக்கு
[illegible] தோன்றினர். போதிக்கப்பட்டுப் பிற
[illegible] யன்றெண்ணி அறிபவர்க்கும், அவர்க
[illegible] வகையில் சிவபெருமானது உண்மைக
[illegible] முதலிய பேதைகள்
[illegible] கட்டாத பெ
[illegible] உருவத்
[illegible] பிரயலிங்கம்
[illegible] காமனுபவிப்ப
[illegible] புலன்களுக்கு வேத்யமா
[illegible] கொண்டு, யாவற்றிலும் மந்ய
[illegible] சிவபெருமா
[illegible] காட்டுதேயன்று வேறெதைக் கா
[illegible] யமாவதின்பொ
[illegible] சுருவாய் [illegible] மாகவு மில்லா
[illegible] மாகவே அமைந்திருப்பார்களோ
[illegible] யாவற்றிலும் மேலான
[illegible] டாகத்திலிருத்தலா
[illegible] பரமேசன் தான்தானென்று சிவ
பெருமாகிய பெருமையாளர் செய்துவரும் விபரீதமும் பரி
காசமுமான கதைகள் பல்லிளித்துக் கொண்டன. இந்த
மெய்யஞான மூர்த்தியான லிங்கபூஜை யாவர்க்கும்பொது.
இதை, சைவர் தமக்கே உரித்தென்றல் அடாது. துலுக்க
ரும் இதைச்செய்யலாம், வைணவரும் செய்யலாம், கிறிஸ்தவ
ரும் செய்யலாம். எல்லாரும் செய்யலாம். கடவுளொன்றென்று
நம்பி, அக்கடவுள் நாமநிந்தநும், நம்புலன்களுக்கு விஷயமா

வதுமான யாவற்றையும் கடந்த அதீதர் என்று விசுவசித்து,
அவரை அந்தநிறைந்த ரூபத்தில் ஆராதிக்க எண்ணமுள்ள
வரும் இந்த லிங்காராதனம் செய்யவேண்டியது தான் அதயா
வசியம், லிங்காராதனம் யாவர்க்கும் பொதுவாதலாலேயே இந்த
லிங்கம் பொது ரூபமாயிருக்கிறது. அதற்கொரு முகமமைத்
தால் சடையைக்காட்டி சைவமென்னலாம்; நாமத்தைத் தீட்
டி வைஷ்ணவம் என்னலாம்; நெற்றியிலாணி அறைந்து கிறிஸ்
த்தவமென்னலாம்; தாடிவைத்து மசமதியமென்னலாம். இவ்
விதவழக்குகளுக்கு இடங்கொடாது யாவர்க்கும் பொதுவாய்
நிற்றலாலேயே யாருமிந்த லிங்கபூஜை செய்வதவசியம். ஒரு
வன் இந்த லிங்கபூஜை செய்யும்போது எவனாவது சைவன்,
நீயேனடா இதுசெய்கிறாய், இது எனக்கல்லவா உரித்தது என்
றால், உடனே அந்தச்சைவனைக் காறியுமிழ்ந்து அடா மூடா
இது பெரும்பெருமானின் திவ்ய மங்களரூபம். இது உனக்கு
த்தான் பூஜாயோக்யமென்று காட்டடா என்று கைகொண்டு
மட்டும் அறைந்தாலும் பாபம் கிடையாது. இத்தகைத்த லிங்க
த்தின் பெருமை இன்று பசுமரத்தாணியறைந்தாற்போலும்
வெளியானதால், ஏஜனங்களே! பலமதத்தால் பிரிந்தவர்களே!
நீங்களெல்லோரும் இதை ஆராதியுங்கள். இதுவரையில் லிங்கபூ
ஜை உங்களிடமில்லாதுபோனாலும் இன்று முதற்கொண்டு
செய்யுங்கள்.

சைவர்களது ஆதிக்யமிந்த லிங்கபூஜையாலேயே வெளியா
கின்றது. அவர்கள் கோயிலிலேயே மூலஸ்தானமாயிருக்கும்
மூர்த்தி அரூபியாய், எங்கும் நிறைந்து, யாவற்றையும் கடந்த
தான ரூபமாயிருக்கிறது. இது என்றும் கோயிலிலேயேயிரு
ப்பதும், எப்போதும் வெளியாகாததுமான லிங்கமூர்த்தி. இது
சிவபெருமானது ஸதாகாலமுமுள்ள தன்மையைக் கா
ட்டும் அறிகுறி. கோயிலினின்றும் உத்ஸவகாலங்களில் வெளி
யேறும், ஸோமாஸ்கந்தம், உமாகாந்தம், ஆநந்தநடனம், முத
லிய திவ்யதேஜோ மூர்த்திகள் மேற்கூறிய எங்குநிறைந்த தன்
மையுள்ள ஸ்ரீசிந்தனமூர்த்தி ஆன்மாக்கட்கவரவர் பரிபாக

ம்பார். அருவங்களின் நிமித்தம் கொள்ளும், விசேஷமான ரூபங்களும் ரூபங்கள். ஆகவே அரூபாகாரமும் அதினின்று வேறுபட்ட ரூபாகாரமும் இச்சைவர்கள் கோயிலிலேயே அமைத்துள்ளார். மற்றைய கோயில்களிலோ உள்ளிருப்பதும் ரூபம். வெளிவருவதும் ரூபம். இதனால் தெய்வலக்ஷணம் முழுவதும் புலப்படவில்லை. தெய்வத்துக்கு எங்கும் ரூபமே ஸ்தாபிப்பதாகிறது. உள்ளே பதிந்திருந்த ரூபம் வெளியே நடந்துவருவதில் இரண்டிடத்தும் ரூபமாகவே உள்ளதொழிய அரூபத்தினின்றும் வெளியாரும் அருவுருவம் இதுவென்று சுட்டிக்காட்ட ஒன்றுமில்லாதொழிகிறது. சிவபெருமானுடைத்துச் செய்யும்பூஜைகளிலும் விக்ரஹ ரூபத்தைவிட லிங்கபூஜையே சிலாக்கியமென்பதை 'ஞானமத்தாலும், கர்மத்தாலும், தபத்தாலும், யோகத்தாலும் உங்களுக்குள் வேற்றுமையில்லையாயினும், கிருஷ்ணா! ஜனர்கள் லிங்கரூபியான சிவபெருமானை ஆராதிப்பதால் அவர்களுக்கு மேன்மை யதிகமாகிறது" எனச்சொல்லும் பாரத அநுசாஸனபர்வ வாக்கியமே காட்டும். ஆதலின் இதைஇங்குநிறுத்திப் பிறவற்றையும் கொஞ்சம் விசாரித்து முடிப்போம்.

(10) இன்னும் ஒரு ஆக்ஷேபணையை கவனிப்போம். உத்தேசம், மார்க்கம் என்று இரண்டு உண்டல்லவா? உத்தேசமாவது என்ன? எதைச்செய்ய, அல்லது அடைய ஆசைகொண்டிருக்கிறோமோ, அல்லது குறிக்கிறோமோ அதுவே உத்தேசம். உதாரணமாக—ஜன்மாக்களெல்லாம் பிறப்பாகிய துக்கத்திலிருந்து நீங்கி சுகமடைய ஆசைகொள்ளுகிறார்களல்லவா! இங்கு அந்த சுகத்துக்கு உத்தேசம் என்றுபெயர். இதையே குறி, லக்ஷ்யம், எண்ணம், என்று பலவிதப்பெயர்களா லழைப்பது வழக்கம். இதை அங்கிலேயபாஷையில் End என்றுசொல்லுகிறார்கள். மார்க்கமாவது என்ன? ஒன்றையடைய எந்த வழியாய்ச்செல்லுகிறோமோ அதுவே மார்க்கம். இதையே படி, நெறி, க்ருஷி, தொழில் என்று பலவிதப்பெயர்களால் சொல்லுவதுவழக்கம். இதையே, Means என்று அங்கிலேயர் சொல்லுவார். உதாரணமாக, தேகசௌக்யத்தை அடைய,

பணத்தை ஸம்பாதிக்கிறோம். இங்கு பணத்தை மார்க்கமென்று சொல்லப்படும், இப்படியுள்ள உத்தேசம், மார்க்கம், என்பவற்றில் உத்தேசத்தை முன்னிட்டு நாம்மார்க்கத்தில் செல்லும்போது சில ஸமயங்களில் உத்தேசம் அடியோடுமறந்து போய், மார்க்கமே உத்தேசமாய் விடுகிறது. உதாரணமாக— தேசஸௌக்ய உத்தேசமாக பணத்தை ஸம்பாதிக்கத் தொடங்கவே, தேசஸௌக்யம் அறவேமறந்து பணந்தேடலே உத்தேசமாய்விடுகிறது வழக்கமல்லவா? ஆசையால்தானே கருமி என்னும் பெயரேவந்தது! இந்தமாதிரி, மார்க்கமே உத்தேசமாக, ஆதியுத்தேச மடியோடேபோவது ஸஹஜந்தானே? இவ்வுலகத்தில் ஸ்வபாவமாயுள்ள ஒரு நியாயமென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்கதுதானே! இந்தநியாயப்பிரகாரம் “தெய்வாராதனம் செய்ய உத்தேசித்துக்கல்லை ஆராதிக்கும்போது, தெய்வத்தின் ஞாபகம் அறவேமறந்து கருங்கல்லே தெய்வமாகி விடுமென்றே” என்று நம் எதிரிகள் கேள்வி. இந்த வினாவின் யோக்யதையைப் பின்னால்யோசிப்போம்.

(1) இப்போது விடையொன்று ஒருயுக்திசொல்லி நமது எதிரியை அடக்கிவிடுவோம். நமது எதிரி ஆஸ்திகரானால், “ஐயா! நாங்கள் கல்லைக்கடவுளாக எண்ணநேரிடும்; உண்மைதான்: தங்களுடைய ஆராதனையெப்படி? மனத்தாலே கடவுளைபாவித்து ஆராதிப்பதுதானே!! தங்களுடைய மனதையே தாங்கள் கடவுளாக எண்ணநேரிட்டுவிடுமே அப்போது என்னசெய்வீர்? பிறகு, தங்களைத் தாங்களே கடவுளாக எண்ணநேரிட்டுவிடுமே! அப்போது தங்களது ஆஸ்திகம் எப்படிமல் நிலைக்கும்!! யோசித்து சித்தஸமாதானத்துடன் பதில் சொல்லுங்கள். அதேபதில் எங்களாலும் வந்துவிட்டால் அப்போது உமது வினா எம்மட்டில் நிலைக்குமென்றுயோசியும்!!” என்று சொல்லிவிடுவோம். நமது எதிரி நாஸ்திகரானால், “ஐயா! தாங்கள் கடவுளையே நம்பாதபோது கல்லுத்தான் எங்களுக்குத் தெய்வமானால் என்ன! கல்லுத்தான் தெய்வமானால் என்ன? எங்களுடைய ஆஸ்திகத்தையே ஒத்துக்கொள்ள

ந்தாங்கள், நாங்கள் அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டப்போகிற வீட்டுக்கு பிளான்போடவருகிறது என்ன நியாயம்? நாங்களொரு குருட்டுசேதனமாய் இல்லாததை நம்புகிறோம்; அந்த நம்பிக்கையின் பேரில் நாங்கள் செய்யும்தொழில்களில் எது எப்படியானாலும் தங்களுக்கென்ன தலைவலி? அடிப்படையில் கைவைத்துவிடுங்கள், அதுவேபோதும்". என்று பதில்சொல்லி வெற்றிலைபாக்குக் கொடுத்துவிடுவோம். ஆஸ்திகரும் அநாஸ்திகருமாகாது வேடதாரிப் பூனைகளாயுள்ளபாலிசர் வினவுவரேலோ தங்களது கொள்கையென்னவென்று கேட்டு எப்படிப்போதிலும் விடாமல் உதைக்கிறோம். மற்றுமுள்ள சிலர் வந்தால் அவர்களுக்கு அப்போதே செலவுக்குக்கொடுத்தனுப்புகிறோம். ஆதலால் இந்த விருவால் நமது ஆராதனம் தாழ்ந்திலது என்பது திண்ணம்.

(2) நம்மை எதிர்த்த விரோதிகளை இருந்த இடம்தெரியாது ஓட்டிவிட்டோமாதலால் இப்போது நமது கோட்டையை பலப்படுத்தற்கான ஆதாரங்களை ஜாக்கிரதையாய் கவனிப்போம். பாசத்துக்கு ஸ்வபாவதர்மமாயுள்ள எதையும், நாம் மறுக்கமாட்டோம். பூமிக்கு எல்லாப்பொருள்களையும் தன்னிடம் இழுக்கும் சக்தியுண்டென்பது நாமும் கொண்டகொள்கைதான். நெருப்புக்கு [illegible] அம்சம் ஸ்வபாவதர்ம மிருப்பதுடன் பதார்த்தங்களை மேலெழுக்கி [illegible]நக்கச்செய்யும் ஸ்வபாவதர்மமுமுண்டென்பது எமது கொள்கைதான். அதேமாதிரி, [illegible] அந்தந்த [illegible] கென்று [illegible] ண்டமார்க்கமே [illegible] எமது கொள்கைதான். இந்த [illegible], [illegible], [illegible] காலங்களிலும் நாம் [illegible] எண்ணமாட்டோம். மறுக்க [illegible], புத்தியாவது [illegible] யாதுதான். ஒரு ஸ்வபாவ [illegible], [illegible] கெதுவாயில் [illegible] தம் [illegible]லையோ, [illegible], தன்னிலும் பெரிய [illegible] தன்மீது [illegible] இல்லையோ, அதுவரையில், ஸ்வயாதிகாரம் செய்யுமென்பது யாரால்தான் மறுக்கமுடியும்? இந்த ஸ்வபாவதர்மம் நமது [illegible]க்கு விரோதமென்றல்லவோ

நமது எதிரிகள் என்னுகிறார்கள். "இமைப்பொழுது முபகார மல்லால் வேறொன்றியக்கா நிர்க்குணக்கடலாய்" இருக்கும் எம்பெருமானனது ஆஞைசயில் எதுதான் நமக்குவிரோதம் செய்யும்? இந்த ஸ்வபாவதர்மத்தாலேயே நமது விக்ரஹாரா தனம் பயனுள்ளதாகிறது. இது ஒன்றில்லாவிடில் நாம் விக்ர ஹாராதனையை அறவே விட்டுவிட்டு, தத்திங்கணதோம், ஆட வேண்டித்தான் வரும். இதன் பிரபாவத்தைப்பார்ப்போம். நமது உத்தேசமென்ன? நாம் கடவுளை யுண்டென்று நம்புவ தற்கும், அவனையாராதிப்பதற்கும் காரணமென்ன? நாம் ஸதா ஆநந்தமூர்த்திகளா யிருந்துவிட்டால் தொள்ளாயிரம் கடவுளி ருந்தாலும் எமக்கு அக்கடவுளது இருப்பைப்பற்றி யோசிக்க டம் அவசியமில்லை. கடவுளது இருப்பைப்பற்றி மட்டுமென் ன? பிற ஆன்மாக்களது இருப்பைப்பற்றிக்கூட விசாரிக்க அவசியமே இராது. அப்போது நமது இருப்பைக் கூடவிசாரி க்க அவசியமிராது. ஆனால் நாம் துக்கரூபியாகவே யிருக்கின் றோம். "புல்லாகிப் பூடாய்ப்புழுவாய் மரமாகிப்-பல்விருகமா கிப் பறவையாய்ப் பாம்பாய்க்-கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் - செ ல்லாஅநின்றஇத் தாவரஜங்கமத்துள்" கிடந்துதத்தளித்து "ஆர ம்பாவமென்னுமருங்கயிற்றால் கட்டுண்டு" விழித்துக்கொ ண்டு இப்பிறப்பினின்றும் நீங்கவேண்டும்; இவ்வுலக இழவுநீ ரவேண்டும்; என்றுஸதா எண்ணுகிறோம். இந்தஅவஸ்தையில் நீங்க எண்ணமில்லாத மனிதரேகிடையாது. நாஸ்திகர்கள்கூட இந்த அவஸ்தையை மறுத்தார்களில்லை. இந்த அவஸ்தையினி ன்றும் நம்மைநீக்குவோர் கிடையாது; இது நமதுதலையெ ழுத்து; என்றுவருந்தினாலும் வருந்துவார்களே ஒழிய தெ ய்வமென்று ஒன்றை அவர்கள் நம்புவது இல்லை. தெய்வத் தை நம்பாவிட்டாலும் நமது அவஸ்தைநீக்கத்தில், ஆசை நீங்கினாரில்லை. ஆகவே நமது எல்லாருடைய உத்தேசமும் ஆநந்தமடையவேதான். இந்த உத்தேசத்தாலேயே ஆஸ்திக ரெல்லாம் தெய்வாராதனம் செய்கிறார்கள். அந்த ஆராதனத்

றில் மேன்மையென்றுகண்டு, விக்ரஹாராதனம் நாம்செய்கி ரோம். ஆகவே நமது உத்தேசம் ஆநந்தமடைதலும், அதன் மார்க்கம், தெய்வாராதனமுமாய் முடிகின்றது. உத்தேசமாகிய ஆநந்தமடைதல் மறந்து, தெய்வாராதனம் ஒன்றே நமக்கு உத்தேசமாய்விடும் என்பதுதானே, நாம்சொல்லிய ஸ்வபாவ தர்மத்தால் முடியும்? தெய்வாராதனம் மட்டுமே நமக்குத்தோன்றி நமது உத்தேசமாகிய மோக்ஷாபேக்ஷையைவிட்டு நிஷ்காமியராய் நாமாவதில் நாமடையும் நஷ்டமென்ன? அதைவிடலாபமென்ன? தெய்வாராதனையிலேயே ச்ரத்தை அதிகரிக்கும்போது அன்பர்க்கு எளியவனாகிய பரமேசுவரன் தன் பொறுப்பாய்க்கொண்டு நமது பாசத்தை நாசமாக்குவான் அல்லவோ? ஆதலால் நாம் நமது உத்தேசத்தை அறவேமறந்தாலும் நாம் நமது உத்தேசத்தை அடையச்செல்லும் மார்க்கம் தானாவலுவில்வந்து நமது அபீஷ்டத்தை நிறைவேற்றும் போது, நமக்கதை விடவேறென்னவேண்டும்? ஆதலால் விக்ர ஹாராதனத்தால் தோஷமேயில்லை! இல்லை!!

9). இது நிற்க; மார்க்கம் உத்தேசமாய் விடுமென்று பயப்பட்டு நம்மெதிரிகள் தேகஸௌக்யமாகிய உத்தேசத்தைக் கொள்ள மார்க்கமாகிய பணந்தேடலில் நிற்குவார்களோ? மார்க்கம் உத்தேசமாய் விடுமென்று பயந்து உத்தேசத்தை மட்டும் நினைத்துக்கொண்டிருப்பதில் லாபமென்ன? சாப்பிடவேணும் என்று எண்ணிக்கொண்டே இருந்து, அதன்மார்க்கமாகிய பணந்தேடலை செய்யாவிட்டால் உயிர்வாழ்வதெப்படி? எந்தச்செயலும் மார்க்கம் உத்தேசமென்னும் விஷயங்களைத் தப்பிப்போகாதே; மார்க்கம் உத்தேசமாகுமே என்று சும்மா இருந்தால் எந்தக்காரியமும் முடியாதே. எல்லாவிதத்திலும் மார்க்கம் உத்தேசமாகுமே யென்று பயமில்லாமலிருந்து காரியஸாதகமடைவோர், தெய்வாராதன விஷயத்தில் மட்டும் மப்படி பயமடைவது புலியைக்கண்டால் துணிந்திருப்பேன் புல்வாயைக்கண்டால் பயந்திருப்பேன் என்பது போலிருக்கிற

தே ஒழியவேறென்ன? மார்க்கம் நடக்[illegible]ணைத் த[illegible]க்க வழியு மிருக்கிறபடியால் செய்யாததனைத்துக்கு மார்க்கமாகிய பலவற்றிலும் ஜாக்கிரதையாய்த் [illegible]க்கவேண்டுமா இதனால் விக்கிரகாராதனையில் கல்லைத்தொழுதல் மார்க்கம் என்று நாம் ஒப்புக்கொண்டதாக எண்ணவேண்டாம் கல்லை [illegible]ங்கள் ஒருநாளும் தொழுவதில்லை. தேவனுடைய தேகம், அநுக்ரஹரூபம், இரண்டுக்குதான் நாம் தொழுவது. அதுவே [illegible] தொழஸாத்யமா[illegible]மென்று எண்ணாது. அன்றியும் உபதேசத்தை விசேஷமாக எல்லாரும் கொண்டு மார்க்கத்தில் [illegible]மில்லாதிருப்பது பிசகென்பதையும் மறக்கக்கூடாது. [illegible] என்றுவிருக்கும் [illegible] கடைப்பிடித்து விடாதேயுங்[illegible]. அப்படிச் செய்யவேண்டும், இப்படிச்செய்யவேண்டுமென்று எண்ணி நின்றும் ஆகாயப்பொருள் வழக்கத்தையும் மறந்து விடாதேயுங்கள். பள்ளிக்கூடங்களில் ஒருநாள் [illegible] விடுமுறைநாட்கள் வரும்போது நாமெல்லாரும் அப்படிப் படிக்கவேண்டும் இப்படிப் படிக்கவேண்டும் என்றெண்ணுவதும், பின்போவதும், காலவியவஸாயமாகிய "டைம்டேபிள்" செய்துகொள்ளுவதும், அதற்குள்ள மார்க்கத்தில் பிரயத்தினத்தால் ஒரு எழுத்தும் படிப்பாமல் நின்றும் எல்லா [illegible] அநுபவத்திற்கு நீங்கியலாமே. எதிரி எதிர்க்கின்ற பொழுதுபோது பின்னும் போட்டுக் கொண்டிருக்கவேண்டுமோ அல்லது ஒருமார்க்கத்தில் பிரயத்தனிக்கவேண்டுமோ? பிறப்பாகிய துக்கத்தைவிட நமக்கெதிரி வேறுண்டோ, இவ்வெதிரியை படைகொண்டு வெல்ல முடியாதே. நயம் பயம் இந்த எதிரியிடம் செல்லாதே. லஞ்சம் முதலியவற்றால் திருப்திசெய்யவும் முடியாதே. இவ்விஷயத்தில் மார்க்கம் உத்தேசமாய் விடுமே என்று பயந்து விட்டால், பயமே நம்மைக் கெடுத்துவிடுமே. ஆதலால் எல்லாவற்றிலும் நாம் செய்வதும் அநுபவிப்பதும்போலவே மார்க்கத்தில்ஒழுகல் இங்கும் அவசியமே ஆகிறது.

(4) நாம் மேற்கூறியதைக் கேட்கும் சிலர் ஓஹோ! நல்ல புத்திசாலி!! இங்கு தெய்வாராதனமல்லவா உத்தேசம்? கல்லை வைத்துக் கும்பிடலல்லவா மார்க்கம்? இதைவிட்டுவிட்டு மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதேன்? என்று தைரியமாய் வருவார்கள். அப்படிவந்தால், "ஐயா படபடப்பில்லாமல் சித்தஸமாதானத்தோடு பேசும்," என்றுசொல்லிவிட்டுப் பின்னும சொல்லுவோம். தெய்வாராதனத்துக்காகக் கல்லைமார்க்கமாய்க் கொண்டோமா? இல்லையே! நித்யானந்தமடைவதின் பொருட்டு தெய்வாராதனம் செய்யும்படி தொடங்கி, லோகத்திலெல்லாம் வழக்கம்போலவே, தெய்வத்தின் தேகமாகிய கல்லில் தெய்வத்துக்கு வணக்கம் செய்கிறோமே ஒழிய வேறெதுவும்நாம்செய்வதுகிடையாதே? ஒருவருக்கின்னொருவர் செய்யும்மரியாதை அவருடையதேகத்துக்கேயன்றி ஆன்மாவுக்கன்றே! நாங்கள் தொழுங்கல்லைக் கடவுளது தேகமல்ல என்று எப்போதும் யாரும்சொல்லார்களே!! எங்கும் நிறைந்த கடவுளுக்கு அந்த "எங்கும்" என்ற இடம் தேகமல்லவா? விக்ரஹாராதனம்செய்யும் யாராவது, தெய்வத்துக்குச் செய்யவேண்டிய வணக்கத்தைக் கல்லுக்குச் செய்கிறோமென்பார்களோ? அப்படிச் சொல்லுவோர் நமது விரோதிகளுடைய மாறுக்கரன்றிப் பின்னை யாவரிருக்கிறார்கள்? பரமனது அஷ்ட தநுவிலொன்றாகும் கல்லில், அல்லது செம்பில் ஆராதனம் நடப்பதாலே பேதானல்லவா, ஸ்வாமி புறப்பட்டார்; ஸ்வாமிக்குப் பின்னோடனே, முன்னோடனே,யெல்லாம் பணிக்காயிருக்குது; என்றுசொல்லுகிறார்கள்? தெய்வமென்பதை பரம்பரை வழக்கத்தாலேயே தொழுபவரும், தெய்வத்தைப்பற்றி ஒன்றுமறியாதவரும் ஆன, தாழ்ந்தஜாதிமனிதர்கள் கூட நாம்செய்யும் விக்ரஹாராதனத்தைக் கடவுளது தேக ஆராதனமாகச்சொல்வாரேயன்றி தெய்வாராதனையை உத்தேசித்துக் கல்லாராதனையான மார்க்கத்தைச்செய்வதாகக் காதாலும் கேட்க உடன்படாரோ! எங்காவது ஸ்வாமி புறப்பாடாகி திருவோலக்கம்கொள்ளு

ம்போது நமது விரோதிகள் செல்லட்டும். அங்கு தர்சனார்த்தம் வந்தவர்களில் கடையான புத்தியுள்ளோன் ஒருவனைநோக்கி ஏண்டா, கன்னத்திலடித்துக்கொண்டாய் என்றுகேட்கட்டும். "மோக்ஷமடைய" என்று அவன் பதில்சொல்லுவானே யல்லதுவேறொன்றும் சொல்லான் என்பதுதெரியும். "போகிறவழிக்குவேண்டும்"; "வாழவேண்டும்"; அந்த நன்மையடையவேண்டும்; இந்த நன்மையடையவேண்டுமென்று ஜனங்கள் சொல்லுவார்களன்றி தெய்வாராதனையை உத்தேசித்து இந்தக் கல்லாராதனைசெய்கிறேனென்று யாரும் சொல்லமாட்டான். அல்லது பிறர்சொல்லிக்கேட்கவுங்கூட யாரும் ஸம்மதிக்கமாட்டான். அப்படியாகவும் விக்கிரஹாராதனைசெய்வோரில் ஒருவரும் கொள்ளாத உத்தேசத்தை, அவர்கள் எல்லாருங்கொண்டதாக எண்ணி அதன்பேரில் ஆக்ஷேபணைகள் கொண்டுவருவது மதியீனமாகவே முடிவதால் நம்மெதிரிகள் வாயடங்கிக் கிடப்பாராக. ஜீவனற்ற பிணத்துக்கு மரியாதைசெய்து பெட்டியில்வைத்துப் பூஜித்து ஆராதிக்கும் தங்கள் பேய்த்தனத்தைச் சிறிதும் எண்ணாது, ஸர்வஜீவதயாபரனை அவனுடைய தேகத்தில், அவனுடைய ரூபத்தில் வணங்கும் எம்போன்ற பெருநலந்தோரை ஏளனம்செய்பவராகிய இதுருமதிகள் இனியாவது ஈசுவராராதனையும், அடியார் ஆராதனையும் செய்யாது முத்திக்கு வழிதேடுவாராக !!

(11) நல்லது; வேதத்தில் துரியமூர்த்தியாய் சொல்லும் பொருள்நிர்க்குணமூர்த்தியேயன்றி ஸகுணமல்லவே, ஸகுணத்திலல்லவா விக்ரஹாராதனம் செய்யலாம்; நிர்க்குணத்துக்கெப்படிச் செய்வது! சைவர்கள்சொல்லும் பதியாகிய ருத்ரன் ஸகுணமூர்த்தியாதலால் விக்ரஹாராதனை சைவர்கள் செய்வது நியாயந்தான்; நிர்க்குணப்பிர்மஉபாஸனையொன்றுதான் மோக்ஷம்கிடைக்கும்; ஆதலால் சிவஉபாஸனை மோக்ஷப்ரதமாகாது. ஆதலால் சைவத்தை மேலிட்டதாகிய வேதாந்தமதமே மேலானது. விக்ரஹாராதனையில் பயனில்லை.என்று

வேதாந் சனைகண்டவர்போல் உளறுபவர்உண்டு. அவர்களு க்கு இங்குசொல்லுவோம்.

நிர்க்குண மென்பதன் பொருள் குணமில்லாததென்பதே. குணமென்றாலென்ன? வேதம்முழுவதும் பார்த்தாலும், ஸத்வம், தமஸ், ரஜஸ், என்னும் மூன்றையுந்தான் சொல்லியுள்ளது. ஆகவே ஸத்வ, ரஜஸ், தமஸ்-களொழிந்ததே நிர்க்குண மூர்த்தி. ஸத்வ, ரஜஸ் தமஸ்-கள் மாயாகுணங்கள். ஆதலால் நிர்க்குணமூர்த்தி யென்பது மாயாஸம்பந்தம் நீங்கியுள்ளது; அதாவது பாசபந்தமற்ற, அதாவதுமலர்தாக்கற்ற ஒன்று. நின்மலமாகிய பசுபதியே நிர்க்குணப்பொருள் என்று இதனால் விளங்கும். இப்பொருளேசிவம். இதனைவழிபடுபவரோ சைவர். அமங்கல குணங்களான ஸத்வ, ரஜஸ் தமஸ்-கள் நீங்கியநிர்மலமங்களமூர்த்தியே சிவன் என்பதை சிவன் என்னும் பெயரோ சொல்லும். ஆதலால் நித்யமங்கள மூர்த்தியின்பாதத்தை நித்யானந்த அபேக்ஷையால் தொழுங்காரணத்தாலேயே சைவர் என்னும்பெயரோ உண்டாயது. இப்போதும், புலால் உண்ணல், ஜீவஹிம்ஸை செய்தல் முதலிய குற்றங்களொழிந்தோர் சைவம் படிந்தவராகவே உலகவழக்குள்ள[illegible]? சைவர் என்னும் பெயர் அபஸவ்யமாகவும் வேதாந்[illegible]ன்னும் தமக்குத் தகாப்பெயரோஸவ்யமாகவும் எண்[illegible]வது ஸத்யமாகுல் பியவஹாரங்களில் தங்கள்மதம் சைவம் எனப்போடாது வேதாந்தமென்றுபோட ஏன் இசைவதில்லை? சிவன் நிர்க்குணமூர்த்தியான நாலாவதுபொருள்தான் என்பதை “சாந்தம் சிவ மத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே” என்னும்வேதவாக்கேகாட்டும்போது பேயர்கள் தலைநீட்டல் எங்கே? நாலாவது பொருள் சிவமாச கத்தால் வெளிப்பட்டு இருத்தலைக் கேட்டறியாப் பேதைகள் அந்த சிவஸம்பந்தமாதலாலேயே சைவமெனப் பெயருள்ள மதத்தை இகழ்வது ஏன்? ஓய் வேதாந்தி! உமது தெய்வமென்ன? என்று யாராவது கேட்டால் சிவனென்று பொய் சொல்லவாவது, அல்லது, தெய்வமே கிடையாதென்

று தமது நாஸ்திகத்தை வெளிப்படுத்தவாவது கூடுமேயொழிய வேறுகதியில்லாத விதவைகளும் நித்யஸுமங்கலமூர்த்தியை ஆராதிக்கும் சைவர்களைப் பரிஹஸிப்பதுகலியின் பலைபுதான். இந்த ஒருசுருதிமட்டுமேப்படியா? இன்னு மெவ்வளவோசுருதிவாக்யங்களும்அப்படியேசொல்லுகின்றன. "శివస్సివః" என்று சொல்லும் சுருதி சிவனல்லாத ஏனையநாயகருக்கு அபாவம்சொல்வதைமறப்பானேன். "శివ" என்னும் பிரயோகம் சிவனது பலநாமங்களிலும் வருவதுண்டாதலால் "ఏకఏవ రుద్రః" என்றும் "ఏకోదేవస్సర్వభూతేషుగూఢః" என்றும் பெறப்பட்டது. எவ்வளவோ பிறப்படைந்து விஷ்ணுத்வமெய்திய ஆன்மாவே விக்ரஹாராதனம் செய்தபோது அவனைநோக்க எவ்வளவோ அந்தஸ்தக்குறைந்த கேவலம் மனிதர்கள்தாமே விக்ரஹாராதனைத்வேஷம் செய்வது? "செத்துச் செத்துப்பிறப்பதேதேவெனப்—பக்தி செய்மனப்பாறைகட்கேற்குமோ—அத்தனென்றரியோடுபிரமனும் — துத்தியஞ்செயநின்றநற்சோதியே" என்று எம்பெரியோனால் துதிபெறும் நடனவள்ளலினிடத்து விபரீதம் வரலாமோ? பிர்ம்ஹம் வேறுசிவன்வேறு? பகவான்வேறுவராஹன்வேறு? ஈசுவரன்வேறு சிவன்வேறு? ஸ்வசக்தி ஆத்மகனுகிரஹம்கருணைவள்ளலொருவர்க்கே பகவதி, பிராம்ஹி, ஈசுவரி, எனனும் சக்தியாதலால் அவரொருவரோயல்லவோ பகவான், ஈசுவரன், பிர்ம்ஹம், என்னும் பெயர்க்குரியவர்? ஆதலால் சிவன் வேறுபோலவும், பிர்ம்ஹம்வேறுபோலவும், சிவோபாஸனை பிர்ம்ஹோபாஸனை யன்றுபோலவும், சிவ உபாஸனையைத்தவிர இதரஉபாஸனை மோக்ஷம்தருமென்றும் எண்ணுதிருக்கக்கடவர். இன்றேல், சிவம் என்னும் பெயரால் நான்காம் மூர்த்தி வேதத்தில்பிரதிபாதிக்கப்டுவதுபோல், அதற்கும் மேற்பட்ட ஐந்தாம்மூர்த்தியாய் பிர்ம்ஹம், என்னும்பெயரால் ஒன்றுவெளிப்படட்டுமே. அஃதில்லாததாலும் துரியமூர்த்தியே யாவரினுமேலானவராதலாலும், அவரோ நாம்சொன்னசுருதியின்படி நான்காம்மூர்த்தி யாத

லாலும் அவரைப் பிரதிபாதிப்பதுவே சைவமாதலாலும் சம்மே திரிகள் வாயடங்கிற்று. அவர்களுக்கு ருத்ரன் என்னும்பெயரே தமோட்டம் செய்வதால் அந்ததிவ்ய நாமத்தையோசிப்போம். ருத்ரநாமம் நிர்க்குணமூர்த்தியதல்லாவிடில் அதற்குயோக்ய தைச்குறைவுதான்; அப்போது சிவ, ஈச, மஹேச, நாமங்களைக் காட்டிலும் ருத்ரநாமம் தாழ்ந்ததுதான் என்றுசொல்லவேண் டிவரும். அப்படிச்சொல்வதின்முன் "ఏకఏవరుద్రో నద్వితీయాయ తస్థే"என்னும்வேதம் ருத்ர இதரமானதேவஸமூஹங்களை ஒது க்கிவிட்ட விபவத்தை நோக்கவேண்டும். ருத்ரநாமம்குணமூர் த்தியதல்லவென் றேற்படலால் துரியராகிய பசுபதியுடைய தே. குணமூர்த்தி யதாகவே இந்தப்பெயரைக்கொண்டால் "ஏவ" காரவிசேஷத்தால் நிர்க்குணப் பொருளுக்கு யோக்ய தை குன்றும். குணருத்ரரோ, பிரம்ஹா, விஷ்ணுக்களோடு சேர்பவர்தான். ஆகையால்மேல்சுருதியில் வந்த ருத்ரபதம் சிவபர மே ஒழிய குணருத்ர ப்ரதிபாதிநமன்று. இதில்லையானால் "ஏவ" சப்தம்வழிமறிக்கும். அப்போது "[illegible]" எ ன்ற சுருதிபொய்யாகும். அப்படியாவது, எப்போது மில்லையா கையால் மேல்சுருதியில் ருத்ரபதம் சிவபர[illegible]ன். நாமரூபங் களால் துரியமூர்த்தியோடு ஸமானமாகிய குணமூர்த்தியைச் சொல்வதன்று. ஆகையும்மேல்சுருதி துரியமூர்த்திக்கேபற்றிய து. பராசரபுராணத்தின் ஆரம்பத்தில்இத்தவிஷயத்தை நன்று ய்ச்சொல்வதால் நாம்விஸ்தரிப்பது அவசியமன்று. துரியமூர்த் திக்குநாமம்சொல்லும்போது நிர்க்குணத்வம்போகாதா? எனில் போகாது! போகாது!! நிர்க்குணம் என்பது மாயாஸம்பந் தமுக்குணசீக்கம் என்பதை மறக்கவேண்டாம். இன்னும் "పరాస్యశక్తిర్వివిధైవశ్రూయతే - స్వాభావికీజ్ఞానబలక్రియాచ" என்னும்சுருதிப்படி ஈசுவரனுக்கு சக்திகள் வெளிப்பட்டன. ஒருதச்சனுக்கு அவன் வேலைசெய்ய ஸாதகமாயிருப்பது அ வன்கையும், ஆயுதங்களும்தான். கையோ, தேகத்தோடுஸம் பந்தித்து தேஹத்தினின்றும் நீங்காத தாதாத்மிய சக்தி ,.

யிருக்கிறது. உளி, வாச்சி, முதலிய ஆயுதங்களோ தச்சன் கையாடும்வரையில் ஆடக்கூடியதும், கை ஓய்ந்ததும் தொழி லற்று அசேதனமாய்க்கிடப்பதுமான பரிக்ரஹசக்தியாயுள்ள து. இதுபோலவே சிவனுக்கும் தாதான்மியசக்தி, பரிக்ரஹசக் தி என இரண்டு. தாதான்மியசக்தியோ அக்கினியின்றும் பி ரிபடாச் சூடுபோல் சிவத்தோடு வேறறக்கலந்த சிவசக்தியா யுள்ளது. அதற்கே பார்வதியென்றும், அனுக்ரஹமென்றும், சித்சக்தியென்றும், கருணையென்றும், அம்மையென்றும், ஞா னமென்றும், பலபெயர்வழங்கும். பரிக்ரஹசக்தியோ தச்சன் கையுள ஆயுதம்போலும் சிவ இதரபதார்த்தமாய் சிவன்தொ ழிற்படுத்தினாலன்றி யாதொரு செய்கையுமற்றுள்ளது அத ற்கே, பிரக்ருதியென்றும், மாயாசக்தியென்றும், பின்னசக் தியென்றும் பாசமென்றும்பெயர். நாம்முந்திச்சொன்ன ஸ த்வ ரஜஸ்தமோகுணங்கள் இம்மாயாவிசிஷ்டமானவைதாம். சித்சக்தியோ இவற்றைக்கடந்தது. சிவன் இந்தசித்சக்தியே தடித்து, ஆன்மாக்களிடத்துள்ள அபரிமிதகருணையால் தேக ங்கொள்வர். சிவன்கொள்ளும் தேகமோமற்றையோர் தேகங் களைப்போல்லாது அனுக்ரஹார்த்தம் உடனேதோன்றுவ தும் உடனேமறைவது மாயிருக்கும். அதுவும் அந்தந்த ஆ ன்மாக்களின் பரிபாகத்துக்குத்தகுந்த தேகமாகவே இருக்கு ம். மாயாசக்தியினின்றும் தநுகரணபுவனபோகங்களை ஆ ன்மகோடிகளுக்கு அருளிவரும்பரமன் கொள்ளும் வேறுவே றுன ரூபங்களும், வேறுவேறுன இயற்கையும் சித்கனஸம் பந்தம்; ஆதலால், சிவனை ஜ்ஞானமூர்த்தி யென்றுவேதாதி கள் துதிக்கின்றன. ஜ்ஞானமாகிய சித்கனத்திருமேனி சிவ னதாகையால் அதற்கிட்டபெயர்கள் சித்கனஸம்பந்தமே தான். ஆதலால் நாமரூபவிகாரங்களை அனுக்ரஹார்த்தமாக வே பரமன்விஷயத்தில் கிரஹிக்கவேண்டியது. உருவம், அ ருவம், ரூபாரூபம் என்னும் மூன்றும் மாயாஸம்பந்தந்தான்; பந்தஸம்பந்ததேகிகளுக்கு அருவும் சிவனுருவமும் அருவ மும் உருவாருவமும் ஞானஸம்பந்தம்தான். ஆதலால் நீங்கு

ணமிர்ந்தியோ சிவன். அவனது பரியாயநாமங்களாகிய ருத்ரன் முதலியவும் நிர்க்குணப்ரதிபாதிதமே. நாம் விக்ரஹரூபியாக ஆராதிப்பதும் அந்தசித்கனரூபத்தைத்தான். நமக்கு மாயாதனமொன்றுதவிரவேறு தெரியாதாகையால் மாயாஸம்பந்த பதார்த்த விக்ரஹத்திலேயேதான் அந்தசித்கனருபத்தை ஆராதிக்கவேண்டும். இன்றும் விரிப்பது காலதாமஸம் செய்யுமாதலால் இத்துடன் நிறுத்துகிறோம். இதுகாறும் கூறியவ்றன நியாயவிஸ்தாரத்தால் நிர்க்குணமூர்த்தி சிவன் ருத்ரன், சங்கரன், சம்பு, இத்தியாதிபல நாமங்கொண்ட உமாகாந்தனென்றும், அந்நிர்க்குண மூர்த்திக்கே மாயாருபமான விக்ரஹத்தில் ஆராதனம் செய்ய வேண்டுமென்றும் அப்படிச்செய்ய மாராதனம் நிர்க்குணத்துக்கு ச்செய்யுமாராதனமே யென்றும், சைவர்கள்சொல்லும் பதிப்பொருளொன்றே மோக்ஷகாரணனென்றும், சைவேதரமான ஞானம், அவலஞானமென்றும், ஸித்தித்தது. இந்தவிஷயஸாரத்தை "ஶிவ ஏகோ த்யேய ஶிவங்கர: ஸர்வமன்யத் பரித்யஜ்ய" என்னும் வேதக்கோட்டையால்பாதுகாத்து வருவோமாதலாலித்துடன் நிறுத்துகிறோம்.

இதுகாறும், விக்ரஹாராதனைக்கு விரோதமான பலகக்ஷிகளேயும், நமக்குத்தெரிந்தவரையில் பெரும்பாலும் நீக்கினோம். இன்றும் அநேக ஆக்ஷேபணைகளும் உண்டு என்பதைநாம்மறுக்கவில்லை. அந்த ஆக்ஷேபணைகளை நமது புஸ்தகத்தைக் கொண்டேயும், இதுகூட இல்லாமலும், மறுத்துவிடலாமென்பது நிச்சயம். அப்படியிருந்தபோதிலும், நமதுபுஸ்தக உதவியில்லாமலே மறுக்கக்கூடிய ஆக்ஷேபணைகளில், சில சொல்லிக்காட்டுவோமாக.

(1) வேதத்தில் விக்ரஹத்தைத் தொழக்கூடாதென்றும், கடவுளுக்கு ருபமேகிடையாதென்றும்கூட சொல்லியிருக்கிறதே என்பார்கள்.

(2) ஐரோபாகண்டத்தில், லூத்தரின் காலம் முதல் இதுவரையில் விக்ரஹாராதனையின் அனுபவம் மட்டும்

கொண்டேவருகின்றதே! என்றும், பாதிரிமார் இந்தியாவுக்குவந்ததுமுதல், சாஸ்திரஞானங்கள், இந்தியாவிலதிகரித்து (!!) விக்ரஹாராதனையில் ஜனங்களுக்குள்ள பக்தி மட்டுப்படுகிறதே என்றும் சொல்லுவார்கள்.

(3) தியானம்செய்வோர் ஒரு ரூபத்தை எண்ணித்தான் காரியமாகவேண்டுமோ? இல்லையே; என்பார்கள்,

(4) விக்ரஹாராதனை செய்வது பிசகாயிராவிடில் ஐரோப்பியதேசத்தில், அநேகர் தமது உயிரையும் கொடுத்து, நெருப்பிலெரிவார்களா? என்பார்கள். இதில் கடைசியதுக்குமட்டும் இங்கு பதில்சொல்வோம். இதுபோன்ற கேள்வி கிறிஸ்தவ உபதேசி ஒருவர் நம்மைக்கேட்டார். அது, "எங்கள் மதம் பொய்யானால் அதற்காக இத்தனைபேர் பாடுபட்டு இறப்பாரா?" என்பதே. அதற்குத்தக்கபதில், நமது "மிலேச்ச மதக்குடாரி" என்னும் புத்தகத்தில் அதிகத்தெளிவானநடையில் எழுதியிருக்கிறோம். அதுபோன்றபதிலே இங்கும் கூறுவாம். ஒருவிஷயத்தை உண்மையென்று உண்மையாய்நம்புவோர், எப்போதும், தமது கொள்கையில் பின்னிடைவதேகிடையாது. ராஜ்யஸம்பந்தமான ஸாதாரணவிஷயங்களானாலும்ஸரி; மதஸம்பந்தமான கக்ஷிகளானாலும்ஸரி; பிரிவினைகளெப்போதும் உண்டு. ஒவ்வொருவகுப்பினரும் தாம்பிடித்தபிடியைவிடாது வெட்டுப்பழி, குத்துப்பழியாய் நிற்பது ஸஹஜ தர்மம். வீணாய்ப்போதுபோக்காமல், நாம்கண்ட ஒரு அனுபவத்தைக்கொண்டு, உண்மையறிவிப்பாம். நாமிந்தவூர், எஸ்·பி-ஜி· காலேஜ் என்னும்பாடசாலையில் படித்தகாலத்தில் ஒருநாள் ஸாயங்காலம் காவேரிக்குப்போனோம். அங்கு நமது நண்பர் ஒருவரும் வந்திருந்தார். அப்போது, கிருஷ்ணன் என்று ஒரு பரிசாரகன், ஊற்று இறைத்துக்கொண்டுநின்றவன், தன், நேசனாகிய, சுப்பிரமணியன் என்பவனைப்பார்த்து, "ஏலே சுப்பா ஏலே சுப்பா என்னடாலே [illegible] க்கூப்பிட வாயைமூடிக்கிண்டிருக்கே செதம்பரத்துக்

ரு, போரத்துக்கு, ரயில்சார்ஜ்என்னடா" என்ருன். சுப்பன் "ஒருரூபா" என்ருன். "ஏண்டாலே புளுகரோ, ஒன்தொழில் போரதில்லியே அன்னிக்கு ஆரோ ஒன்னேகாரூபா இன்னு ப்போலே இருச்சே" என்று கிருஷ்ணன் சொன்ஞன். உடனே சுப்பனுக்கு கோபம்வந்துவிட்டது. படபடப்பாய் ஏதோ சொன்ருன். உடனே கிருஷ்ணனுக்கும் கோபம்வர, இரண்டுபேரும் ஒருவனை யொருவன் அடித்து, திட்டி, மல்யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். நல்ல வேளையாய் ஒருசேவகன் அங்கேவந்து இரண்டுபேரையும் விலக்கிஞன். விலக்கினபின் உடம்பு முழுதும் புழுதியாயிருப்பதையும், தலைமயிர் அலங்கோலையாயிருப்பதையுங்கூட கவனிக்காமல் கிருஷ்ணன் "இருக்கட்டுண்டா பயலே விட்டேனேபாரு, ஒன்னெ ஒருநா இல்லாபோனு ஒருநா பொடம் வச்சுப்படரேன் பாரு" என்ருன். சுப்பனே, தலையைமுடிந்துகொண்டு "காமாட்டி! படுவா! ஒன்னேகாரூபாயா" என்று சொல்லிக் கொண்டே தன்னுடம்பைத் துடைத்துக்கொண்டான். அங்கிலேய அரசாக்ஷியல்லாது வேறு அரச[illegible]யின் கீழ் இவர்களிருந்திருந்தால் நிச்சயமாய் ஒரு [illegible]. இந்த இருவரும் ஸர்யந்துக்காகத்தான் உயிர் திருணமாக எண்ணிஞர்களோ? "ஒன்னேகாரூபாயா" இல்லாவிடில் கிர்ஷ்ணன், உயிரையும் விடுவாஞ? என்று யாராவது கேட்டால் நமது எதிரிகள் நகையாரோ! அதுபோலவேதான் இவர்கள் கேள்வியும் நகைப்புண்டாகியுமொன்று. இத்யாதி விஷயங்கள் அநேகமுள்ளவற்றை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். எவருவது உங்களை விக்ரஹாராதனத்துக்கு விரோதமான தர்க்கத்துக்கழைத்தால் நாங்களின்ன காரணங்களால் விக்ரஹாராதனம் செய்கிருமென்று தெரிந்துகொண்டு, பிறகு நாங்கள்செய்வது பிசகோ, ஸரித்தாஞே

சபாசி, என்று பதில்சொல்லுங்கள். நாம் இந்தவிஷயத்தை ப்பற்றி அநேகம் கிராமங்களில் முதியோரோடுவாதம் செய் திருக்கிறோம். அநேகமாய் எல்லாரும் சொல்லுகிறபதிலென் னவென்றால், "கடவுள் எங்கள் இருதயத்தை நன்றாய் அறி வார். நாங்கள் ஆராதிக்கும்போது எங்கள் மனதுருகுவது அவருக்குத்தெரியாமற்போகாது. இதையறிந்தும், அவர் அ னுக்கிரஹம் செய்யாமல், கோபிப்பாரானால், அவர், எப்படிச் செய்தாலுந்தான் ஏன்கோபிக்கமாட்டார்? நான் என்ன லஞ் சம்வாங்குபவனா? உங்களது ஸ்தோத்ரமாகிய லஞ்சத்துக்காக த்தானா நான் உங்களுக்கு நன்மைசெய்கிறேன்? என்று கட வுள் எண்ணிகோபிப்பாராகையால் தெய்வாராதனமே பண் ணவேண்டிய அவசியமில்லை என்றாகுமே அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? நாங்கள் விக்ரஹத்தண்டை நின்று ஸ்தோத்ரம் செய்யும்போது, எங்கள் மனது, நீங்களப்படிச் செய்யாமல் ஸ்தோத்திரம் செய்யும்போது உங்கள் மனதுரு குவதை விடக் குறைந்து உருகுமென்றுசொல்லக்கூடியது யார்? அன்ன தம ம்பந்தமாகடவுள் அருள்வாரா? அல்லது அன் புசெய்யும் விதததை கண்டு அருள்வாரா?" என்பதே. இதில் ஒரு நல்ல கேள்வியிருக்கிறது. அது நம்முடையபுத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் ஸம்பந்தம் பெற்றதாகையால் அங்கு கண்டுகொள்க.

இதுவரையில்விக்ரஹாராதனையின் பெருமையைப் பலவி மா யெடுத்துக்காட்டி இடையிடையே கிறிஸ்தவர் முதலி வருக்கும் ஸன்மானமும் செய்தோம். உங்களை விக் ம் செய்யக்கூடாதென்று மயக்குபவர் விசேஷ வர்களில் ஒருபாலாரான புரோடஸ்டாண்டா வேஷதாரிப் பூனைகளை ஒழிய தெய்வ